KALKI 2.10.88 ரூ. 2.


கல்கி

இலவச
இணைப்பைக்
கேட்டு
வாங்குங்கள்.



செழியன்:

தி.மு.க. மீது என்ன கோபம்?



(புதிதாய்க் கார் ஓட்டக் கற்றுக் கொள்ளும் மனைவி, கணவனிடம்): "எத்தனை தடவை 'ஹாரன்' அடிச்சாலும், நகரவே மாட்டேங்குதுங்க..."

கணவன்: "எது...?"

மனைவி: "சாலைக் குழிதான்!"

— ஆர். வசந்தகுமார்.



"உங்க மூத்த பையனை வக்கீலுக்குப் படிக்க வெச்சீங்களே, நல்லாத் தொழில் செய்யறானா...?"

"முதல் கேஸா, என் சொத்துல அவனுக்குச் சேர வேண்டியதைப் பிரிச்சுத் தரச்சொல்லி நோட்டீஸ் அனுப்பியிருக்கான்...!"

— சீர்காழி ஸ்ரீராம்.



"எதிர் வீட்டுக்குப் புதுசா குடி வரப் போகிற குடும்பத்தில் அழகா வயசுப் பெண் ஏதாவது இருக்கா?"

"ஆமாம்! ஏன் கேட்கிறீங்க?"

"அவங்க லாரியிலிருந்து சாமான்கள் இறக்க நம்ம பையன் உதவிக்கிட்டிருக்கானே...?"

— மணியன் தர்மலிங்கம்.

ஹா ஹா ஹா...

"என்னங்க இது? சட்டசபை வாசலிலே, வாழைமரம் கட்டியிருக்கு?"

"அதுவா? கல்யாண வீடு செட்டப்பு இருந்தாத்தான், தலைவருக்குப் பேசவே மூடு வருதாம்...!"

— ஆர். வசந்தகுமார்.



மகன்: அம்மா, அப்பாகிட்டே சொல்லி, எனக்கொரு 'ஸ்கூட்டர்' வாங்கித் தாயேன்...

அம்மா: ஏங்க... பையன் ரொம்ப ஆசைப்படறான். சீக்கிரம் 'பொண்ணு'ப் பாருங்களேன்...!

— சரடிகுணம் ஜெயா பாரதிப்ரியா



மனம் திறந்து பேசுகிறார் செழியன்



"தி.மு.க. மீது என்ன கோபம்?"

கேள்வி: தமிழக ஜனதாவுக்கு மக்களிடையே உள்ள செல்வாக்கு பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

இரா. செழியன்: தமிழகத்தில் ஜனதா ஒரு குறிப்பிடத்தக்க பாரம்பரியமும் மக்களிடையே செல்வாக்கும் பெற்ற கட்சியாகவே திகழ்ந்து வருகிறது. கட்சியிலுள்ள பெரும்பாலோர் காமராஜ் காலத்திலிருந்து வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். இப்போதைய புள்ளி விவரப்படி ஜனதாவில் மூன்று லட்சத்து இருபத்தைந்தாயிரம் உறுப்பினர்கள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் ஜனதா ஆட்சிக்கு வந்து விடும் என்ற நம்பிக்கையில் கட்சியில் இருக்கவில்லை. கொள்கைகளுக்காகவே இருக்கிறார்கள். கடந்த தேர்தல்களில் ஜனதாவுக்குப் பெரும்பாலான வெற்றிகள் கிடைக்கவில்லையென்றாலும் ஓர் அடிப்படையுள்ள கட்சி — கொள்கைகளுக்காகத் தொடர்ந்து போராடுகிற கட்சி — நல்ல கட்சி என்கிற முறையில் தமிழக மக்களின் கவனத்தை ஜனதா ஈர்த்திருக்கிறது.

கேள்வி: ஆக, தமிழகத்தில் ஜனதாவின் வளர்ச்சி கொஞ்சம் கொஞ்சமாக அதிகரித்திருக்கிறது என்கிறீர்கள்...

செழியன்: ஆம்; வளர்ந்திருக்கிறது. போலித்தனமான வளர்ச்சியல்ல; நம்பிக்கையுள்ள வளர்ச்சி.

கேள்வி: இருப்பினும் தனியாக நின்று தேர்தலில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை ஜனதாவுக்கு இல்லையா?

செழியன்: மக்களிடையே ஜனதாக் கட்சி ஒரு நல்ல கட்சி என்ற எண்ணம் இருக்கிற அளவுக்கு ஜனதாக் கட்சி வெற்றி வாய்ப்பைப் பெறுகிற கட்சி என்ற எண்ணம் இல்லை என்பது உண்மையே. அதனால்தான் ஜனமோர்ச்சா, லோக்தள் போன்ற கட்சிகளோடு இணைந்து நின்றால் மக்களிடையே ஒரு நல்ல மாற்றத்தைத் தர முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்த முடியும். வெற்றி பெறவும் முடியும்.

கேள்வி: நீங்கள் அகில இந்திய அளவி

லான வெற்றி வாய்ப்பைச் சொல்கிறீர்களா அல்லது தமிழகத்தில் சொல்கிறீர்களா?

செழியன்: தேசியக் கட்சிகளைப் பொருத்தவரை தேசிய அளவில் ஏற்படுகிற மாறுதல்கள் மாநிலங்களிலும் நிச்சயம் பாதிக்கும். தமிழகத்தில் ஜனதாக் கட்சி எந்த அளவுக்குப் பலமானதாக இருந்தாலும் ஜனதா ஆட்சிக்கு வந்தால் ஒற்றுமையாக இருக்க மாட்டார்கள் என்ற எண்ணம் அகில இந்திய அளவில் மக்களிடையே உருவாகி விட்டால் அது மாநிலத்திலும் பாதிக்கும். ஆனால் மற்ற கட்சிகளோடு ஜனதா இணைந்து நின்றால் ஒரு நல்ல நம்பிக்கையை மக்களிடையே உருவாக்க முடியும் என்று நம்புகிறேன்.

கேள்வி: தேசிய அளவிலும் சரி, மாநில அளவிலும் சரி ஜனதாக் கட்சி மேல் மக்களுக்குள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்திக் கொள்வதற்கான நடவடிக்கைகள் இல்லையே! 77—ல் எந்த வேகத்தில் ஆட்சியைப் பிடித்ததோ அதே வேகத்தில் கோஷ்டிப் பூசலால் இழந்த பிறகும் அதிலிருந்து பாடம் கற்றுக் கொண்டு செயல்படுவதாகத் தெரியவில்லையே?

செழியன்: பாடம் கற்றுக் கொண்டிருப்பதாகவே கருதுகிறேன். இல்லையெனில் மத்தியில் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொண்டு ஆட்சியை இழந்தாலும் அதன் பிறகு சிறுபான்மை பலத்தைப் பெற்றுக் கர்நாடகத்தில் ஆட்சியைப் பிடித்த ஜனதா இன்று பெரும்பான்மை பலத்தைப் பெற்றிருக்க முடியுமா? அண்மையில் கூட கர்நாடக ஜனதா ஆட்சிக்கு வெளியிலிருந்தும் உள்ளிருந்தும் வந்த எதிர்ப்புகளையெல்லாம் சமாளித்து ஆட்சியை நீடிக்கச் செய்ய முடியுமா?

கேள்வி: அண்மையில் சென்னையில் நடந்த ஜனதாக் கட்சிக் கூட்டத்தில் தாம்பன் தாமஸ் அடிபட்டதும் வேஷ்டியைக் கூட இழந்து நின்றதும் ஜனதாக் கட்சியினர் எல்லா இடங்களிலும் நாகரிகமாக நடந்து கொள்கிறவர்கள் என்ற எண்ணத்தைத் தவிடு பொடியாக்கி விட்டதே?

செழியன்: அன்று ஒருவேளை அஜீத் சிங் கூட்டத்திற்கு வந்திருந்தால் அந்த விரும்பத்தகாத நிகழ்ச்சி நடந்திருக்காது என்று நம்புகிறேன். அவர் சென்னையிலேயே இருந்தும் கூட்டத்திற்கு வராமல் இருந்ததென்பது சிலரை உணர்ச்சிவசப்படச் செய்து விட்டது என்றே கருதுகிறேன். இருப்பினும் நடந்த நிகழ்ச்சி வருந்தத்தக்கது; கண்டிக்கத் தக்கது. அதற்கு எந்தவிதமான சமாதானமும் கூற முடியாது. அதனால்தான் அன்றைய தினம் நான் உடனடியாக எனது ராஜினாமாவை எழுதிக் கொடுத்தேன்.

கேள்வி: இதே போல் முன்பு கட்சிக் கூட்டத்தில் நடந்த கோஷ்டி சண்டையில் கலிவரதன் தாக்கப்பட்ட போது நீங்கள் கண்டிக்கவில்லையே, ஏன்?



''கலைஞர் என்னை 'இழிபிறவி' என்றெல்லாம் வர்ணித்திருக்கிறார். இழிபிறவி என்றால் என்ன அர்த்தம்?''

செழியன்: நான் அப்போது டெல்லியில் இருந்தேன். அன்று நடந்த சண்டை கொலை முயற்சி அளவுக்குச் சென்று விட்டதாகச் சொன்னார்கள். நான் உடனே சென்னைக்குப் புறப்பட்டு வருவதாகச் சொல்லி வந்தேன். வந்த பிறகு பார்த்தால் நான் தூண்டி விட்டுத்தான் கலிவரதன் தாக்கப்பட்டிருக்கிறார் என்கிற மாதிரி பத்திரிகைகளில் அவர்கள் அறிக்கை விட்டிருப்பதைக் கண்டு வேதனையடைந்தேன். மறுதரப்பினரையும் விசாரித்த போது அவர்களில் வெள்ளையன் என்பவர் அடிபட்டிருப்பதாகச் சொன்னார்கள். ஆக சண்டை நடந்திருக்கிறது. அதற்கு யார் பொறுப்பு என்பதைக் கண்டறிய விசாரிக்கச் சொன்னேன். காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னேன். நான் சும்மா இருக்கவில்லை.

கேள்வி: இப்போது அகில இந்திய ஜனதாவில் அஜீத்சிங் வந்து சேர்ந்திருப்பது — செயல் முறைத் தலைவராகி இருப்பது முறையானதல்ல என்று சொல்கிறீர்கள். அப்போதே இதைச் சொன்னதாகத் தெரியவில்லையே?

செழியன்: இது உள் கட்சி விஷயம் என்பதால் வெளிப்படையாகச் சொல்லவில்லை. ஆயினும் இது முறையானதல்ல என்று கடிதம் எழுதியிருக்கிறேன்.

கேள்வி: அஜீத்சிங்கை நீங்கள் எதிர்ப்பதற்கு என்ன காரணம்?

செழியன்: பத்திரிகைகளில் முதலில் வந்த செய்திகளின்படியும் அதன் பிறகு சந்திரசேகர் எங்களிடம் மேலோட்டமாகச் சொன்ன போதும், இதுபோல் அஜீத்சிங்



எங்களோடு வந்து இணைகிறார் என்றும் அவரைக் கட்சியின் தலைவராகக் கொண்டு வரத் தாம் கமிட் செய்து கொண்டிருப்பதாகவும் சொன்னார். அது எப்படி நீங்கள் கட்சியின் அனுமதியின்றிக் கமிட் செய்ய முடியும் என்று கேட்டோம். கட்சித் தலைவரைக் கட்சியின் தேசியப் பொதுக்குழுவல்லவா கூடி முடிவு செய்ய வேண்டும் என்றும் எடுத்துச் சொன்னோம். இருப்பினும் ஒரு தாற்காலிக ஏற்பாடாக அஜீத்சிங் ஜனதாக் கட்சியின் செயல்முறைத் தலைவரானதென்பது எதிர்க்கட்சிகளின் இணைப்புக்கு ஓர் ஆரம்பமாக அமையலாம் என்று சமாதானம் சொல்லப்பட்டதால் நாங்கள் பேசாமல் இருந்தோம். ஆனால், இப்போதோ கட்சியின் அதிகாரபூர்வமான தேசியப் பொதுக் குழுவின் அங்கீகாரத்தைப் பெறாமல் அவரே தலைவராக முயற்சி செய்வதும், அவரே மற்ற கட்சிகளின் இணைப்புக்குத் தடையாக இருப்பதாகத் தெரிவதாலும் — இவற்றோடு கர்நாடக அமைச்சரவைக்கு எதிராக இருந்தவர்களுக்கு அஜீத்சிங் ஆதரவு தந்ததென்பதும் எங்களுக்கு மிகவும் அதிர்ச்சியளித்தது. அதனால்தான் அஜீத்சிங்கின் வருகை பற்றி நாங்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

கேள்வி: அஜீத்சிங்குக்குத் தனிப்பட்ட முறையில் சந்திரசேகர் கமிட் செய்ய வேண்டிய அவசியமென்ன?

செழியன்: அஜீத்சிங்கைத் தலைவராக்குவதென்பது கட்சிக்கு நல்லதென்று சந்திரசேகர் தனிப்பட்ட முறையில் எண்ணியிருக்கலாம். ஆயினும் எந்தவிதமான பிரதிபலனும் எதிர்பாராமல் கட்சிக்கு வந்து, கட்சிகளின் சட்ட திட்டங்களையும் கொள்கைகளையும் ஏற்றுக் கொண்டிருக்கிற மற்றவர்களின் ஒப்புதலைப் பெற வேண்டாமா? இல்லையென்றால் உள் கட்சி ஜனநாயகம் ஏது? அதைத்தான் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

கேள்வி: வருகிற 30—ம் தேதி ஜனதாக் கட்சியின் தேசியப் பொதுக் குழு கூடப் போவதாக நீங்களும் ஹெக்டேவும் அறிக்கை விட்டிருக்கிறீர்கள்.* இப்படி நீங்கள் கூட்டுகிற இந்தக் கூட்டம் ஜனதாவில் புதிதாக ஒரு பிளவை ஏற்படுத்தத்தான் என்று சொல்லலாமா?

செழியன்: நிச்சயமாக இல்லை. அஜீத்சிங்கின் கட்சி ஜனதாவோடு இணைந்து விட்டதாகச் சொல்லப்பட்டாலும் உத்திரப் பிரதேசம், பீகார் மாநிலங்களில் இன்னமும் அது தனித்துத்தான் இயங்கிக் கொண்டிருக்கிறது. இந் நிலையில் அஜீத்சிங் ஒரே சமயத்தில் இரண்டு கட்சிகளுக்குத் தலைவராக இருக்கிறார். நாங்களோ இருக்கிற நிலைகளையும் இழந்து விட்டு நிற்கிறோம்! இவற்றையெல்லாம் தேசியப் பொதுக் குழுவைக் கூட்டித் தெளிவுபடுத்திக் கொள்வதுதான் எங்கள் நோக்கமே தவிர, பிளவு படுத்துவதல்ல. ஒருவேளை பிளவுபடுத்துவதென்பது அவர்களின் நோக்கமாக வேண்டுமானால் இருக்கலாம்!

கேள்வி: தமிழக ஜனதாவைப் பொருத்த வரை ராஜீவ் எதிர்ப்பு என்பது எந்த அளவுக்கு இருக்கிறது? எதற்காக இதைக் கேட்கிறோமென்றால் உங்கள் கட்சியைச் சேர்ந்த முத்துகிருஷ்ணன் என்பவர் திருபர் கூட்டமொன்றில் பேசிய போது 'ராஜீவின் மேலுள்ள ஊழல் நிரூபிக்கப்படவில்லை; ஆனால் தி.மு.க.வின் மேலுள்ள ஊழல் நிரூபிக்கப்பட்டுள்ளது' என்று பேசியிருக்கிறார். இது ராஜீவ் எதிர்ப்பைப் பலஹீனப் படுத்துவது போல் இருக்கிறதே?

செழியன்: அப்படியல்ல. ராஜீவின் மேலுள்ள ஊழல், அவர் தனிப்பட்ட முறையில் செய்ததாக நிரூபிக்கப்படாவிட்டாலும் அவரது அரசில் ஊழல் நடந்திருக்கிறது என்பதை மக்கள் சந்தேகத்திற்கிடமில்லாமல் நம்புகிற அளவுக்கு விஷயங்கள் வெளியாகியிருக்கின்றன. 'ராஜீவ் பக்காத் திருடர் என்றால் இவர் அதைவிடப் பெரிய ஆள்' என்கிற அர்த்தத்தில்தான் அவர் சொல்லியிருப்பார். அதற்காக ராஜீவின் ஊழல் மன்னிக்கப்பட்டதாகவோ ஏற்றுக் கொள்ளப்பட்டதாகவோ அர்த்தமாகி விடாது.

கேள்வி: ஹெக்டே பேசும் போது தி.மு.க.வின் மேலுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படவில்லை என்றுதானே குறிப்பிட்டிருக்கிறார்!

செழியன்: அப்படியல்ல. அதோடு இதை ஒப்பிடும் போது அளவிலும் சரி மதிப்பிலும் சரி மிகவும் குறைவு என்றுதான் சொல்லியிருக்கிறார்.

கேள்வி: ஹெக்டே மீது கூட ஊழல் குற்றச்சாட்டுக்கள் கூறப்பட்டிருக்கின்றன!

செழியன்: நாளைக்கு என் பேரில் கூட ஒருவர் ஊழல் குற்றச்சாட்டுக்கள் சொல்லலாம். ஆனால் அதை மக்கள் எந்த அளவுக்கு நம்புகிறார்கள் என்பதுதான் விஷயம்.

கேள்வி: நீங்களும் ராஜீவை எதிர்க்கிறீர்கள். தி.மு.க.வும் எதிர்க்கிறது. இந்நிலையில் தேசிய அளவில் உள்ள எதிர்க்கட்சி முன்னணியில் தி.மு.க. இருப்பதை ஏன் நீங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டேன் என்கிறீர்கள்? தி.மு.க.வின் மீது அப்படியென்ன கோபம் உங்களுக்கு?

செழியன்: கோபம் ஏதும் காரணமல்ல. முதல் காரணம், தமிழகத்தில் இ. காங்கிரஸை எதிர்ப்பது தி.மு.க. மட்டுமல்ல;

* இருதரப்பினரும் விட்டுக் கொடுக்க, இக்கூட்டம் ரத்து செய்யப்பட்டு, ஒற்றுமைக்கான வாய்ப்புக்கள் பிரகாசமடைந்துள்ளன.



daCunha/TT/4/88 TAM

போலீஸ் செய்தி

திகில், திகைப்பு, மர்மம் மற்றும் பல்வேறு உண்மை சம்பவங்களை தாங்கி வரும் துப்பறியும் இதழ்




உங்களை மனதில்கொண்டு உங்களுக்காகவே உருவாக்கப்படுகிறது. இது நிச்சயமாக நீங்கள் விரும்பிப் படிக்கும் மாத இதழாக அமையும்

இது ஒரு சஹாரா
காவல் சத்யா வெளியீடு
ஏஜென்சி விபரங்களுக்கு:
10, இப்ராஹிம் சேட் தெரு, சென்னை-79



நெடுமாறன் கட்சி, சிவாஜி கட்சி ஆகியவையும் இருக்கின்றன. இவைகளையும் முன்னணியில் சேர்த்துக் கொள்ள முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்பது. அடுத்ததாக அண்மைக் காலத்தில் தி.மு.க. தலைவரின் போக்கு தமிழ்நாடு ஜனதாவை ஒதுக்கி விட்டுச் செல்வதாகத்தான் இருக்கிறது. இது தனிப்பட்ட முறையில் எனக்கும் கலைஞருக்கும் இடையிலான பிரச்னை அல்ல. 84— தேர்தலில் நாங்கள் தி.மு.க.வுடன் கூட்டு வைத்துக் கொண்டு போட்டியிட்ட போது, நாங்கள் கேட்காத இடங்களையே எங்களுக்குப் பெரும்பாலும் கொடுத்தார்கள். அப்படிக் கொடுக்கப்பட்ட இடங்களில் ஒன்றுதான் கும்பகோணம். அதிலும் எங்களுக்குப் போட்டி வேட்பாளராக — கூட்டணி முறையையே மீறி — தி.மு.க. வேட்பாளர் போட்டியிட்டார். அப்படிப்பட்ட மாவட்ட அமைப்புகள் மீது நியாயப்படி தி.மு.க. நடவடிக்கை எடுத்திருக்க வேண்டாமா? இதுவரை செய்யவில்லை. கூட்டணியை மீறி வேலை செய்த இரண்டொரு ஜனதா தொண்டர்கள் மீது நாங்கள் நடவடிக்கை எடுத்தோம். அவர்கள் ஏன் எடுக்கவில்லை? அந்த அவநம்பிக்கையின் காரணமாகத்தான் அடுத்து வந்த பஞ்சாயத்துத் தேர்தலில் நாங்கள் கூட்டை விலக்கிக் கொண்டோம். அதிலும் ஒரு சம்பவம் சொல்கிறேன். கன்னியாகுமரியிலுள்ள கிள்ளியூர்ப் பஞ்சாயத்து யூனியன் தலைவராக ஜனதாக் கட்சி வேட்பாளர் தனித்துப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். பதினைந்து பேர் உள்ள பஞ்சாயத்து யூனியன் சபையில் ஏழு பேர் ஜனதா. இரண்டு தி.மு.க. இரண்டு இ. காங்கிரஸ், ஒரு அ.தி.மு.க., ஒரு சி.பி.எம்., ஒரு இந்து முன்னணி, ஒரு சுயேட்சை என்று மற்றவர்கள் சிதறிக் கிடந்தார்கள். இந்நிலையில் தி.மு.க. எப்படி துணைத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற முடியும்? ஆனால் அங்கு மற்றவர்களின் ஆதரவோடு இ. காங்கிரஸ் ஆதரவையும், பெற்றுப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்கள்! அதே போல் பெங்களூர் மாநகராட்சித் தேர்தலிலும் ஜனதாவுக்கு எதிராக அங்குள்ள தி.மு.க., அ.தி.மு.க.வோடு ஓர் உடன்பாடு வைத்துக் கொண்டு செயல்பட்டது. ஆக, தி.மு.க.வின் இ. காங்கிரஸ் எதிர்ப்பு என்பது சந்தர்ப்பவாத எதிர்ப்பே தவிர வேறு அல்ல என்கிற முடிவுக்குத் தமிழக ஜனதாத் தொண்டர்கள் வந்து விட்டார்கள். அதோடு கடந்த 86—ல் நடந்த ராஜ்ய சபைத் தேர்தலில் தங்களிடமிருந்த அதிக வோட்டு ஒன்றைத் தி.மு.க. பழனியாண்டிக்குக் கொடுத்தால்தான் அவர் வெற்றி பெற்றார். இதைக் கலைஞரே சொல்லியிருக்கிறார். ஆக, சந்தர்ப்பம் கிடைத்தால் இ. காங்கிரஸ் எதிர்ப்பைத் தி.முக. கை விட்டு விடும் என்பது தெளிவாகிறது. மேலும் என்னைக் கலைஞர் 'இழிபிறவி' என்றெல்லாம் வர்ணித்திருக்கிறார்.



"கட்சிப் பொதுக்குழுவில் நான் பேசுகிற போது எதிர்க்கோஷ்டியினர் என் வேஷ்டியை அவிழ்த்து விடாமல் தடுக்கத்தான் இந்த முன்னேற்பாடு."

— சுதர்ஸன்.

இழிபிறவி என்றால் என்ன அர்த்தம்? என் தாயின் கற்புக்கே களங்கம் விளைவிக்கிற விஷயம்! அப்படியிருந்தும் நான் எதுவும் பேசவில்லை. நாற்பதாண்டுகள் நம்மோடு பழகிய ஒருவர் ஏதோ ஒரு விநாடி ஆத்திரப்பட்டுப் பேசிவிட்டார் என்று நினைத்துச் சமாதானமடைந்து கொண்டேன். இருப்பினும் இதெல்லாம் தொண்டர்கள் மத்தியில் ஒரு கசப்புணர்வை வளர்த்து விட்டது. மேலும் தேசிய முன்னணியின் நோக்கமே இ. காங்கிரஸுக்கு எதிரான வாக்குகளை ஒன்று திரட்டுவதுதான் என்றால் தமிழகத்தில் இ. காங்கிரஸுக்கு எதிராகத் தி.மு.க. தவிர மற்ற கட்சிகளே இல்லையா? அவைகளைச் சேர்த்துக் கொள்வது பற்றி ஏன் சிந்திக்கவில்லை என்பதும் கேள்வி.

கேள்வி: தற்போது தமிழகத்தில் இ. காங்கிரஸுக்கு எதிராக உள்ள கட்சிகளில் தி.மு.க. பெரிய கட்சி இல்லையா?

செழியன்: உண்மைதான். ஒப்புக் கொள்கிறேன். உண்மையில் தி.மு.க. இ. காங்கிரஸுக்கு எதிராக நிற்கிறது என்றால் மற்ற கட்சிகளை ஏன் புறக்கணிக்க வேண்டும்? தேசிய முன்னணி பற்றிய அறிவிப்பு வந்தவுடனேயே 'தமிழகத்தில் தி.மு.க., இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகள், முஸ்லீம் லீக் ஆகியவைதான் கூட்டு. இனி புதிய கட்சிகளுக்கு இடமில்லை' என்று முடிவாகக் கலைஞர் அறிவிக்க வேண்டிய அவசியம் என்ன? ஆக, தேசிய முன்னணியில் தி.மு.க. என்பது இ. காங்கிரஸை எதிர்க்க என்பதை விடத் தனது வெற்றி வாய்ப்புக்கான சந்தர்ப்பவாதத்திற்குத்தான் என்கிற சந்தேகமே உருவாகிறது.

கேள்வி: தேசிய முன்னணியில் தி.மு.க.வைச் சேர்ப்பது பற்றிய பார்லிமெண்டரி போர்டு கூட்டத்தில் நீங்களும்தானே இருந்தீர்கள்?

செழியன்: அப்போதே நான் தமிழக ஜனதாக் கட்சித் தொண்டர்களுக்கும் தி.மு.க.வுக்கும் இடையில் ஒரு கசப்புணர்வு தோன்றியிருக்கிறது; அந்தக் கசப்புணர்வைப் போக்குவதற்கு முன்பு இதைச் செய்யக் கூடாது என்று சொன்னேன். அந்தக் கசப்புணர்வுதான் இன்றைக்குப் பெரும்பாலான ஜனதாத் தொண்டர்கள் தி.மு.க. கூட்டை எதிர்ப்பதற்குக் காரணமே தவிர

நானல்ல. அதற்குத் தனிப்பட்ட முறையில் நான்தான் காரணமென்று டெல்லியிலுள்ள கட்சி மேலிடம் கருதினால் கட்சியின் நலன் கருதி நான் எனது தலைவர் பதவியை அப்போதே விட்டு விடுவதாகவும் சொல்லியிருக்கிறேன்.

கேள்வி: ஆக, தி.மு.க. கூட்டை தமிழக ஜனதா எதிர்ப்பதற்குக் காரணம், தி.மு.க. வின் மேலுள்ள ஊழல் குற்றச்சாட்டுக்கள் தான் என்பதைவிட, கடந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிகளின் விளைவான கசப்புணர்வுதான் என்கிறீர்களா?

செழியன்: நான் சொல்வதெல்லாம் தமிழக ஜனதாத் தொண்டர்களின் — பெரும்பான்மையான தொண்டர்களின் கருத்துக்களை அறிந்து செயல்பட வேண்டும் என்பதுதான். ஏனெனில் தொண்டர்களின் கருத்துக்கு எதிரான கருத்துக்களைத் தலைவர்கள் தொண்டர்கள் மீது திணித்தால் அது எந்த விதத்திலும் நியாயமாக இருக்க முடியாது. ஜனநாயகமும் ஆகாது.

கேள்வி: ஆக, அந்தக் கசப்புணர்வைப் போக்கி விட்டால் பிரச்னை இல்லை என்கிறீர்கள்....

செழியன்: ஆம். ஆனால் அந்தக் கசப்புணர்வை அத்தனை சுலபமாகப் போக்கி விட முடியாதபடிதான் அண்மையில் கலைஞர் வெளியிட்ட அறிக்கைகள் இருக்கின்றன. தேசிய அளவிலான ஜனதாவோடுதான் தி.மு.க.வின் கூட்டணியென்றும் தமிழகத்தில் அல்ல என்றும் அவர் திட்டவட்டமாக அறிவித்திருப்பது தமிழக ஜனதாத் தொண்டர்களையே இழிவுபடுத்துவதாக இருக்கிறது. அதனால் இத்தனை இழிவுக்குப் பிறகும் தி.மு.க.வோடு ஓரணியில் இருக்க வேண்டுமா என்று தொண்டர்கள் கேட்கிறார்கள். அப்படியே இந்த இழிவுகளைத் தாங்கிக் கொண்டாலும் பாதிக்குப் பாதி இடங்களையா விட்டுக் கொடுக்கப் போகிறார்கள்? மிகக் குறைந்த இடங்களையே — அதுவும் அவர்களுக்கு வெற்றி வாய்ப்பு இல்லாத இடங்களையே தரப் போகிறார்கள். இந் நிலையில் நாம் ஏன் தனித்தே நிற்கக் கூடாது என்பதுதான் தொண்டர்களின் கேள்வி. அதில் நியாயமிருக்கிறது. அந்த நியாயத்தை அகில இந்திய ஜனதா புரிந்து கொண்டு செயல்பட வேண்டும் என்கிறார்கள். நானும் அதையே தான் சொல்கிறேன்.

கேள்வி: மொழி விஷயத்தில் ஜனதாவின் நிலை என்ன?

செழியன்: மும்மொழித் திட்டத்தை ஜனதா ஏற்றுக் கொள்கிறது. இப்போது மும்மொழித் திட்டம் சரிவரச் செயல்படுத்தப்படவில்லை என்பதையும் உணர்ந்திருக்கிறோம். இந்திதான் ஆட்சி மொழி என்று அரசியல் சட்டத்தில் சொல்லப்பட்டிருந்தாலும் கூட, அதை மற்றவர்கள் மீது திணிப்பது கூடாது. எல்லா மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும். தி.மு.க.வே ஏற்றுக் கொண்டிருக்கிற 'இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலமே தொடர்பு மொழியாக நீடிக்கும்' என்கிற நேருவின் உறுதிமொழியில் கூட இந்திக்குத்தான் முதலிடம் தரப்பட்டிருக்கிறது. என்னைப் பொருத்தவரை ஆங்கிலத்தை அந்நிய மொழியாகக் கருதவில்லை. மேகாலயா, நாகாலாந்து மாநிலங்களில் அரசு மொழியாக ஆங்கிலம்தான் இருக்கிறது. இந்நிலையில் ஆங்கிலத்தையும் நமது மொழிகளில் ஒன்றாகவே அங்கீகரிப்பது தான் நல்லது.

கேள்வி: தமிழக ஜனதாவை இ. காங்கிரஸ் இரண்டாகப் பிளக்க முயற்சி செய்கிறது. அதன் விளைவுதான் இந்தச் சண்டைகள் என்று சொல்லப்படுகிறதே?

செழியன்: இது சுத்த அபத்தமான குற்றச்சாட்டு.

பேட்டி: **இளங்கோவன்.**

அட்டை வண்ணப்படம், புகைப்படங்கள்: **கே. வி. ஆனந்த்**

அடுத்த இதழில்...

ரேசா:

ஏழைமக்கு மருந்து தரும் டாக்டர்கள்...

— வித்தியாசமான கவர்ஸ்டோரி



அடுத்த இலவச இணைப்பு 16.10.88 கல்கி இதழுடன் கிடைக்கும்...

சின்னச் சின்னச் செய்திகள்:

காதல் + மறியல் = கல்யாணம்



● ஒரிசாவில் இருக்கிறது குல்தா எனும் கிராமம். இங்கே, பத்தொன்பது வயதான சபிதாவை, வசதி படைத்த குடும்பத்தைச் சேர்ந்த சோம்நாத் என்ற இளைஞர் மூன்று வருடங்களாகக் காதலித்தார். சபிதா கரு வுற்றாளோ இல்லையோ, பயந்து போய், அவளைக் கைவிட்டு விட்டார்! ஆனால் சபிதா, விடவில்லை. சென்ற வருடம் ஆகஸ்ட் மாதம் சோம்நாத் வீட்டின் முன் மறியல் செய்ய ஆரம்பித்தவர், தொடர்ந்து பதிமூன்று மாதங்கள் போராடி, கிராமத்தில் மக்கள் நீதிமன்றத்தைக் கூட்டி விட்டாள். கைக் குழந்தையும் கையுமாகக் கல்யாணம் செய்து கொண்டு விட்டாள் காதலன் சோம் நாத்தை! சபிதாவின் நெற்றியில் சோம்நாத் குங்குமத்தை இட்ட போது பொது மக்களும் வழக்கறிஞர்கள் சிலரும் கூட கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

● ஜூஹூ கடற்கரை, பம்பாய்வாசிகளுக் கும் உல்லாசப் பயணிகளுக்கும் பொழுது போக்குத்தலமாக இருந்து வருகிறது. ஒட்ட கங்களின் கொலைக்களமாகவும் இதுவே விளங்குகிறது. ஒட்டகச் சவாரியில் காசு சம்பாதிக்க ஆசைப்பட்டு ஒட்டகங்களைப் பம்பாய்க்குக் கொண்டு வருகிறார்கள். ஆனால், பம்பாய் மாநகரின் சுற்றுப்புறச் சூழலும், வியர்வை பொங்க வைக்கும் வெப்பக் காற்றும் தாங்க முடியாமல் ஒட்ட கங்கள் ஒரு வருடத்திலேயே உயிரை விட்டு விடுகின்றன.


● பிலிப்பைன்ஸ் நாட்டு ஜனாதிபதியா யிருந்து பதவியிலிருந்து தள்ளப்பட்ட மார்க் கோஸின் அபிமானிகள், அவரது 71-ஆவது பிறந்த நாளை பிரம்மாண்டமான கேக் வெட்டிக் கொண்டாடினார்கள். மூன்று அடுக்கு கொண்ட இந்த கேக்கின் உயரம் 9 மீட்டர். நீள அகலம் ஒன்பதே முக்காலுக்குப் பதினாறரை மீட்டர்! இதைச் செய்ய 7000 முட்டைகள், 1400 கிலோ சர்க்கரை, 1050 கிலோ மாவு, தவிர வெண்ணையும் கொழுப்புப் பொருளும் 44 காலன். இந்தப் பிரம்மாண்ட கேக்கை வெட்டுவதற்கென்றே 50 பேர் தயார் செய்யப்பட்டிருந்தார்களாம்!

● ஆஸ்ட்ரஜன் எனப்படும் ஹார்மோன் மருந்தை கொழுப்புச் சத்துக்காகக் கன்று களுக்கு ஊசி மூலம் ஏற்றி விடுவதோடு, தனி இருட்டு அறையில் கன்றுகளை அடைத்து, தீவனம் ஒன்றைக் கஞ்சி மாதிரி கொடுக்கிறார்கள். இதில் எல்லா ஊட்டச் சத்தும் இருப்பதால், ஒரு வேலையும் இல் லாத இந்தக் கன்றுகள் கொழு கொழு என்று கொழுத்துப் போய் விடுகின்றன. கசாப்பு பிஸினஸ் அமர்க்களம்தான்! இந்தச் சித்திரவதைக் கொடுமை ஜெர்மனி யில் நடக்கிறது. மருந்துகள் கொடுத்துக் கொழுக்க வைக்கப்பட்ட இந்தக் கன்றுக ளின் மாமிசத்தை வாங்குவதில்லை என்று நுகர்வோர் அமைப்புக்கள் மூலம் மக்கள் கிளர்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள்.

● இந்தியாவிலேயே முதன் முறையாகப் பெங்களூரில் விஜயா வங்கி 'டெல்லர் மெஷின்' நிறுவியுள்ளது. (படம்) ரூபாய் இரண்டாயிரம் வரை இக் கருவியின் மூலம் வாடிக்கையாளர் பெற்றுக் கொள்ளலாம்; காசோலை மற்றும் பணத்தையும் 'டெபா ஸிட்' செய்யலாம்! வாடிக்கையாளர் கணக் கில், வரவு செலவு விவரங்களை இக்கருவி வழங்கும். 'செக்புக்' வேண்டுகோளைப் பதிவு செய்யும்! இரண்டங்குலத்துக்கு மூன்று அங்குலம் அளவுள்ள மெல்லிய பிளாஸ்டிக் அட்டையை நுழைத்து, இக் கரு வியை இயக்கலாம். வாடிக்கையாளரின் பெயரும் ரகசிய நெம்பரும் இதில் பதிவாகி யிருக்கும். மோசடிகளுக்கு வாய்ப்பே இல்லையாம்!

தொகுப்பு:

சித்தார்த், பெந்தகாளூரான்.


ஜாக்கிரதை! அழுவதுக்கு இடமே கிடையாது!
கூட்டணி கட்சிக்குள்ளே ஒருத்தரை ஒருத்தர் விமர்சிக்கக் கூடாது!
கூட்டணியிலே தமிழ்நாடு இல்லாட்டி என்ன நான் இருக்கேன்!
பத்திரிகை சுதந்திரம்
இந்தப் புறாவை மறுபடி கூண்டுலே அடைக்கலாமா... வேண்டாமான்னு யோசிப்போம்!
பஞ்சாப்
ஜோத்பூர் கைதிகள் விடுதலை
பஞ்சாயத்து தேர்தல்
பெப்ஸி – கோலா



கல்கி

1988 அக்டோபர் 2
மலர் 47 இதழ் 9
விபவ புரட்டாசி 16



மக்கள் பெற்ற மகத்தான வெற்றி!

அவதூறுச் சட்டத்தை எதிர்த்து நடந்த போராட்டம், பத்திரிகை சுதந்திரத்துக்காகப் பத்திரிகைகள் நடத்திய போராட்டம் மட்டும் அல்ல; தகவல்கள் பெறும் தங்கள் அடிப்படை ஜனநாயக உரிமையைக் காத்துக் கொள்ள மக்களும் சேர்ந்து நடத்திய போராட்டம். அது இன்று மகத்தான வெற்றி பெற்றுள்ளது. காஷ்மீரம் முதல் கன்யாகுமரி வரை, மாணவர் முதல் உச்ச நீதிமன்ற நீதிபதி வரை பல துறையினரும் அவதூறுச் சட்டத்தைக் கண்டித்துக் கிளர்ச்சிகள் செய்தனர்; அறிக்கைகள் விட்டனர். இதற்கு அரசு பணிந்தது.

அவதூறுச் சட்டத்தை வாபஸ் பெற்றுக் கொள்வதாகக் கூறாவிட்டாலும் அம்மசோதா சட்டமாகாது என்று அறிவித்ததன் மூலம் அதனைக் கைவிட்டதாகத் தெரியப்படுத்தியுள்ளார் பிரதமர். வறட்டுக் கௌரவம் பாராமல் இந்த மட்டில் ஒரு கொடுமையான சட்டத்தைச் சவப்பெட்டிக்குள் அடைத்து மூடியதற்காக அவரைப் பாராட்டுகிறோம். அதனை ஆழக் குழிதோண்டிப் புதைத்து விட்டால் மேலும் வாழ்த்தலாம்; நன்றி செலுத்தலாம். ஆனால் தாம் அடியோடு சரணாகதி அடைந்துவிடவில்லை என்று காட்டிக் கொள்வதற்காகவோ என்னவோ, சட்டத்தைக் கைவிட்ட பிரதமர், விவாதத்தைத் தூண்டி விட்டிருக்கிறார்.

ஏதோ, நாட்டிலுள்ள பத்திரிகைகள் எல்லாம் அவதூறு மூட்டைகளை அவிழ்த்து விடுவதே காரியமாகக் கொண்டிருப்பது போலவும் அநியாயமாக அவதூறுகளுக்கு உள்ளாகிறவர்கள் சார்பில் தாம் பேசுவது போலவும் காட்டிக் கொண்டு, நாடு தழுவிய விவாதம் நடக்கட்டும் என்று ஊக்குவித்திருக்கிறார்.

விவாதிப்பதற்கு ஒன்றுமேயில்லை என்பதுதான் நமது வாதம்! விவாதிப்பது அல்லது பேச்சு வார்த்தைக்குச் சம்மதிப்பது என்றால் விட்டுக் கொடுக்க ஏதோ சில அம்சங்கள் இருப்பதாக அர்த்தமாகிவிடும். ஆனால் பத்திரிகை சுதந்திரம் என்ற விஷயத்தில் விட்டுக் கொடுக்க ஒன்றுமேயில்லை. அது பூரணமானது. ஜனநாயகத்தில் பூரணமாகவே விளங்க வேண்டிய ஒன்று. அதை எப்படி விவாதத்துக்கு உட்படுத்த முடியும்?

பத்திரிகை சுதந்திரத்தைப் பொறுப்புணர்வோடு பயன்படுத்த வேண்டும் என்பதில் இரண்டாவது கருத்துக்கே இடமில்லை. பொறுப்புள்ள பத்திரிகைகள் எதையும் தக்க ஆதாரத்தோடு தான் பிரசுரிக்கும். தப்பித் தவறி ஏதாவது பிழை நேர்ந்துவிட்டால், உடனே கண்ணியத்துடன் ஒப்புக் கொண்டு வருத்தம் தெரிவிக்கும். இத்தகைய பத்திரிகைகளைத்தான் மக்கள் மதிப்பார்கள். பொறுப்பின்றி அவதூறுகளைப் பரப்பும் பத்திரிகைகளை மக்கள் ஒரு கிளுகிளுப்புக்காகப் படிக்கலாம்; ஆனால் நம்ப மாட்டார்கள். அத்தகைய பத்திரிகைகளை மதிக்கவும் மாட்டார்கள். எனவே இத்தகைய பத்திரிகைகளைப் பற்றி அரசு அவ்வளவாகக் கவலைப்பட வேண்டியதில்லை. மேலும் இவற்றை நல்வழிப்படுத்த அரசுக்கு இப்போதுள்ள சட்டங்களே போதும். எல்லாப் பத்திரிகைகளையும் சகட்டு மேனிக்கு அடிமைப் படுத்தும் பயங்கரமான புதிய சட்டம் தேவையில்லை.

'இன்று மோசமான பத்திரிகைகள் அவதூறுகள்ளப் பரப்பத்தானே செய்கின்றன? அவதூறுக்கு உள்ளாகிறவர்களுக்குப் பாதுகாப்பு வேண்டாமா? இப்போதுள்ள சட்டங்களால் இவற்றை ஒடுக்க முடியாததால்தானே புதிய அவதூறுச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது?' என்றெல்லாம் கேட்பவர்கள், மனித இயல்புகளை அறியாதவர்கள். அதிகார பீடத்தில் உள்ளோர் விரிக்கும் வலையில் சிக்கியவர்கள். இதைவிடக் கடுமையான சட்டம் வந்தாலும் தரம் கெட்ட பத்திரிகைகள் சில இருக்கவே செய்யும்! பகிரங்கமாகச் செய்ய முடியாது போனால் ரகசிய வியாபாரமாக்கும். எனவே, இருக்கிற சட்டங்களைக் கொண்டு அரசு, குற்றமிழைக்கும் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பதே உகந்தது.

தரம்கெட்ட பத்திரிகைகள் சில உள்ளன என்று காரணம் காட்டிப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்க, அதிகாரத்தில் உள்ளவர்கள் முற்படுவார்கள் என்பதை இன்றைக்கு இருநூறு ஆண்டுகளுக்கு முன்பே உணர்ந்துதான் அரசியல்ஞானியும் அமெரிக்க ஜனாதிபதியுமான ஜேம்ஸ் மாடிஸன் பின்வருமாறு சொன்னார்:

"பத்திரிகைச் சுதந்திரம் என்பது ஆரோக்கியமான கனிகளைத் தரும் முட்கள் நிறைந்த மரம் போன்றது. முட்கள் சில சமயம் குத்தத்தான் செய்யும். ஆனால் முள் குத்துகிறதே என்பதால் கிளைகளை வெட்டிச் சாய்ப்போமானால் மரமே பட்டுப் போகும். நமக்கு அத்தியாவசியமான, ஆரோக்கியமளிக்கிற பழங்களையும் இழந்து விடுவோம்."

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



தனி மனித உரிமையில் தலையிடும் தபால் சட்டம்

பத்திரிகைகள் அவதூறுச் சட்டம் என்ற கறுப்புச் சட்டத்துக்கு இணையான மற்றொரு மிக மோசமான சட்டம், தபால் சட்டத் திருத்தம் என்று வாதாடுகிறார் வை. கோபால்சாமி எம். பி...

இன்றைக்குள்ள இந்திய தபால் சட்டம் என்பது 1898—ல் பிரிட்டிஷ்காரர்கள் கொண்டு வந்தது. இந்தச் சட்டத்தின் 26—வது பிரிவு, பொது மக்களின் நன்மையைக் கருதி ஒரு தனி நபருக்கு வரும் தபால்களை இடைமறித்துத் தணிக்கை செய்யும் அதிகாரத்தை அரசு அதிகாரிகளுக்கு வழங்கியிருக்கிறது. இந்தியாவை அடிமைப்படுத்திய ஏகாதிபத்திய காலனி ஆட்சிக் காலத்தில், அதிகார வர்க்கம் பயன்படுத்திய எதேச்சதிகாரச் சட்ட விதிகளை சுதந்திர இந்தியாவில் ஆளும் கட்சியினர் அவர்கள் வசதிக்காகத் தொடர்ந்து பயன்படுத்தி வருகிறார்கள். தனிமனித உரிமைகளைப் பாதிக்கும் இந்தச் சட்ட விதிகளை எவரும் சகித்துக் கொள்ள முடியாது. ஆகவேதான் இந்தச் சட்டத்தை அடியோடு நீக்க வேண்டும் என்று ஏழு வருடங்களுக்கு முன் தனிநபர் மசோதா ஒன்று கொண்டு வந்தேன். ஆளும் கட்சியின் பெரும்பான்மை பலம் காரணமாக நாடாளுமன்றம் இதனை நிராகரித்து விட்டது. பின்னர், 1986—ல், அப்போது தகவல் — தொடர்பு உதவி அமைச்சராக இருந்த சந்தோஷ் மோகன் தேவ் தபால் சட்டத்தின் திருத்த மசோதா கொண்டு வந்தார். பற்றி எரிந்து கொண்டிருக்கும் வீட்டின் மீது பெட்ரோலைக் கொட்டுவது போல் அமைந்தது இந்தத் திருத்த மசோதா.

ஏற்கெனவே இருக்கும் சட்டத்தின்படி, ஒரு நபருக்கு வரும் தபால்களைப் பிரித்துப் பார்க்க அரசாங்க உத்தரவு போட வேண்டும். தலைமைச் செயலர் போன்ற உயர்ந்த பதவியில் உள்ளவர் பொறுப்பேற்க வேண்டும். ஆனால் இந்தத் திருத்தச் சட்டப்படி, சாதாரண இன்ஸ்பெக்டரோ, சப்—இன்ஸ்பெக்டரோ கூட தபால் அலுவலகத்தில் நுழைந்து தபால்களைப் பிரித்துப் பார்க்கலாம். தபால் அதிகாரிகள் எந்த காரணத்தைக் கொண்டும் எதிர்க்க முடியாது. இந்தியாவில் பயங்கரவாதம் தலைதூக்கி இருப்பதால் மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வருவதாக அரசு சார்பில் காரணம் சொல்லப்பட்டது. இந்தத் திருத்தச் சட்டம், எதிர்க்கட்சிகளால் கடுமையாக எதிர்க்கப்பட்டது. பத்திரிகைகள் கண்டித்தன. ஆனால் ராஜீவ் அரசு இதையெல்லாம் லட்சியம் செய்யாமல் திருத்த மசோதாவை இரு அவைகளிலும் நிறைவேற்றி 1986 டிசம்பர் மாதம் ஜனாதிபதி ஜெயில் சிங்கின் ஒப்புதலுக்காக அனுப்பியது.

ராஜீவின் போக்கைக் கண்டு ஜனாதிபதி மிகவும் எரிச்சலடைந்து இருந்த நேரம். ஜனாதிபதி ஒப்புதல் தரவில்லை. 1987 ஜனவரி மாதம் இந்தத் திருத்த மசோதாவைப் பற்றிய தமது சந்தேகங்களை எழுப்பியது மட்டுமின்றி பல ஆலோசனைகளையும் கூறி அரசுக்கு எழுதினார் ஜனாதிபதி. அந்த ஆலோசனைகள் அரசின் எதேச்சாதிகாரப் போக்கைத் தணிப்பதுடன் ஓரளவு மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதாகவும் உள்ளன.

ஜனாதிபதியின் கடிதத்துக்கு இதுவரை அரசு தரப்பிலிருந்து எந்தப் பதிலும் இல்லை. அரசியல் சட்டம் 111—வது பிரிவின்படி ஜனாதிபதி, மசோதாவை அரசுக்கே திருப்பி அனுப்பி இருக்கலாம். ஆனால் மீண்டும் நாடாளுமன்றத்தில் ஒப்புதல் பெற்று, ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்தால் அவர் கையெழுத்துப் போட்டே ஆக வேண்டும். எனவே ஜெயில் சிங், மசோதாவைத் திருப்பி அனுப்பாமல், சந்தேகங்களை மட்டும் எழுப்பிக் கடிதம் எழுதினார்!

ஜெயில் சிங்குக்குப் பிறகு வந்த வேங்கடராமனும், இந்தச் சட்டத்திற்கு இதுவரை ஒப்புதல் அளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இன்னொரு விஷயம்: 'தபால்கள் ஆராய்ச்சி மையம்' என்ற ஓர் அமைப்பு இப்போதே புலனாய்வுத் துறை அலுவலகத்தில் இருக்கிறது. எந்தவிதமான சட்ட விதிகளையும் பின்பற்றாமல் புலனாய்வுத் துறை அதிகாரிகள் தபால் தணிக்கையில் இறங்கியிருக்கிறார்கள். சட்டத்துக்குப் புறம்பான அத்து மீறிய இந்தச் செயல்கள் நிறுத்தப்பட வேண்டும். பத்திரிகைகள் அவதூறு மசோதாவிற்கு எதிராகத் தேசமே ஒன்று பட்டுக் கடுமையாகக் குரல் கொடுத்ததைப் போல, ஜனாதிபதியிடம் இருக்கும் தபால் சட்டத் திருத்த மசோதாவை அரசு வாபஸ் பெறுமாறும் மக்கள் பலமாகக் குரல் எழுப்ப வேண்டும்.

பேட்டி: **தில்லப்பா.**

அக்டோபர்
20-10-88
தேதி வரை

இலவசம்!

எங்களிடமிருந்து ஒரே சமயத்தில் ரூபாய் 100/-க்கு மேற்பட்ட தொகைக்கு ஸ்வீட்ஸ், காரவகைகள் வாங்குவோருக்கு பக்தி புத்தகங்கள் 20-10-88 வரை இலவசமாக வழங்கப்படும்.

எங்கள் **ஸ்வீட்ஸ்** வாங்கி நல்லோருக்கு விநியோகியுங்கள்.

கல்யாண வைபவங்களுக்கு: சீர் முறுக்கு, சீர்முள்ளுத் தேன்குழல், தேன்குழல், அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய் வகைகள் முதலியவை செய்துத் தரப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, IInd மெயின் ரோடு,
காந்திநகர்,
அடையாறு, சென்னை-20.
போன்: 412557

ராஜாஜி
வாழ்க்கை வரலாறு — V
ராஜ்மோகன் காந்தி.

சில வருத்தங்கள்: சில மகிழ்ச்சிகள்

ராஜாஜி 37 — 39. — இல் சென்னை மாகாண முதன் மந்திரியாக இருந்தபோது கவர்னராக விளங்கியவர் எர்ஸ்கைன். அவர் பிரிட்டனில் காலமானார். ஸி. ஆரின் ஹரிஜன நண்பரும் பேராதரவாளருமான முனுசாமிப் பிள்ளையும் இறந்து போனார். புதுதில்லி மந்திரி சபையில் நேரு, ஸி. ஆர். ஆகியோரின் சகாவாகத் திறமையுடன் செயலாற்றிய கோபாலசாமி ஐயங்கார் பூத உடல் நீத்தார். ஸி. ஆரின் இரண்டு நெருங்கிய முஸ்லிம் நண்பர்களும் மறைந்து விட்டனர்: அஸஃப் அலி; ஷாஃபிக் — உர் — ரஹ்மான். இவர்களில் ஷாஃபிக் — உர் — ரஹ்மான் முப்பதாண்டுகளுக்கு முன் வேலூரில் ஸி. ஆரின் சிறைச்சாலைத் தோழராக விளங்கியவர். "ஒரு சாமானியனைப் போல் தோற்



* ஹனுமந்தையா: ஸி. ஆரின் கடிதம் உத்தரவே!



* வி.கே. கிருஷ்ண மேனன்: இடதுசாரிதான். ஆனால் தேசபக்தர்.

றமளித்த முனிவர்" என்று அவரை ஸி. ஆர். நினைவு கூர்ந்தார்.

நாற்பதாண்டு கால நண்பரும் காந்தியைப் பற்றி முதன் முதலில் ஸி. ஆருக்கு அறிவுறுத்தியவருமான டி. எஸ். எஸ். ராஜன் திருச்சியில் காலமானார். இதற்குச் சில தினங்கள் முன்னதாக ஸி. ஆர்., ஓர் இரவு ரயிலில் பயணப்பட்டுச் சென்று, உடல் நலம் குன்றியிருந்த ராஜனைக் காலையில் பார்த்து விட்டு, உடனே விமானமேறிச் சென்னை வந்து சேர்ந்து, அன்றைய அலுவல்கள் தாமதப்படாமல் கவனித்துக் கொண்டார்!

ராமராவுக்கு அடுத்தபடியாக ஸி. ஆரின் மிக நெருங்கிய நண்பர், டி. வி. என்று இளமைக் காலம் முதல் ஸி. ஆரால் அன்புடன் அழைக்கப்பட்ட டி. விஜயராகவாச்சார். அவரை முதலில் சேலத்தில் சந்தித்தார் ஸி. ஆர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் அது. ஸி. ஆர். அப்போது ஓர் இளம் வழக்கறிஞர். டி. வி. ஜில்லா அதிகாரி. பின்னால் டி. வி. கொச்சின் சமஸ்தானத்திலும் உதய்பூர் சமஸ்தானத்திலும் திவானாக விளங்கியவர். கல்கத்தாவிலும் புதுதில்லியிலும் கவர்னர், கவர்னர் ஜெனரல் மாளிகைகளில் அதிகார பூர்வமாக அல்லாது, ஸி. ஆரின் நண்பர் என்ற முறையில் சில தினங்கள் விருந்தினராகத் தங்கிச் சென்றவர். வாழ்க்கை வெவ்வேறு திசைகளில் சென்றாலும் இளமைக்கால நட்பு முதுமையிலும் நீடித்தது. இந்த நட்பு அளித்த சுதந்திரம் காரணமாக ஸி. ஆருக்கு டி. வி. எழுதிய கடிதங்களில் மெலிதான கிண்டல் கூட இடம் பெறும்! உதாரணமாக, 'மழைக்காகக் கடவுளைப் பிரார்த்தனை செய்யுங்கள்' என்று ஸி. ஆர். வேண்டுகோள் விடுத்ததுமே மழை கொட்டியதை, அவருடைய அதிர்ஷ்டம் எனக் கருதிய டி. வி., தமது கடிதத்தில், "ஆகா! எங்கும் பசுமை! பசுக்கள் பாலும் வெண்ணெயும் ஏகமாகப் பெருக்குகின்றன!" என்றெல்லாம் நையாண்டி செய்திருந்தார். அவ்வளவு அந்நியோன்னியமான நண்பர் காலமாகி விட்டார். ஸி. ஆரின் டயரிக் குறிப்புக்களில் பின்வரும் வரிகள் காணப்படுகின்றன:

பிப்ரவரி 21: டி. வி. நோய்வாய்ப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். பிப்ரவரி 28: டி. வி. நேற்று இரவு காலமாகி விட்டார். இன்று காலை எனக்குத் தகவல்

கிடைத்தது. நான் அழவில்லை; என் இதயம் கல்லாய் ஆனது.

இம்மாதிரி பல நண்பர்களின் மறைவு பற்றிய சோகமான செய்திகளைக் கேட்க நேர்ந்தது தவிர, வருத்தமளிக்கக் கூடிய காரியங்களையும் முதலமைச்சர் என்ற முறையில் ஸி. ஆர். செய்ய வேண்டியவராக இருந்தார். சென்னை மாநகரின் டிராம் வண்டி போக்குவரத்துக்கு முடிவு கட்டவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. கிளர்ச்சி செய்த போலீஸ்காரர்களைக் கைது செய்ய வேண்டியிருந்தது. அவர்களில் சிலரை வேலையை விட்டு நீக்கவும் நேர்ந்தது. ஒரு வாரம் கண்டிப்புக் காட்டிய பின் ஸி. ஆர். டயரியில் எழுதினார்: "போலீஸ்காரர்கள் விட்டுக் கொடுத்தனர். எல்லோரும் சம்பளம் வாங்கிக்கொள்கிறார்கள்..."

முதலமைச்சர் என்ற முறையில் நண்பர்களுக்கு உதவ முடியாமலிருந்ததும் ஸி. ஆருக்கு வருத்தமளித்தது. ஆங்கில — தமிழ் அகராதி ஒன்றினை நண்பர் ஏ. வி. ராமன் உருவாக்கி வந்தார். அவரை இப்பணியில் ஸி. ஆர். முன்னர் உற்சாகப்படுத்தியும் இருந்தார். சேலம் நாட்களிலிருந்தே நண்பரான ஏ. வி. ராமன் இப்போது இப்பணிக்கு அரசு மானியம் கோரினார். பணியை நல்லவிதமாக முடிக்க மானியம் உதவியிருக்கும். ஆனால் அரசு உதவியை அளிக்க ஸி. ஆர். தயாராக இல்லை. "கோரிக்கையை நிராகரித்து வந்த அதிகாரபூர்வமான, அப்பட்டமான பதில் என் தந்தையை ஆழமாகக் காயப்படுத்தி விட்டது" என்று மகன் வி. பி. ராமன் நினைவு கூர்கிறார்.

பால்யத்திலிருந்து நண்பரான ராமராவ், மொரார்ஜி தேசாய்க்கு ஒரு அறிமுகக் கடிதம் தருமாறு கேட்டபோது, ஸி. ஆர். எழுதித் தந்தார். ஆனால் சீக்கிரமே, 'அறிமுகக் கடிதம் எதற்கு?' என்ற சந்தேகம் ஸி. ஆருக்கு எழ, "எதற்காக மொரார்ஜியைச் சந்திக்க விரும்புகிறீர்கள்?" என்று ஸி. ஆர். நண்பரைக் கேட்டார். வர்த்தகத் தொடர்பான ஒரு விஷயம் தம் மனத்தில் இருந்தது என்பதை ஒப்புக் கொண்ட ராமராவ், ஸி. ஆரின் அறிமுகக் கடிதத்தை அவரிடமே திருப்பித் தந்து விட்டார்!

இதன் மறுபக்கமாக, சில சலுகைகளை முதலமைச்சர் வழங்கியே ஆக வேண்டும்; சில நியமனங்களை அவர் செய்தே ஆக வேண்டும் அல்லவா? லண்டனில் ஹை கமிஷனராகப் பதவிக் காலத்தை முடித்துக் கொண்ட வி. கே. கிருஷ்ண மேனன், மாநில அவை உறுப்பினராகச் சென்னை மாகாணத்திலிருந்து தேர்ந்தெடுத்து அனுப்பப்பட்டது ஸி. ஆரின் முயற்சியே; நேருவுடைய தூண்டுதலால் அல்ல! காந்திய சகாப்தம் தொடங்குமுன், அன்னி பெஸண்டின் சுயாட்சி இயக்கத்தில் ஸி. ஆரும் கிருஷ்ண மேனனும் சேர்ந்து பணியாற்றியிருந்தனர். மேனனுடைய இடதுசாரிக் கொள்கைகள் ஸி. ஆருக்கு ஒப்புதலில்லை என்றாலும் அவரது தேச பக்தியையே முதலாவதாக எண்ணிப் பார்த்தார் ஸி. ஆர்.

ஸி. ஆரின் நல்லெண்ணத்தைப் பெற்ற இன்னொருவர் ஹனுமந்தையா. மைசூரின் இளம் முதலமைச்சரான இவருக்கு, அச்சமின்றியும் யாருக்கும் சலுகை காட்டாமலும் இயங்குமாறு அறிவுரை வழங்கிய ஸி. ஆர்., பல விதங்களில் உதவவும் செய்தார். உதாரணமாக, சென்னைத் தொழிலதிபர்களை மைசூர் மாநிலக் கடன் பத்திரங்களை வாங்குமாறு ஊக்குவித்தார். இதற்கு மறுபுறமாக ஹனுமந்தையா தமது அதிகாரிகளிடம், 'ராஜாஜியிடமிருந்து ஏதேனும் கடிதம் வந்தால் அதனை உத்தரவாகக் கருத வேண்டும்' என்று சொல்லி வைத்திருந்தார்.

மாகாணத்தின் ஏரி குளங்களை நிரப்புவதும் அரசின் கஜானாவை நிரப்புவதும் ஸி. ஆருக்கு மிகுந்த திருப்தியைத் தந்தன. "தாராளமாக மழை பெய்திருக்கிறது; ஜில்லாக்களில் விவசாயம் செவ்வனே நடக்கிறது; ஓர் அங்குலம் கூட பயிரிடாமல் விடப்படவில்லை" என்று தமது டயரியில் எழுதினார் ஸி. ஆர். அதேபோல் கடன் பத்திரங்களைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது: "ஐந்து கோடி கேட்டோம்; ஒன்பது கோடி கிடைத்திருக்கிறது." பார்க்கப் போனால் இத்தகைய மகிழ்ச்சிகரமான நிலவரத்தை ஸி. ஆர். எதிர்பார்க்கவில்லை. கடன் பத்திரத்துக்கு வரவேற்பு இருக்குமா என்று கவலைப்பட்டவர் அவர். இந்தக் கவலை, கல்கத்தாவுக்கு அவர் அனுப்பிய ஒரு தந்தியில் பிரதிபலிக்கிறது. மேற்கு வங்கக் கடன் பத்திரங்கள் அமோக வரவேற்பு பெற்றதற்குப் பாராட்டுத் தெரிவித்துவிட்டு, "அதிகப்படியாக வசூலான தொகையைச் சென்னைக்கு அனுப்பவும்" என்று அவர் தமாஷாகத்தான் குறிப்பிட்டிருந்தார் எனினும் சென்னை மாகாணக் கடன் பத்திரங்கள் பற்றிய அவரது கவலையை அது உள்ளடக்கியிருந்தது. மேற்கு வங்க அமைச்சரவைக் கூட்டத்தில் தந்தி உரக்கப் படிக்கப்பட்டது. அனைவரும் முன்னாள் கவர்னரின் நகைச்சுவையை ரசித்துச் சிரித்தனர்.

படித்தவர்களிடையே பேசும்போது ராஜாஜியின் வாக்குச் சாதுர்யமும் நகைச்சுவை உணர்வும் மிக அதிகமாகப் பிரகாசித்தன. இளம் பொறியியல் நிபுணர்களிடையே பேசும்போது அவர் சொன்னார்: "அரசாங்கத்துக்கு வரி விதிக்க இரண்டு வழிகளே உள்ளன: நேர்முக வரி; மறைமுக வரி. நேர்முக வரி பணக்காரர்களைத் தாக்கும்; மறைமுக வரி சாமானியனைத் தாக்கும். வர்த்தகர்கள், தொழிலதிபர்கள் மீது அவர்களால் தாங்கக் கூடிய வரை வரி விதிக்கலாம். சாமானியர்கள் மீது அவர்களால் புரிந்து கொள்ள முடியாத வரை வரி விதித்துக் கொண்டே போகலாம்!"

(தொடரும்)



அப்பா

சத்யா ஸ்ரீனிவாசன்

"ஏம்பா, சேலத்துலே என் குவார்ட்டர்ஸ் எப்படி? அட்டகாசமா இல்லே? அதே மாதிரி வீடு இங்கே வேணும்னா இரண்டாயிரம் ரூபாய் வாடகை இருக்காது?"

தம்பியின் குடும்பத்துடன் சென்னையில் தங்கியிருந்த அப்பாவைக் காண வந்திருந்த நான் பெருமையாகக் கேட்டேன். மூன்று மாதங்களுக்கு முன்னால் சேலம் வந்து என் வீட்டில் தங்கி விட்டுச் சென்னைக்குத் திரும்பியிருந்தார் அப்பா. தம்பி, மற்றும் அவன் மனைவி முன் என் குவார்ட்டர்ஸ் பெருமைகளைச் சொல்லி அவர்களை அசத்த வேண்டும் என்ற ஆசை எனக்கு.

ஆகவே 'ம்' என்ற அப்பாவின் அசுவாரசியமான பதிலையும் கவனிக்காது தொடர்ந்தேன்.

"ஹால் ஒண்ணே போறுமே! பளபளன்னு மொஸைக்; தாராளமா இருபது பேர் படுத்துக்கலாம், இல்லையாப்பா? ஷோகேஸ், டீ.வி., வி.ஸி.ஆர்., ரேடியோ எல்லாம் வச்சுக்கச் சுவத்திலேயே தனித்தனியா அலமாரி... அமர்க்களமாயில்லே?"

'சூள்' கொட்டினார் அப்பா. "என்ன இருந்து என்ன? சுவத்திலே சாமி படம் மாட்டற மாதிரி இல்லையே! ஹால்லே நுழைஞ்ச உடனேயே ஒரு சுவாமி படமாவது கண்லே படணும். சுவத்துலே ஆணியே அடிக்க முடியாதுன்றியே" என்றார்.

சின்ன விஷயத்தைப் பெரிய குறையாகச் சொன்னதும் எனக்கு ஒரு மாதிரியாகப் போய் விட்டது.

"அதுக்குத்தான் பூஜை ரூம்னு தனியாவே இருக்கே? அழகா எல்லாப் படங்களையும் வச்சு, அந்த ரூம்லே வேறே எந்த சாமானும் வைக்காமே.... சுத்தமா வச்சிருக்கேனே, போறாதா?" என்றேன்.

"அது சரி. அந்த ரூம்லேயும் மொஸைக்.

கோலம் போட்டுப் 'பளிச்'ன்னு செம்மண் இட முடியாது. செம்மண் இட்டாத்தான் சாமி ரூமுக்கு ஒரு 'களையே' வரும்'' என்று அப்பா சொன்னதும் எனக்கு மெதுவாகக் கோபம் வந்தது.

சமாளித்துக் கொண்டு, "போவட்டும், உங்களுக்குன்னு தனியா ஒரு ரூம் கொடுத்திருந்தேனே. பாத் அட்டாச்டு ரூம், வெஸ்டர்ன் டைப் டாய்லெட்டோட, அது எப்படி?'' என்றேன்.

"என்னமோப்பா. அந்தக் காலத்திலே நாங்க எல்லாம் அரை மைல் நடந்து ஆத்தோரம் போய் வருவோம். அப்புறம் மெள்ள மெள்ளக் கக்கூஸ் வீட்டுக்கு உள்ளேயே வந்துடிச்சு. இப்ப என்னடான்னா, படுக்கற இடத்திலேயே கக்கூஸ். சே! எனக்கு என்னவோ சரிப்படலே'' என்று அப்பா சொன்னதும் எனக்கு எரிச்சல் ஏற்பட்டது.

சே! என்ன அப்பா இவர்? அங்கே இருந்த போது 'ரொம்ப நல்லாயிருக்கு: ரொம்ப வசதி' என்று வார்த்தைக்கு வார்த்தை பாராட்டி விட்டு, இங்கே வந்து இப்படி.... எனக்குக் கோபம் தலைக்கேறிக் கொண்டிருந்தது.

"டைனிங் ஹால், டைனிங் டேபிள் இதெல்லாமாவது பிடிச்சுதா?'' என்றேன்.

'பச்' என்று உதட்டைப் பிதுக்கினார் அப்பா. "தரையிலே உட்கார்ந்து சப்பணம் போட்டுச் சாப்டற ஜோர், உன் பளபளா டைனிங் டேபிள்லே வராது'' என்றதும் என் முகம் சிறுத்துப் போய் விட்டது.

நைட் டூட்டிக்கு ஆறு மணிக்கெல்லாம் கிளம்பிக் கொண்டிருந்த தம்பி, "அவரை விடு அண்ணா, அதையெல்லாம் அனுபவிக்க அவருக்குத் தெரியாது. அடுத்த மாசம் அநேகமாக எங்க பாக்டரிலே 'ஸ்டிரைக்' வரும்னு நினைக்கறேன். எனக்கு வேலை இருக்காது. சேலம் வந்து எல்லா வசதிகளையும் நான் என்ஜாய் பண்றேன்'' என்றான் சிரித்துக் கொண்டே.

பிறகு டூட்டிக்குப் போகும் போது தன் மனைவியையும் உடன் கூட்டிச் சென்றான்.

"அப்பா இவளை ஆஸ்பிடல்லே விட்டுட்டுப் போறேன். எட்டு மணி சுமாருக்கு நீங்க போய் அழைச்சுக்கிட்டு வந்துடுங்க'' என்றபடி வெளியேறினான்.

என் காதில் முணுமுணுத்தாள் என் மனைவி,

"நாம நல்லாயிருக்கிறது உங்க அப்பாவுக்குப் பிடிக்கலைங்க. வயித்தெரிச்சல்!'' என்றாள்.

எனக்கும் அவள் சொல்வது சரியாகப் பட்டது.

அவள் சொன்னது அவர் காதிலும் விழுந்திருக்க வேண்டும்.

அடிபட்ட நாகமாகத் திரும்பினார் அவர்.

"எந்தத் தகப்பனும் தன் பசங்களைப் பார்த்து வயிறு எரிய மாட்டாம்மா...'' என்றவர், "உங்களுக்குத்தான் நிலைமை புரியலே. நான் பெத்த ரெண்டு பேர்லே, உன் புருஷன் பரவாயில்லே! எப்படியோ கஷ்டப்பட்டு முன்னுக்கு வந்துட்டான். சந்தோஷம். ஆனா சின்னவன் இன்னும் கஷ்டப்பட்டுட்டிருக்கான். வசதி போதலே. காலையிலே எழுந்தா, பக்கெட் எடுத்துண்டு கக்கூஸ் போக 'கியூ'லே நிக்கணும். வீடு ரொம்ப சின்னது. ஒருத்தர் கால் நீட்டிப் படுத்துட்டா, இன்னொருத்தர் சரியா உட்காரக் கூட முடியாது. மனைவியை கவர்மெண்ட் ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பணும்ற நிலை... அவனுக்கு மொதல்லேயே தன்னைப் பத்தி ஒரு தாழ்வு மனப்பான்மை. இந்த நிலையிலே நீங்க உங்க பெருமையை எல்லாம் சொல்லி, நானும் 'ஆமாம்! ஆமாம்!' என்று சொன்னால் அவன் மனசு என்ன பாடுபடும்? அதைத் தெரிஞ்சுக்கணும். அவன் மனசுலே வேதனை ஏற்படக் கூடாதுன்னுதான் அப்படி சொன்னேன். நீங்க நல்லாயிருக்கறது எனக்கு சந்தோஷம்தாம்மா'' என்று அவர் சொல்லி முடித்ததும்.....


"என்னை மன்னிச்சுடுங்க மாமா'' என்று கைகளைக் கூப்பினாள் என் மனைவி. என் தலையும் குனிந்தேயிருந்தது.



அரண்மனை வைத்தியர்: முகத்திலும் மார்பிலும் செயற்கையாகத் தழும்புகள் ஏற்படச் செய்ய முடியுமான்னு இளவரசர் கேட்கிறாரே, எதுக்கு?

அமைச்சர்: பக்கத்து நாட்டு சுயம்வரத்துல கலந்துக்கப் போறாராம். ஒரு 'கெட் அப்' இருக்கட்டுமேன்னு 'செட் அப்' செய்யச் சொல்றார்.

—திருத்துறைப்பூண்டி. எஸ். கந்தசாமி.


காலையில் எழுந்தவுடன் உங்கள் முகம் இப்படியா சொர சொரவென்று இருக்கிறது?
உங்களுக்கே தெரியும் உங்கள் முரடான தாடியை வசப்படுத்த தேவை ஒரு விசேஷமான பிளேடு.
முரட்டு தாடி உள்ளவர்களுக்கு உறுதியே உருவான இரட்டை பிளேடுகளை இதோ அளிக்கிறது வில்டெக். புதிய ஸாவேஜ் 2.
மிகச் சிறந்த ஸ்டீலிலிருந்து தயாரிக்கப்பட்டது. இணையற்ற கூர்முனை கொண்டது. மூன்று முறை விசேஷ அமிலங்களால் பூசப்பட்ட ஸாவேஜ் 2, மிகவும் எளிதான முறையில், சுத்தமான, மழமழப்பான சவரங்களை அளிக்கிறது.
மேலும் ஸாவேஜ் 2, சர்வதேச "ஃபிக்ஸட்" மற்றும் "ஸ்விவல்" ரேசர்களுக்குப் பொருத்தமானது.
காத்திருப்பானேன்! இன்றே ஸாவேஜ் 2 தரும் புதிய அனுபவத்தைப் பெறுங்கள்!
OBM 2759 TAM
புதிய
ஸாவேஜ்
இரட்டை பிளேடுகள்
2
முரட்டு தாடியை வசப்படுத்துகிறது.

கண்ணுக்குத் தெரியாத அபாயங்கள்...

86 — 87 — ஆம் ஆண்டில் வெளியான சிறந்த புத்தகம் என்று தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பரிசைப் பெற்ற புத்தகம்: "இந்தியாவின் சுற்றுச் சூழல்." புதுதில்லியிலுள்ள விஞ்ஞானம் மற்றும் சுற்றுச் சூழல் மையம் ஆங்கிலத்தில் வெளியிட்டுள்ள நூலின் தமிழாக்கம் இது.

நிலம்

●● மழைக் காலத்தில் ஏற்படும் மண் அரிப்பால் ஆறுகளில் தூர் படிகிறது. அதனால் ஆறுகளின் வேகம் தடைப்பட்டு வெள்ளப் பெருக்கு ஏற்படுகிறது. இப்படி ஆண்டுதோறும் இந்தியாவில் ஏற்படும் வெள்ளச் சேதம் ஆயிரம் கோடி ரூபாய்களுக்கு மேல்! ஆறுகளைப் போலவே ஏரி, குளம் போன்றவற்றிலும் தூர் படிவதனால் அவற்றில் தேங்கும் நீரின் அளவுகளும் குறைந்து, சுமார் அறுபதாயிரம் ஹெக்டேர் நிலத்திற்கான பாசன வசதியை இழக்கிறோம். இப்படி அடித்துச் செல்லப்படும் மண், ஆறுகளிலும் மற்ற நீர் நிலைகளிலும் மட்டும்தான் படிகிறது என்பதில்லை; கடலிலும் படிகிறது. உதாரணத்திற்கு வங்காள விரிகுடாக் கடலில் உள்ள பூர்பசாத் தீவு. 24 கி.மீ. நீளமும் 11 கி.மீ. அகலமும் உடைய இத்தீவு, கங்கை, பிரம்மபுத்திரா நதிகளால் அடித்து வரப்பட்ட வண்டல் மண்ணின் குவிப்பே ஆகும்...! மண் அரிப்பை ஈடு செய்வது போல் பூமியில் தன்னியல்பாக ஒரு செ.மீ. உயரத்திற்கு மண் அமைய வேண்டுமானால் ஐந்நூறு முதல் ஆயிரம் ஆண்டுகள் வரை பிடிக்கும்! இந்த நிலையிலும் மண் பாதுகாப்பு என்பது நமது அரசின் முக்கிய கொள்கைகளில் ஒன்றாக இன்னும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

●● மண்வளப் பாதுகாப்பைக் கருத்தில் கொள்ளாமல் திட்டப்படும் பெரிய பாசனத் திட்டங்கள் ஆபத்திலேயே முடிந்து விடும் என்பதற்கு நர்மதை நதியில் கட்டப்பட்ட தவா அணையே சிறந்த உதாரணம். அணை கட்டப்பட்ட பகுதி, பருத்தி விளைச்சலுக்குகந்த கரிசல் மண் பகுதி. கரிசல் மண் எப்போதுமே தண்ணீரைத் தனக்குள் தக்க வைத்துக் கொள்ளும் என்பதால் அணைக் கட்டில் தேங்கிய நீரால் நிலைமை மோசமானது. அப் பகுதி முழுவதிலும் நிலத்தடி நீர் மட்டம் மேல் தரை வரை உயர்ந்து விட்டது. சதா நீர் தேங்கிக் கிடந்ததால் நிலத்திற்குள்ளிருந்த உப்பு வகைகளெல்லாம் தண்ணீரில் மிதந்து வந்து தரையில் படிந்து உவர்ப்புத் தன்மையை உருவாக்கி விட்டது. அதனால் அப்பகுதி முழுவதிலும் இப்போது பருத்தி விளைவிக்க முடியாமல் போய்ச் சுமார் ஒரு லட்சம் விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்!

நீர்


●● இந்தியாவில் நகரங்களும், மாநகரங்களுமாக மொத்தம் 3119 இருக்கின்றன. இவற்றில் எட்டே எட்டு நகரங்களில் மட்டும்தான் முழுமையான சாக்கடை வசதிகளும், கழிவு நீரிலுள்ள நச்சுத் தன்மையை நீக்கும் வசதிகளும் உ ள் ள ன. தலைநகர் தில்லியில் கூட 46.4% கழிவு நீரே சுத்திகரிக்கப்படுகிறது. மீதியுள்ளதையும் நோய் நொடிகள் பரவாமல் சுத்திகரிப்புச் செய்ய வெறும் ஐம்பது கோடி ரூபாய்தான் செலவாகும். ஆசிய விளையாட்டிற்காக இங்கு எழுநூறு கோடி செலவு செய்த அரசு மக்களின் சுகாதாரத்திற்காக ஐம்பது கோடி செலவு செய்யத் தயங்குவது ஆச்சரியமான விஷயம்!

●● இந்தியாவில் ஆண்டுதோறும் சுத்தமான குடிநீர் இன்மையால் வரும் நோய்க்கான மருத்துவச் செலவு, மற்றும் அதனால் ஏற்படும் உற்பத்தி இழப்பு ஆகியவற்றின் மதிப்பு அறுநூறு கோடி ரூபாய்!

●● மினாமாடா என்ற பெயர் உலக விஞ்ஞானிகளையே கதிகலங்கச் செய்யும் ஒரு பெயர். ஜப்பானிலுள்ள இந்த மீனவக் கிராமத்திற்கு அருகிலிருந்த தொழிற் சாலையிலிருந்து வெளியேறிய பாதரசக் கழிவுகளினால் அப் பகுதியிலிருந்த மீன்களெல்லாம் நச்சுத் தன்மையுடையனவாகி விட்டன. அதைச் சாப்பிட்ட மக்கள் நரம்பு மண்டலம் சேதமடைந்து மனநோய், பக்கவாதம், பேச்சு இழப்பு, கை, கால்கள் முடமாதல் போன்ற கடும் நோய்களால் பாதிக்கப்பட்டனர். பலர் இறந்தும் போயினர். அதே



• இமயமலைக் காடுகள்
அழிந்து வருகின்றன......



* "நீர்த் தேக்கங்களினால் நில அதிர்வு ஏற்படும்..."

நிலைதான் பம்பாயிலுள்ள கலு நதிக்கரையோரங்களில் அமைந்துள்ள தொழிற்சாலைக் கழிவுகளால் ஏற்படப் போகிறது. அந் நதியிலுள்ள மீன்களைச் சாப்பிடுபவர்களுக்கு மினாமாடா மக்களின் அபாயமே எதிர்நோக்கியிருக்கிறது என்று பம்பாயிலுள்ள விஞ்ஞானக் கழகம் ஆய்வு செய்து எச்சரித்துள்ளது. இருப்பினும் அரசியல்வாதிகளின் குறுக்கீடுகளினால் அந்தத் தொழிற் சாலைகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அதில் விரக்தியடைந்த மகாராஷ்டிர மாநில தூய்மைக்கேடு தடுப்பு அதிகாரிகள் சிலர் தங்கள் வேலையையே ராஜினாமாச் செய்து விட்டார்கள்!

* தாஜ்மகால்: "வெறும் கற்களின் குவியலாகும்..."



காடுகள்

●● இந்தியாவிலுள்ள நிலப்பரப்பில் வெறும் 23 சதவிகிதம்தான் காடுகளாக உள்ளன. அதிலும் பாதியளவுக்கே, காடுகள் என்று சொல்லத்தக்க முறையில் மரங்கள் அடர்ந்து உள்ளன. இந்த நிலையில் தான் ஆண்டுதோறும் பத்து லட்சம் ஹெக்டேர் பரப்புள்ள காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. இத்தனை வேகமாகக் காடுகள் அழிக்கப்பட்டு வரும் போது 51—முதல் 80—ம் ஆண்டு வரை அரசு காடு வளர்த்த பரப்பு வெறும் இருபது லட்சத்து எழுபதாயிரம் ஹெக்டேர்தான். அதிலும் நடப்பட்ட மரக்கன்றுகளில் ஐம்பது முதல் எழுபது சதம் வரையே பிழைத்து வளர்ந்தன. மேலும் இப்படி வளர்க்கப்பட்ட காடுகள் இயற்கைக் காடுகளைப் போல் பல்வேறு மரங்களைக் கொண்டதாக இல்லாமல் ஓரின மரங்களைக் கொண்டதாகவே இருப்பதாலும் இயற்கைச் சூழல் பாதிக்கப்படுகிறது.

●● 52—ல் ஏற்பட்ட தேசிய வனக் கொள்கையின்படி மலைப் பகுதிகளில் அறுபது சதம் காடுகள் இருக்க வேண்டும். இந்தக் கொள்கை ஏற்படுத்தப்பட்ட போது ஹிமாசலப் பிரதேசத்தில் இருந்த காடுகளின் அளவு 38.5 சதம். தற்போதிருப்பது வெறும் பதினெட்டு சதம்! இப்படி காடுகள் அழிக்கப்பட்டுக் கொண்டே வருவதால்தான் உலகிலேயே அதிக மழை பெய்யும் இடமாக இருந்த சிரபுஞ்சி தற்போது பொட்டல் காடாக மாறிக் கொண்டு வருகிறது.

●● கர்நாடகத்திலுள்ள ஒரு சாதாரண

ஏழைக் குடிமகன் தான் குடியிருப்பதற்கு வீடு கட்ட மூங்கில் வாங்க வேண்டுமானால் ஒரு டன்னுக்கு ஆயிரத்து இருநூறு ரூபாய் விலை கொடுக்க வேண்டும். ஆனால் ஒரு காகிதத் தொழிற்சாலையின் முதலாளி அதே மூங்கிலை டன் பதினைந்து ரூபாய் என்ற ரீதியில்தான் வாங்குகிறார்!

●● மரங்கள் அழிக்கப்பட்டால் மலைகளில் நிலச்சரிவு ஏற்படும். இப்படித்தான் இமய மலையில் கிரன்லா என்ற கிராமமே புதையுண்டு விட்டது.

அணைகள்

●● கேரள மின் தேவையில் ஏழு சதவிகிதத்தையே பூர்த்தி செய்யும் அமைதிப் பள்ளத்தாக்கு நீர் மின் திட்டம் நிறைவேற்றப்பட்டால் ஐந்து கோடி ஆண்டுகளாகப் பரிணாம வளர்ச்சி பெற்ற உயிரினங்கள் சுத்தமாகவே அழிந்துவிடக் கூடிய அபாயம் இருக்கிறது.

●● கர்நாடகத்தில் காளி நதி நீர்மின் திட்டக் கட்டுமானப் பணிகள் சரிவரத் திட்டமிடப்படாததால் நீர்ப் பிடிப்புப் பகுதியில் கடுமையான மண் அரிப்பும் மேற்பரப்பு மண் இழப்பும் ஏற்பட்டுள்ளன. இதனால் இனி என்றுமே பயிர் செய்யத் தகுதியற்ற பாலையாக இப் பகுதி மாற்றப்பட்டு விட்டது.


●● 'நீர்த்தேக்கங்களும் நில அதிர்வுகளும்' என்னும் ஆய்வு நூலில் அதன் ஆசிரியர்களான ஹர்ஷ் குப்தாவும், பி. கே. ரஸ்தோகியும் பெரிய அணைக்கட்டுகளில் நீரைத் தேக்குவதால் அப் பகுதியில் நில அதிர்வுகள் ஏற்படுகின்றன. அல்லது நில அதிர்வுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கின்றன என்பதற்கு முப்பது உதாரணங்களைக் கூறி விளக்கியுள்ளனர்.

காற்று

●● அனல் மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ள பகுதிகளைச் சுற்றியுள்ள நகரங்களிலும், கிராமங்களிலும் காற்றுத் தூய்மைக்கேடு மிகக் கடுமையான அளவில் உள்ளது.

●● தாஜ்மகாலுக்கு நாற்பது கி.மீ. தூரத்தில் நிறுவப்பட்டுள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து வெளியாகும் தூய்மைக்கேட்டால் காற்றில் அமிலத் தன்மை பரவுகிறது. "இந்த அமிலத் தன்மையின் அளவு கூடும் போது அது கண்டிப்பாக இன்னும் ஐம்பது முதல் நூறு ஆண்டுகளில் சீர் செய்ய முடியாத அளவுக்கு தாஜ்மகாலின் சலவைக் கற்களை நாசப்படுத்தி விடும். அப்போது அது வெறும் களிக்கற்களின் குவியலாக மாறிவிடக் கூடும்" என்கிறார் பேராசிரியர் தவே.

●● கர்நாடகத்திலுள்ள நலவகுலு கிராம



* அனல்மின் நிலையமா? — காற்றின் தூய்மைக்கேடு கடுமை

மக்கள் அங்குள்ள ஹரிஹர் பாலிஃபைபர்ஸ் என்ற ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து வெளியேறும் புகையின் நச்சுத் தன்மையால் பாதிக்கப்படுகிறார்கள். தோலில் வெடிப்பு, வடுக்கள், அரிப்பு, எரிச்சல் முதலியன ஏற்படுகின்றன. இருமல், மஞ்சள் காமாலை போன்ற நோய்களால் பாதிக்கப்படுகிறார்கள்.

வசிப்பிடம்

●● ஓரிடத்தில் ஆயிரம் பேர் உள்ளனர் என்றால் அங்கு ஆண்டுதோறும் எட்டு புதிய குடியிருப்புகள் கட்டப்பட வேண்டும். இந்தியாவில் 1.8தான் கட்டப்படுகிறது!

●● உலக வங்கி நடத்தியுள்ள ஓர் ஆய்வின்படி சென்னையில் ஐயாயிரம் ரூபாய் செலவில் ஒரு வீட்டைக் கட்டும் சக்தி கூட மூன்றில் இரண்டு பங்கினருக்குக் கிடையாது. எனவே மலிவு விலை வீட்டு வசதியெல்லாம் பெரும்பாலும் நடுத்தர வர்க்கத்தினரையே சென்றடைகிறது.

●● ஐக்கிய நாடுகள் அமைப்பு நிர்ணயித்துள்ள அளவுப்படி ஓர் ஆளுக்கு நாளொன்றுக்கு 182 லிட்டர் தண்ணீர் வழங்கப்பட வேண்டும். ஆனால் சென்னையில் 55 லிட்டரே வழங்கப்படுகிறது.

●● "பாக்டீரியா ஆய்வு முறையின்படி பார்த்தால் சென்னையின் பல பகுதிகளுக்கு வழங்கப்படும் மொத்தக் குடிநீரையுமே மனித உபயோகத்திற்கு ஏற்றதன்று என்றே முடிவு கட்ட வேண்டும். ஏனெனில், சோதனைக்குட்படுத்தப்பட்ட மாதிரிகளில் 96.5 சதவிகிதத்திற்கு மேல் மலத்தினால் தூய்மை கெட்டதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன" என்று தமிழ் நாட்டின் தலைமை நீர்ப் பகுப்பாளர் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

— பிரின்ஸ்.

வண்ணப்படம்: **கே. வி. ஆனந்த்.**

தமிழில் வெளியிட்டோர்: க்ரியா, 268, ராயப்பேட்டை நெடுஞ்சாலை, சென்னை — 600 014. விலை ரூ. 40.00



ரத்த தானம்



கிராமத்திலிருந்து பிழைப்பைத் தேடி மூன்று இளைஞர்கள் பட்டினத்திற்கு ஓடி வருகிறார்கள். வந்த இடத்தில் ஒரு மில்லில் வேலைக்குச் சேர்ந்து, தங்குவதற்கு இடமில்லாமல் முறுக்கு, அதிரசம் சுட்டுத் தரும் லட்சுமியிடம் போய் அடைக்கலம் புகுகிறார்கள்.

லட்சுமிக்கு ஒரு முன்கதை. பிரபு வேலை செய்யும் மில்லின் முதலாளினி ஒய். விஜயாவிற்கு ஒரு முன் கதை. இந்த இரண்டு முன் கதைகளில் அநாவசியமாக மாட்டிக் கொண்டு பிரபுவும், அவரது நண்பர்களான உடன்பிறவாச் சகோதரர்களும் ரத்த தானம் செய்கிறார்கள். அட, அட, அட!

எஸ். எஸ். சந்திரன் முதல் அரைமணி நேரத்திற்கு வந்து கிச்சு கிச்சு மூட்டுகிறார். சிரிப்பு வரவில்லை.

கிளுகிளுப்புக்காகக் கௌதமியைச் சேர்த்திருக்கிறார்கள். அவரும் இன்டர்வெல் வரை அவ்வப்போது தலைகாட்டி விட்டு அம்பேல் விட்டு விடுகிறார்.

அப்புறம் பிரபு, லக்ஷ்மி, லக்ஷ்மி, பிரபு.

கதை பின்னல்தான். கொஞ்சம் குழப்பமான பின்னல். பாட்டரியில் இயங்கும் கார்ப் பொம்மை இங்கே மோதித் திரும்பி, அங்கே மோதித் திரும்பிக் கடைசி கடைசியாக இன்னொரு ரூட்டில் ஓடுகிற மாதிரி ஓர் உணர்வு.

பிரபு, லட்சுமியிடம் தனது நண்பர்களைப் பற்றி உருக்கமாகச் சொல்லும் காட்சியில், செத்துப் போன நண்பனுக்காக அழும் நேரத்தில் — ஒற்றி எடுக்கப்பட்ட சிவாஜி.

கற்பழிக்க முயன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஜெயிலுக்குப் போன பிரபுவிற்காக வாதாட வரும் வக்கீல் — அட, நம்ம முறுக்கு, அதிரசம் தயாரிப்பாளர் நரை, திரை லட்சுமி. மூக்கில் விரல். (இந்த இடத்தில் மட்டும்)

லட்சுமி ஆரம்பத்திலிருந்து கடைசி வரை பிராமண பாஷையிலேயே பேசி என்ன சாதித்திருக்கிறார் என்று பார்த்தால் — ப்ச்.

க்ளைமாக்ஸில் வழக்கம் போல் டிஷ்யூங் டிஷ்யூங். குண்டாகி விட்ட இன்ஸ்பெக்டர் சிவச்சந்திரனும் கோதாவில் இறங்கி விடுகிறார்.

பிரபுவின் நண்பர்கள் இரண்டு பேரையும் சாகடிப்பதன் மூலம் டைரக்டர் நம்பியிடம் அனுதாப வாக்குகளைச் சம்பாதிக்க நினைத்தால், டைரக்டருக்கு ஒரு பெப்பே.


நண்பர்கள் எல்லாம் முறுக்கு விற்பதற்காகப் பாடும் பாடல் கேட்கிற மாதிரி இருக்கிறது.

லட்சுமி, கணவர் சிவச்சந்திரனுடன் இணைந்து தயாரித்திருக்கும் படம் இது. அனுபவ ஆற்றலைத் தேடினோம்; கிடைக்கவில்லை.

— ஜெயமன்மதன்




டீ காப்பியோடு சேர்த்தி: பிரிட்டானியா மாரி நேர்த்தி.




பிரிட்டானியா

மாரி

LINTAS BIN MRE P 16 2416 TM


துப்பறியும்
சூர்யா – கிரண்
நவீன் பிரதாப் முல்லிக்
கிரண் போல் நடித்தவள் துபாய் சென்றாள்.
சூர்யாவுக்கு ஃபோன் செய்தாள்.
துபாய்க்குப் பத்திரமாக வந்து சேர்ந்துவிட்டேன்.
சீக்கிரமே கல்தான் பற்றிய விவரங்களைச் சேகரிக்கிறேன்.
பாஸ்போர்ட் மோசடி செய்பவர்களைக் கண்டு பிடிக்க உள்ளூர் போலீஸின் உதவியைக் கேட்டிருக்கிறேன்.
இரண்டு நாட்கள் கழித்து மறுபடி ஃபோன் செய்கிறேன்; சரியா...?
இரு தினங்கள் சென்று...
எல்லா விவரங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, கல்தான் போல நடித்து எவனோ பாங்கிலிருந்து எல்லாப் பணத்தையும் வாங்கியிருக்கிறான் என்ற முடிவுக்கு வர வேண்டியிருக்கிறது.
கல்தானைப் போன்ற தோற்றத்தில் தாடியுடன் ஒரு நபர் பாங்குக்குள் நுழைந்ததைப் பார்த்த ஒரு சாட்சியைக் கண்டுபிடித்திருக்கிறேன். போலீஸுக்கும் தகவல் தெரிவித்திருக்கிறேன்.
போலீஸார் தீவிரமாக அவனைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள்.
9

(தொடரும்)



அத்தியாயம் 39

கஜேந்திர மோட்சம்

இத்தனை நேரமும் வானதி சிவிகையிலேயே இருந்தாள். சிவிகையை இப்போது இறக்கிப் பூமியில் வைத்தார்கள். வானதி பல்லக்கிலிருந்து வெளியே வந்து நின்றாள். நெருங்கி வந்த ஊர்வலத்தைப் பார்த்துக் கொண்டே நின்றாள். காளாமுகர்களும் அதே திசையைப் பார்த்துக் கொண்டு மௌனமாயிருந்தார்கள். தண்ணீர் ததும்பிய கழனிகளில் தவளைகள் இட்ட சத்தமும் வாடைக் காற்றில் மரக் கிளைகள் அசைந்த சத்தமும் மட்டுமே கேட்டன.

ஓடித் தப்பிக்கலாம் என்ற எண்ணமே வானதிக்குத் தோன்றவில்லை. அது இயலாத காரியம் என்று அவளுக்குத் தெரிந்திருந்தது. இந்தக் காளாமுகர்களிடமிருந்து ஏதேனும் யுக்தி செய்து தப்பினாலும் தப்பலாம். அன்பில் அநிருத்தரிடமிருந்து தப்புவது கனவிலும் நினைக்கமுடியாத காரியம். அவருடைய அறிவாற்றலும் இராஜதந்திரமும் சூழ்ச்சித் திறனும் உலகப் பிரசித்தமானது. அதோடு, சக்கரவர்த்தியிடம் அவர் மிகச் செல்வாக்கு உடையவர் என்பதும் உலகம் அறிந்தது. பழையாறையிலிருந்த அரண்மனைப் பெண்டிர் சோழ சாம்ராஜ்யத்தின் மற்ற அதிகாரிகளையும் சிற்றரசர்களையும் பற்றி வம்பு பேசுவார்கள். ஆனால் அநிருத்தரைப்பற்றி எதுவும் பேச மாட்டார்கள். அந்தப்புரத்தின் உள் அறைகளிலே மிக மிக அந்தரங்கமாகப் பேசினாலும் அவருடைய காதுக்கு எட்டிவிடும் என்று பயப்படுவார்கள். சக்கரவர்த்தி வேறு எதைப் பொறுத்தாலும் தம் அந்தரங்கப் பிரியத்துக்கும் மரியாதைக்கும் உரிய முதன் மந்திரியைப் பற்றி யாரும் அவதூறு பேசுவதைப் பொறுக்க மாட்டார் என்று அனைவரும் அறிந்திருந்தார்கள்.

இவையெல்லாம் வானதிக்கும் தெரிந்திருந்தன. இளவரசி குந்தவையும் அவரிடம் பெரும் மதிப்பு வைத்திருந்ததை அவள் அறிந்திருந்தாள். ஆகையால் அவரிடமிருந்து தனக்கு உதவியும் பாதுகாப்பும் கிடைக்கும் என்று எதிர்பார்த்தாள். இந்தக் காளாமுகர்கள் வேறு விதமாகச் சொன்னதும் அவளுடைய மனோதிடம் குலைந்தது. அவர் எதற்காக இந்த அநாதைப் பெண்ணைக் கைப்பற்றச் சொல்லியிருக்க வேண்டும்?... ஒருவேளை இவர்கள் பொய் சொல்லுகிறார்

களோ, என்னமோ! வருவது ஒரு வேளை பழுவேட்டரையர்களாக இருக்கலாம். அல்லது மதுராந்தகரும் அவருடைய பரிவாரங்களாகவும் இருக்கலாம்..... யாராயிருந்தாலும், ஒன்று நிச்சயம். இளவரசரைப் பற்றித் தனக்குத் தெரிந்த செய்தியை எவரிடமும் சொல்லக் கூடாது. அதனால் தனக்கு என்ன நேர்ந்தாலும் சரிதான்! தன் உயிரே போவதாயிருந்தாலும் சரிதான்!...... இல்தப் பற்றி எண்ணியதும் வானதி குலைந்த மனோதிடத்தை மீண்டும் பெற்றாள். வரட்டும், யாராயிருந்தாலும் வரட்டும். நான் கொடும்பாளூர் வீரவேளிர் பரம்பரையில் வந்தவள் என்பதை நிலை நாட்டுகிறேன். குந்தவைப் பிராட்டியின் அந்தரங்கத் தோழி என்பதையும் காட்டிக் கொடுக்கிறேன்.

ஊர்வலத்தில் ஒரு பல்லக்கு மட்டும் பிரிந்து முன்னால் வந்தது. மற்ற யானை, குதிரை பரிவாரங்கள் எல்லாம் சற்றுப் பின்னால் நின்றன.

முன்னால் வந்த பல்லக்கு வானதியின் அருகில் வந்ததும் பூமியில் இறக்கப்பட்டது. அதனுள்ளிருந்து முதன் மந்திரி அநிருத்தர் வெளியே வந்து நின்றார்.

அவர் சமிக்ஞை காட்டவே, சிவிகை சுமந்தவர்களும், காளாமுகர்களும் அப்பால் நகர்ந்து சென்றார்கள்.

அநிருத்தர் வானதியை மேலும் கீழும் உற்றுப் பார்த்து, "இது என்ன விந்தை! நான் காண்பது கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது கொடும்பாளூர் இளவரசிதானே! ஈழத்துப் போரில் வீர சொர்க்கம் எய்திய பராந்தகன் சிறிய வேளாரின் செல்வப் புதல்வி வானதிதானே?" என்று கேட்டார்.

"ஆம், ஐயா! நான் காண்பதும் கனவு அல்லவே? என் முன்னால் நிற்பது சோழ சாம்ராஜ்ய மக்களின் பயபக்தி மரியாதைக்குரிய அன்பில் அநிருத்தப் பிரம்மராயர்தானே? சக்கரவர்த்தியின் அந்தரங்க அபிமானத்தைப் பெற்ற முதன் மந்திரியார் தானே?" என்றாள் வானதி.

"தாயே! நான் யார் என்பதை நீ அறிந்திருப்பது பற்றிச் சந்தோஷப்படுகிறேன். இதனால், என்னுடைய வேலை எளிதாகும். உனக்கும் அதிக கஷ்டம் கொடுக்க வேண்டி ஏற்படாது!"

"ஆகா! அதைப் பற்றித் தங்களுக்குக் கவலை வேண்டாம். தங்களைப் போன்ற அமைச்சர் திலகத்தினால் எனக்குக் கஷ்டம் நேர்ந்தால் அதை நான் பொருட்படுத்த மாட்டேன். அதைக் கஷ்டமாகவே கருத மாட்டேன்."

"உன் வார்த்தைகள் மேலும் எனக்குத் திருப்தி அளிக்கின்றன. உன்னை அதிகமாகக் கஷ்டப்படுத்தும் உத்தேசமும் எனக்கு இல்லை. இரண்டொரு கேள்விகள் உன்னிடம் கேட்கப் போகிறேன். அவற்றுக்கு மறுமொழி சொல்லி விட்டால் போதும். பிறகு......"

"ஐயா! நீங்கள் என்னைக் கேள்வி கேட்பதற்கு முன்னால் நான் கேட்பதற்குச் சில கேள்விகள் இருக்கின்றன......"

"கேள், அம்மா! தயக்கமில்லாமல் கேள். நான் உன் தந்தையையொத்தவன். உன்னை என் மகளாகவே கருதுகிறேன். சில நாளைக்கு முன்பு உன் பெரிய தகப்பனார் சேநாதிபதி பூதி விக்கிரமகேசரியை மாதோட்டத்தில் சந்தித்தேன். உன்னை என்னுடைய மகளைப் போல் பாவித்துக் கவனித்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னார். அப்படியே வாக்களித்தேன்..."

"வந்தனம், என் தந்தையே! குழந்தைப் பிராயத்தில் தகப்பனை இழந்த எனக்குத் தந்தையாயிருப்பதாக முன்னொரு தடவை சக்கரவர்த்தி வாக்களித்தார்; இப்போது தாங்கள் ஒரு தந்தை தோன்றியிருக்கிறீர்கள். இனி எனக்கு என்ன குறை?"

"நீ என்னிடம் கேட்க விரும்பியதைச் சீக்கிரம் கேள், அம்மா! வானம் கறுத்து இருள் சூழ்கிறது. மழை வரும் போலத் தோன்றுகிறது."

"தந்தையே! சாலையோடு பல்லக்

இல் பிரயாணம் செய்து கொண்டிருந்த தங்கள் அருமை மகளை இந்தக் காளாமுகர்களை விட்டு வழி மறித்து இவ்விடம் பலவந்தமாகக் கொண்டு சேர்க்கும்படி செய்தது தாங்கள் தானா? இந்த அபலைப் பெண்ணின் கையைத் தீவர்த்திப் பிழம்பில் காட்டி எரிக்கும்படி சொன்னதும் தாங்கள் தானா? இந்தப் பயங்கரமான மனிதர்கள் அவ்வாறு தங்கள் மீது குற்றம் சாட்டினார்கள். நான் அதை நம்பவில்லை....''

''குழந்தாய்! இவர்கள் கூறியது உண்மையே. நான்தான் இவர்களுக்கு அவ்விதம் கட்டளையிட்டேன். அது குற்றமாயிருந்தால், அதற்குப் பொறுப்பாளி நானே...''

''மூன்று உலகமும் புகழ்பெற்ற சோழ நாட்டு முதன் மந்திரியே! தங்கள் பேச்சு எனக்கு வியப்பு அளிக்கிறது. 'குற்றமாயிருந்தால்' என்றீர்களே! தாங்கள் சகல தர்ம சாஸ்திரங்களையும் நீதி சாஸ்திரங்களையும் கற்றுணர்ந்தவர். சோழ சாம்ராஜ்யத்தின் சட்ட திட்டங்களையெல்லாம் நடத்தி வைக்கும் பொறுப்பு வாய்ந்தவர். நீதிக்கு மாறாகச் சக்கரவர்த்தியே காரியம்செய்தாலும்அதைக்கண்டித்து நியாயமாக நடக்கச் செய்யும் உரிமை வாய்ந்தவர். ஒரு காரியம் குற்றமா, இல்லையா என்பது தங்களுக்குத் தெரியாவிட்டால், வேறு யாருக்குத் தெரியும்? சாலையோடு பிரயாணம் செய்யும் அபலைப் பெண் ஒருத்தியைப் பலவந்தமாக வழிமறித்துத் தனி இடத்துக்குக் கொண்டு சேர்ப்பதும், அந்தப் பெண்ணைச் சித்திரவதை செய்வதாகப் பயமுறுத்துவதும் குற்றமா, இல்லையா என்று தங்களுக்குத் தெரியாமற் போனால் வேறு யாரைக் கேட்டுத் தெரிந்து கொள்வீர்கள்? சுந்தர சோழ சக்கரவர்த்தியின் இராஜ்யத்தில் வழிப் பிரயாணத்தில் எவ்வித பயமும் கிடையாது என்று கேள்விப்பட்டிருந்தேன். அதிலும், பெண்களைத் துன்புறுத்தும் துஷ்டர்களுக்குக் கடுந்தண்டனை உண்டு என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அதுகுற்றமா, இல்லையா என்றே தங்களுக்குச் சந்தேகம் தோன்றியிருப்பது மிக வியப்பான காரியம் அல்லவா?''

முதன் மந்திரி அநிருத்தர் திணறிப் போனார். இடையில் குறுக்கிட்டுப் பேச அவர் இரண்டு தடவை முயன்றும் பயன்படவில்லை. இப்போது அவர் குரலைக் கடுமைப் படுத்திக் கொண்டு, ''பெண்ணே! கொஞ்சம் பொறு! உன் பேச்சுத் திறமை முழுவதையும் காட்டி விடாதே! 'குற்றமா, இல்லையா?' என்று நான் சந்தேகப்படுவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. அது நான் கேட்கும் கேள்விக்கு நீ சொல்லும் விடையைப் பொறுத்திருக்கிறது. முக்கியமான இராஜாங்க இரகசியம் ஒன்றை அறிந்த பெண் ஒருத்தி நாகைப்பட்டினம் சாலையில் போவதாக நான் கேள்விப்பட்டேன். அந்தப் பெண்ணைத் தடுத்து நிறுத்தும்படி என் மனிதர்களுக்குக் கட்டளையிட்டேன். அவர்கள் என்னுடைய கட்டளையை நிறைவேற்றுவதாக எண்ணிக் கொண்டு செய்திருக்கிறார்கள். ஒருவேளை அவர்கள் தவறு செய்திருக்கலாம். இராஜாங்க சதி வேலையில் ஈடுபட்ட பெண்ணுக்குப் பதிலாகக் குடந்தை சோதிடரிடம் சோதிடம் கேட்டுவிட்டுத் திரும்பிய உன்னைக் கைப்பற்றியிருக்கக் கூடும். மகளே! நீ சொல்! குடந்தையிலிருந்து பழையாறைக்குத் திரும்புவதுதான் உன் நோக்கமா? சிவிகை தூக்கிகள் தவறாக உன்னை நாகைப்பட்டினம் சாலையில் கொண்டு போனார்களா? இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்த ஒருவனை அந்தரங்கமாகப் பார்க்கும் நோக்கத்துடன் நீ நாகைப் பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?...... இல்லையென்று நீ சொல்லி நிரூபித்தாயானால், இவர்கள் செய்தது குற்றமாகும். அதில் எனக்கும் பங்கு உண்டுதான்! என்ன சொல்கிறாய், பெண்ணே? இன்னும் தெளிவாகவே கேட்டு விடுகிறேன். இளவரசன் அருள்மொழி வர்மனை இரகசியமாகச் சந்திப்பதற்காக நீ நாகைப்பட்டினத்துக்குப் புறப்படவில்லையே?......''

இளவரசி இப்போது கதிகலங்கிப் போனாள். முதன் மந்திரி அநிருத்த

ரை எரித்து விடலாமா என்று அவளுக்கு அவ்வளவு ஆத்திரம் வந்தது. ஆனால் ஆத்திரத்தை வெளியில் காட்டுவதில் பயனில்லை என்று உணர்ந்தாள். கள்ளங்கபடம் அறியாதிருந்த அந்தச் சாதுப் பெண்ணுக்கு அப்போது எங்கிருந்தோ ஆழ்ந்து சிந்திக்கும் சக்தியும் சூழ்ச்சித் திறனும் ஏற்பட்டிருந்தன. ஆகையால், முதன் மந்திரியின் கேள்விக்கு நேரடியாகப் பதில் சொல்லாமல், "ஐயா! இது என்ன வார்த்தை! இளவரசர் அருள்மொழி வர்மரையா இராஜாங்கத்துக்கு விரோதமாகச் சதி செய்தார் என்று சொல்லுகிறீர்கள்? சக்கரவர்த்தியின் அருமைக் குமாரரைப் பற்றி நீர் இவ்விதம் பேசுவது குற்றம் அல்லவா? சோழ குலத்துக்கு எதிரான சதி அல்லவா? ஆகா! இதைப் பற்றி நான் உடனே குந்தவைப் பிராட்டியிடம் சொல்லியாக வேண்டும்!" என்றாள்.

"பேஷாகச் சொல், தாயே! என்னுடைய கேள்விக்குப் பதில் சொல்லி விட்டால், பிறகு ஒரு கணங்கூட இங்கே தாமதிக்க வேண்டிய அவசியமில்லை. நானே உன்னை இளைய பிராட்டியிடம் பத்திரமாய்க் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்......"

"தங்களுடைய கேள்விக்குப் பதில் சொல்லா விட்டால்?......"

"சொல்லாவிட்டால் என்பதே கிடையாது, தாயே! இந்தக் கிழவனிடமிருந்து அவ்வளவு சுலபமாக யாரும் தப்ப முடியாது. என் கேள்விக்குப் பதில் சொல்லியே தீர வேண்டும்" என்றார் அமைச்சர்.

"ஐயா! சர்வ வல்லமை படைத்த முதல் மந்திரி அநிருத்தப் பிரம்மராயரே! ஒரு சக்தியும் இல்லாத இந்த ஏழை அபலைப் பெண்ணிடமிருந்து தாங்கள் இளவரசரைப் பற்றி எதுவும் அறிய முடியாது. இந்த யமகிங்கரர்கள் சற்று முன் பயமுறுத்தியது போல் என் கையைத் தீயிலிட்டு எரித்த போதிலும் நான் ஒன்றும் சொல்லப் போவதில்லை."

"கொடும்பாளூர் வீர வேளிர் குலத்துதித்த கோமகளே! உன்னுடைய மன உறுதியைக் கண்டு மெச்சுகிறேன். ஆனால் இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று நீ கூறினாயே, அது அவ்வளவு சரியன்று. ஏற்கெனவே, சில விவரங்கள் நீ சொல்லி விட்டாய். இன்னும் ஒரு விஷயத்தையும் சொல்லி விட்டால், அதிக நஷ்டம் ஒன்றும் நேர்ந்துவிடாது. என் வேலையும் எளிதாய்ப் போய் விடும்......"

வானதி மறுபடியும் திடுக்குற்றாள். வாய் தவறி ஏதாவது சொல்லி விட்டோமோ என்று நினைத்தபோது அவளுடைய நெஞ்சை யாரோ இறுக்கிப் பிடிப்பது போலிருந்தது. உடம்பெல்லாம் பதறியது. இல்லை, நான் ஒன்றும் சொல்லி விடவில்லை. இந்தக் கிழவர் என்னை ஏமாற்றப் பார்க்கிறார் என்று எண்ணிச் சிறிது தைரியம் அடைந்தாள்.

"ஐயா! வேதம் சொல்லும் உம்முடைய வாயிலிருந்து பொய் வரலாமா? சுந்தர சோழரின் முதல் அமைச்சர் இல்லாததைக் கற்பித்துச் சொல்லலாமா? நான் இளவரசரைப் பற்றி எதுவும் கூறவில்லையே? நான் ஏதோ கூறியதாகச் சொல்கிறீரே?" என்றாள்.

"யோசித்துப் பார், தாயே! நன்றாக எண்ணிப் பார்! ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசாமலேயே அதைப் பற்றிய விவரத்தைத் தெரிவிக்க முடியாது என்று நீ கருதினால், அது பெரிய தவறு. நீ சொல்லாமற் சொன்ன விவரத்தைக் குறிப்பிடுகிறேன்; கேள்! இளவரசர் அருள்மொழி வர்மர் கடலில் மூழ்கி இறந்து விட்டதாக உலகமெல்லாம் பேச்சாயிருக்கிறது. குடி மக்கள், அதிகாரிகள் அனைவரும் சோகக் கடலில் ஆழ்ந்திருக்கிறார்கள். உனக்கும் அந்தச் செய்தி தெரியும். அப்படியிருக்கும் போது, நீ இளவரசரைப் பற்றி ஒரு விவரமும் சொல்ல மாட்டேன் என்று



கூறினாய். அதிலிருந்து வெளியாவது என்ன? இளவரசர் இறக்கவில்லையென்பது உனக்குத் தெரியும் என்று ஏற்படுகிறது. அவரைப் பார்ப்பதற்கு நீ நாகைப்பட்டினம் போகிறாய் என்று நான் சொன்னதையும் நீ மறுக்கவில்லை. 'இறந்து போன இளவரசரை நான் எப்படிப் பார்க்க முடியும்?' என்று நீ திருப்பிக் கேட்கவில்லை. 'நாகைப்பட்டினம்போகவில்லை,வேறுஇடத்துக்குப்போகிறேன்' என்றும் நீ சொல்லவில்லை. ஆகையால் நாகைப்பட்டினத்தில் இளவரசர் உயிரோடு இருக்கிறார் என்பதையும், அவரைப் பார்க்கப் போகிறாய் என்பதையும் ஒப்புக் கொண்டு விட்டாய்! மிச்சம் நீ சொல்ல வேண்டிய விவரங்கள் இரண்டே இரண்டுதான்; நாகைப்பட்டினத்தில் இளவரசர் எங்கே இருக்கிறார் என்று சொல்ல வேண்டும்; அந்தச் செய்தி உனக்கு எப்படித் தெரிந்தது என்றும் சொல்ல வேண்டும். இந்த இரண்டு விவரங்களையும் நீ கூறிவிட்டால், அப்புறம் ஒரு கணங்கூட இங்கே தாமதித்து இந்தக் கிழவனோடு பேசிக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. உனக்கு எங்கே போக விருப்பமோ அங்கே போகலாம்.''

வானதியின் உள்ளம் இப்போது அடியோடு கலங்கிப் போய்விட்டது. முதன் மந்திரி கூறியது உண்மை என்றும், தன்னுடைய அறியாமையினால் இளவரசரைக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும் உணர்ந்தாள். தான் செய்து விட்ட குற்றத்துக்குப் பிராயச்சித்தம் உண்டா? கிடையவே கிடையாது! உயிரை விடுவதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.

''ஐயா! தாங்கள் என் பெரிய தந்தையின் ஆப்த நண்பர் என்று சொன்னீர்கள். என்னைத் தங்கள் மகள் என்றும் உரிமை கொண்டாடினீர்கள். தங்களை ஒன்று கேட்டுக் கொள்கிறேன். நான் நாகைப்பட்டினம் போகவும் விரும்பவில்லை; பழையாறைக்குப் போகவும் விரும்பவில்லை......''

''கொடும்பாளூருக்குப் போக விரும்புகிறாயாக்கும். அது நியாயந்தான். அங்கேயே உன்னைக் கொண்டு போய்ச் சேர்ப்பிக்கிறேன்.''

''இல்லை, ஐயா! கொடும்பாளூர் போகவும் நான் விரும்பவில்லை. இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக விரும்புகிறேன். தங்களுடைய ஆட்களிடம் சொல்லி அதோ தெரியும் பலி பீடத்தில் என்னைப் பலி கொடுத்து விடச் சொல்லுங்கள். நான் தயாராக இருக்கிறேன்!'' என்று சொன்னாள்.


''தாயே! உன்னுடைய விருப்பம் எதுவோ அதை நிறைவேற்றி வைப்பதாகச் சொன்னேன், ஆகையால் மறு உலகத்துக்குத்தான் நீ போக வேண்டும் என்றால், அங்கேயே அனுப்பி வைக்கிறேன். ஆனால் அதற்கு முன்னால் என்னு

டைய கேள்விகளுக்கு விடை சொல்லியாக வேண்டும்.''

''ஐயா! என்னை வீணில் துன்புறுத்த வேண்டாம். நான் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்லப் போவதில்லை. என்னைத் தங்கள் மகளாகக் கருதுவதாய்ச் சற்று முன் தாங்கள் சொன்னது உண்மையாயிருந்தால்...''

''மகளே! அதில் யாதொரு சந்தேகமுமில்லை. உன்னை நான் பெற்ற மகளாகவே கருதுகிறேன். உன் குடும்பத்தார் எனக்கு எவ்வளவு வேண்டியவர்கள் என்பது ஒரு வேளை உனக்குத் தெரிந்திராது! உன் பெரிய தந்தையும் நானும் நாற்பது ஆண்டுகளாகத் தோழர்கள். ஆனால் இராஜாங்கக் காரியங்களில் சிநேகம், உறவு என்றெல்லாம் பார்ப்பதற்கில்லை. பெற்ற தந்தை என்றும் பார்க்க முடியாது; அருமைக் குமாரி என்றும் பார்க்க முடியாது. ஏன்? சக்கரவர்த்தியின் காரியத்தையே பார்! தமது சொந்தக் குமாரன் இராஜாங்கத்துக்கு விரோதமான சதி செய்தபடியால், அவனைச் சிறைப்படுத்திக் கொண்டு வரும்படி கட்டளையிடவில்லையா?''

''ஐயா! பொன்னியின் செல்வரைப் பற்றியா இவ்வாறெல்லாம் பேசுகிறீர்கள்? அவர் இராஜாங்கத்துக்கு விரோதமாக





என்ன சதி செய்தார்?''

''ஓகோ! உனக்கு அது தெரியாது போலிருக்கிறது. இலங்கைக்குப் போர் செய்யப் போவதாகச் சொல்லி விட்டுப் பொன்னியின் செல்வர் போனார். அங்கே நமது வீரப் படைகள் இலங்கைப் படைகளை முறியடித்தன. அந்தச் சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொண்டு இளவரசர் அருள்மொழி வர்மர் இலங்கைச் சிம்மாசனத்தைக் கைப்பற்றிக் கொள்ளப் பார்த்தார். இது இராஜாங்கத்துக்கு விரோதமான சதி அல்லவா? இதை அறிந்ததும் சக்கரவர்த்தி தமது திருக்குமாரரைச் சிறைப்படுத்திக் கொண்டு வருவதற்குக் கட்டளை அனுப்பினார். இளவரசர் அக்கட்டளையை மீறிக் கடலில் வேண்டுமென்று குதித்துத் தான் இறந்துவிட்டதாகப் பொய்ச் செய்தியைப் பரப்பச் செய்தார். பிறகு, கரையேறி எங்கேயோ ஒளிந்து மறைந்திருக்கிறார். இந்த விவரங்கள் உனக்குத் தெரியாதபடியால் அவர் இருக்குமிடத்தை நீ சொல்ல மறுத்தாய் போலும். அப்படிப்பட்ட இராஜாங்க விரோதியை நீ மறைத்து வைக்க முயன்றால், அதுவும் பெரிய குற்றமாகும். ஆகையால், சொல்லிவிடு அம்மா!'' என்றார் முதன் மந்திரி.

வானதி இதுவரை அடக்கி வைத்திருந்த ஆத்திரமெல்லாம் இப்போது பொங்கிப் பீறிக் கொண்டு வெளி வந்தது. பொன்னியின் செல்வரைக் குறித்து முதன் மந்திரி கூறிய தூஷணைகளை எல்லாம் அவளால் பொறுக்க முடியவில்லை. அந்த சாதுப் பெண் வீராவேசமே உருவெடுத்தவள் போலாகிக் கூறினாள்: —

''ஐயா! தாங்கள் கூறியது ஒன்றும் உண்மையில்லை. இளவரசர் மீது வீண் அபாண்டம் கூறினீர்கள். இலங்கையில் நமது படைகள் சோர்வடைந்திருந்த காலத்தில் இளவரசர் அங்கே சென்றதினாலேயே உற்சாகங் கொண்டு போராடினார்கள். பொன்னியின் செல்வர்தான் இலங்கையில் நம் வெற்றிக்குக் காரணமானவர் என்பது உலகமறிந்த உண்மை. அவருடைய வீரத்தையும் மற்ற குணாதிசயங்களையும் பார்த்து இலங்கை மக்கள் அவர் மீது அன்பு கொண்டார்கள். போரில் புறமுதுகிட்டோடி ஒளிந்து கொண்ட தங்கள் அரசனுக்குப் பதிலாக இளவரசரைத் தங்கள் அரசனாக்கிக் கொள்ள விரும்பினார்கள். புத்த குருமார்கள் இலங்கைச் சிம்மாசனத்தைப்பொன்னியின்செல்வருக்கு அளித்தார்கள். பொன்னியின் செல்வர் சிம்மாசனம் தமக்கு வேண்டாம் என்று மறுதலித்தார். அத்தகைய நேர்மையானவரைக் குறித்துத் தாங்கள் இவ்வளவு அவதூறு சொல்லியிருக்கிறீர்கள். இளவரசர் தந்தையின் கட்டளை என்று அறிந்ததும் தானே சிறைப்பட்டு நேரே தஞ்சைக்குப் புறப்பட்டு வந்தார். அவர் கடலில் வேண்டுமென்று குதிக்கவில்லை. தம் அருமைச் சிநேகிதரின் உயிரைக் காப்பாற்றுவதற்காகவே குதித்தார். சக்கரவர்த்திக்கு விரோதமாக அவர் சதி செய்யவும் இல்லை. இந்த அபாண்டங்களையெல்லாம் கேட்க என் செவிகள் என்ன துர்ப்பாக்கியம் செய்தனவோ தெரியவில்லை!...''

அநிருத்தர் இலேசாகச் சிரித்துக் கொண்டே ''பெண்ணே! அருள்மொழி வர்மருக்காக நீ இவ்வளவு ஆத்திரமாகப் பரிந்து பேசுவதைக் கேட்பவர்கள் என்ன நினைப்பார்கள் தெரியுமா? நீங்கள் இருவரும் காதலர்கள் என்று நினைப்பார்கள்!'' என்றார்.

''ஐயா! தாங்கள் இப்போது கூறியதில் மட்டும் பாதி உண்மை. நான் அவருக்கு என் உள்ளத்தைப் பறிகொடுத்திருப்பது மெய்தான். இதைத் தங்களிடமிருந்து நான் மறைக்க விரும்பவில்லை. ஆனால் அவர் இந்த அநாதைப்பெண்ணுக்குத்தன் உள்ளத்தில் இடங் கொடுத்திருப்பதற்கு நியாயம் இல்லை. வானத்தில் ஜொலிக்கும் சந்திரன் மீது அன்றில் பறவை காதல் கொள்ளலாம். ஆனால் சந்திரனுக்கு அன்றில் பறவை ஒன்று இருப்பதே தெரிந்திராது.''

''ஆஹா! என் அருமைச் சிநேகிதரின் மகள் இவ்வளவு சிறந்த கவிதா ரஸிகை என்பது இதுவரை எனக்குத் தெரியாமற் போயிற்று. இளைய பிராட்டி குந்தவையின் அந்தரங்கத் தோழி அல்லவா நீ?'' என்றார் முதன் மந்திரி.

''போதும் போதும்! தங்கள் புகழ்ச்சியைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒன்று என்னை என் வழியே போவதற்கு விடுங்கள். இல்லாவிடில் உங்கள் ஆட்களை அழைத்துக் கட்டளையிடுங்கள்.''

''பெண்ணே! கொஞ்சம் பொறு! பொன்னியின் செல்வரைப் பற்றி உனக்கு எவ்வளவோ விவரங்கள் தெரிந்திருக்கின்றன. ஆகையால் அவர் இப்போது இருக்குமிடமும் உனக்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டும். அதை மட்டும் சொல்லி விடு. உன்னை உடனே உன் பெரிய தந்தையிடம் அனுப்பி வைக்கிறேன். அவர் இலங்கையிலிருந்து திரும்பி வந்து கொண்டிருக்கிறார். இத்தனை நேரம் மதுரைக்கு வந்திருப்பார்...''

''ஐயா! தங்களைப் போன்ற வஞ்சகம் நிறைந்த மனிதருடன் சிநேகமாயிருப்பவர் என்னுடைய பெரிய தந்தை அல்ல. எனக்கு உற்றார் உறவினர் யாருமில்லை. இளவரசரைப் பற்றி எல்லாரும் அறிந்திருப்பதையே நான் சொன்னேன். வேறு எதுவும் என்னிடமிருந்து தாங்கள் தெரிந்து கொள்ள முடியாது. வீண் தாமதம் செய்ய வேண்டாம்.......''

''தாமதம் செய்யக் கூடாதுதான். பலமாக மழை வரும் போலிருக்



அருள்வாக்கு

வியாதிகளைப் போக்கிக் கொண்டு தீர்க்காயுஸுடன் வாழ்வதற்காகத்தான் ஆயுர்வேதத்தை நம் முன்னோர்கள் கொடுத்திருக்கிறார்கள்.

இதுதான் முக்கியமாக மேல் பார்வைக்குத் தெரிந்தாலும் உள்ளுக்குள்ளே இதிலும் பாரமார்த்திகமான லக்ஷ்யத்தில் சேர்க்கிற ஒரு நோக்கம் இருக்கிறது.

எவ்வளவோ பாபம் பண்ணித்தான் இந்த ஜன்மாவை அடைந்து அலையாக அலைந்து கொண்டு, சாச்வத ஸௌக்யத்தைத் தெரிந்து கொள்ளாமல் உழன்று கொண்டிருக்கிறோம். இப்போதாவது புண்யங்களைப் பண்ணிப் பண்ணிப் பாபத்தைக் கரைக்க ஆரம்பிக்க வேண்டாமா? புண்ய கார்யங்களை, அநேக தர்மங்களைப் பண்ணியாக வேண்டும். அவற்றை இந்த உடம்பு இருக்கும் பொழுதுதான் செய்ய முடியும். சரீரம் இருந்தால்தான் பலவித பரோபகாரப் பணிகளைச் செய்ய முடியும். இருந்தால் மட்டும் போதாது. பலமுள்ளதாகவும் இருக்க வேண்டும். அப்போதுதான் பிறருக்காக நிறைய ''ச்ரமதான்'' பண்ணிப் பாபத்தைக் கரைத்துக் கொள்ள முடியும். கர்மாவைக் கழிப்பதற்காக இடுப்பொடிய யாகம் பண்ணுவது, அல்லது நவாபரண பூஜை பண்ணுவது, நடந்தே திருப்பதி மலை ஏறுவது, நூற்றியெட்டு, ஆயிரத்தெட்டு பிரதக்ஷிணம், கிரிப் பிரதக்ஷிணம் செய்வது, பத்மாஸனத்தில் கூனாமல் குறுகாமல் உட்கார்ந்து கொண்டு பிராணாயாமம் செய்வது, தியானம் செய்வது என்றால் இதற்கெல்லாம் வியாதியும் வக்கையும் இல்லாத சரீரமிருந்தால்தானே முடியும்?

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.

கிறது...''

''மழை மட்டுந்தானா வரும்? தங்களைப் போன்றவர்கள் உள்ள இடத்தில் இடி, மின்னல், பிரளயம் எல்லாம் வரும்.''

வானதியின் கூற்றை ஆமோதிப்பதுபோல் அச்சமயம் ஒரு நெடிய மின்னல் வானத்தின் ஒரு முனையிலிருந்து இன்னொரு முனை வரையில் பாய்ந்தோடி ஜொலித்து விட்டு மறைந்தது. மின்னல் மறைந்து இருள் சூழ்ந்ததும் அண்ட கடாகங்கள் அதிரும்படியான பேரிடி ஒன்று இடித்தது.

''பெண்ணே! இளவரசன் அருள்மொழி வர்மன் எங்கே இருக்கிறான் என்று சொல்ல மாட்டாயா?''

''சொல்ல மாட்டேன்.''

''நான் ஊகித்தது ஊர்ஜிதமாகிறது. இளவரசன் மறைந்திருக்கும் இடத்துக்கு நீ ஏதோ இரகசியச் செய்தி கொண்டு போவதற்காகப் புறப்பட்டாய். இது உண்மையா, இல்லையா?''


''ஐயா! வீண் வேலை! தங்கள் கேள்வி எதற்கும் இனி நான் மறுமொழி சொல்ல முடியாது.''

''அப்படியானால், இராஜாங்கத்துக்குத் துரோகமாகச் சதி செய்பவர்களுக்கு அளிக்க வேண்டிய கடுந்தண்டனையை உனக்கும் அளிக்க வேண்டியதுதான். வேறு வழி இல்லை.''

''தண்டனையை ஏற்பதற்குக் காத்திருக்கிறேன், ஐயா! பலிபீடத்தில் என் தலையை வைக்க வேண்டும் என்றால், அப்படியே செய்கிறேன்.''

''சே ச் சே! நீ கொடும்பாளூர் வேளிர் மகள்! உனக்கு அவ்வளவு அற்பமான தண்டனை கொடுக்கலாமா? அதோ பார், அந்த யானையை!''

வானதி அவர் காட்டிய திசையைப் பார்த்தாள். கன்னங்கரிய குன்றினைப் போல் யானை ஒன்று நின்று கொண்டிருந்தது. கருங்கல்லினால் செய்து கரிய மை பூசப்பட்ட உருவத்தைப் போல் அது தோன்றியது. அதன்



Bisleri CLUB

SODA

No angry fizz from impurities

Bisleri Club bubbles gently
An angry fizz can be a sign of impurity. Try this test — add a pinch of cigarette ash or dust to soda and see how it fizzes. Bisleri Club bubbles gently, because it's pure.

Bisleri Club retains its fizz longer
When the fizz escapes in a rush, the soda is left flat. Bisleri Club is a pure soda, it bubbles gently, so the fizz is retained longer.

Bisleri Club contains 100% safe water
The water used in Bisleri Club Soda is filtered and purified five times. It is then silver-sterilized to ensure that the water is totally safe.

Bisleri Club uses filtered carbondioxide
To ensure 100% purity, the carbon-dioxide gas used in Bisleri Club Soda is heated, filtered and purified.

Bisleri Club uses PVC lined caps
Cork lined caps tend to disintegrate and blacken due to mould growth. Minute pieces get mixed with the soda. Besides, the egg albumen used as an adhesive in cork lined caps imparts an unpleasant eggy smell. That's why Bisleri Club Soda uses only PVC lined caps.

கருமையை நன்கு எடுத்துக் காட்டிக் கொண்டு இரண்டு வெள்ளைத் தந்தங்கள் நீண்டு வளைந்து திகழ்ந்தன.

"பெண்ணே! கஜேந்திர மோட்சம் என்று கேள்விப்பட்டிருக்கிறாய் அல்லவா? யானையின் அபயக் குரல் கேட்டுத் திருமால் ஓடிவந்து முதலையைக் கொன்று கஜேந்திரனை மோக்ஷத்திற்கு அனுப்பினார். அதற்குப் பதிலாக, இந்தக் கஜேந்திரன் எத்தனை எத்தனையோ பேரை அந்தத் திருமால் வாசம் செய்யும் மோட்ச உலகத்துக்கு அனுப்பியிருக்கிறது. நீ இந்த உலகத்தை விட்டு மறு உலகத்துக்குப் போக வேண்டும் என்று சொன்னாய் அல்லவா? உன் விருப்பத்தை இந்த யானை கண் மூடித் திறக்கும் நேரத்தில் நிறைவேற்றி வைக்கும். அது தன் துதிக்கையினால் உன்னைச் சுழற்றி எடுத்து வீசி எறிந்தால் நீ நேரே மோட்ச உலகத்திலேயே போய் விழுவாய்!"

இவ்விதம் கூறிவிட்டு முதன் மந்திரி அநிருத்தர் சிரித்தார். அந்தச் சிரிப்பு வானதிக்கு ரோமாஞ்சனத்தை உண்டாக்கிற்று. இந்த மந்திரி மனிதர் அல்ல, மனித உருக்கொண்ட அரக்கன் என்று எண்ணினாள்.

"கோமகளே! முடிவாகக் கேட்கிறேன். பொன்னியின் செல்வன் இருக்குமிடத்தைச் சொல்கிறாயா? அல்லது இந்தக் கஜேந்திரனுடைய துதிக்கை வழியாக மோட்சத்துக்குப் போகிறாயா?" என்ற வார்த்தைகளைக் கேட்டதும், வானதி மீண்டும் மனோதிடம் பெற்றாள்.

"ஐயா! கஜேந்திரனை என்னிடம் வரச் சொல்கிறீர்களா? அல்லது நானே கஜேந்திரனிடம் போகட்டுமா?" என்று கம்பீரமாகக் கேட்டாள்.

அநிருத்தர் கையினால் சமிக்ஞை செய்தார். அத்துடன் அவர் வானதிக்கு விளங்காத பாஷையில் ஏதோ சொன்னார். யானை பூமி அதிரும்படி நடந்து வந்தது. வானதியின் அருகில் வந்தது. தன்னுடைய நீண்ட துதிக்கையினால் வானதியின் மலரினும் மிருதுவான தேகத்தைச் சுற்றி வளைத்தது. அவளைப் பூமியிலிருந்து தூக்கியது.


அந்தச் சில கண நேரத்தில் வானதியின் உள்ளத்தில் பற்பல எண்ணங்கள் அலை அலையாய்ப் பாய்ந்து மறைந்தன. தான் அச்சமயம் அவ்வளவு தைரியத்துடன் இருப்பதை நினைத்து அவளுக்கே வியப்பாயிருந்தது. இளையபிராட்டி குந்தவை தேவி என்னைப் பயங்கொள்ளி என்றும், கோழை என்றும் அடிக்கடி சொல்லுவாரே? அவர் இச்சமயம் இங்கிருந்து என்னுடைய தைரியத்தைப் பார்த்திருந்தால் எத்தனை ஆச்சரியப்படுவார்? அவருக்கு என்றாவது ஒரு நாள் இச்சம்பவத்தைப் பற்றித் தெரியாமலிராது. பொன்னியின் செல்வருக்காக நான் தீரத்துடன் உயிரை விட்டது பற்றி அறிந்து கொள்வார். அதை இளவரசரிடமும் சொல்லியே தீருவார். அப்போது இளவரசர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? அந்த ஓடக்காரப் பெண்ணைக் காட்டிலும் கொடும்பாளூர் வேளார் மகள் தைரியசாலி என்று அப்போதாவது அறிந்து கொள்வார் அல்லவா?

யானையின் துதிக்கை மெள்ள மெள்ள மேலே எழுந்தது. அத்துடன் வானதியும் மேலே ஏறினாள். ஆம், ஆம்! அந்தப் பிரம்மராட்சதர் கூறியது உண்மைதான். இந்தக் கஜேந்திரன் என்னை நேரே மோட்சத்துக்கே அனுப்பிவிடப் போகிறது! அடுத்த கணம் என்னை வீசி எறியப் போகிறது! எத்தனை தூரத்தில் போய் விழுவேனோ தெரியவில்லை. ஆனால் விழும் போது எனக்குப் பிரக்ஞை இராது. அதற்குள் உயிர் போய்விடும்!

வானதி இப்போது யானையின் மத்தகத்துக்கு மேலேயே போய்விட்டாள். கண்களை இறுக மூடிக் கொண்டாள். யானை தன் துதிக்கையைச் சுழற்றியது. வானதியை விசிறி எறிவதற்குச் சித்தமாயிற்று. அந்தச் சமயத்தில் கடவுள் அருளால் வானதி தன் சுய நினைவை இழந்து விட்டாள்.

(தொடரும்)

போட்டிக் கதை — 5



நெஞ்சு பொறுக்குதில்லையே

கோழி ஒன்று சுற்றும் முற்றும் பார்த்துக் கொண்டு குனிந்து, கண்ணுக்குத் தெரியாத எதையோ கீழேயிருந்து கொத்தித் தின்று கொண்டிருந்தது.

அந்தக் காலை வேளையில் இரண்டு நாய்க் குட்டிகள் ஒன்றன் மீது ஒன்றாக விழுந்து புரண்டு விளையாடிக் கொண்டிருந்தன. அன்று சுதந்திர தினம் என்பது அதற்குக் கூடத் தெரியும் போலிருக்கிறது. அருகே ஒரு குழந்தை, மண்ணை வாரி மேலே போட்டுக் கொண்டு தன் அழுக்குடலுக்கு இன்னும் அழுக்கேற்றிக் கொண்டிருந்தது. ஒருவேளை, அந்த இந்தியச் சுதந்திர மண் தனக்கும் சொந்தம் என்று அதற்குத் தெரிந்திருக்குமோ என்னவோ?

ஒரு பெண்மணி முறத்தில் தேடிப் பிடிக்க வேண்டிய அளவிற்குக் கொஞ்சம் அரிசியை வைத்துக் கொண்டு, அதிலும் 'கல்' பொறுக்கிக் கொண்டிருந்தாள். அவள் வீட்டில் வெறும் கஞ்சிதான். ஆனால் அதைப் பற்றி அவள் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில், அவளது கணவன் கூலி வேலை செய்து விட்டு நாளை கூலி வாங்கி வந்த பின்பு, மறுநாள் அவள் 'கறிச்சோறு' கூட

விவேக் சங்கர்

(அறிமுக எழுத்தாளர்)

சாப்பிடுவான். இதெல்லாம் அந்த சேரியில் உள்ளவர்களுக்குச் சகஜம்.

"இந்தாமே! இன்னாத்துக்கு இப்படி புள்ளையைப் போட்டு அடிக்கறே?" — அதட்டிக் கொண்டே வந்து அவள் தன் மகனை அடிப்பதைத் தடுத்தான், ரிக்ஷாக்கார ரங்கன்.

"பின்னே இன்னாய்யா! இருந்ததே ஒரு கிழிஞ்ச சொக்கா. அத்தையும் எங்கேயோ கழட்டிப் போட்டுட்டு வந்து நிக்கறான்."

"டேய் எந்திரிடா! ஆத்தா சொல்றது நெசமா? எங்கேடா போச்சு சொக்கா?"

பயத்துடன் நடுங்கிக் கொண்டே மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தான் சிறுவன்.

"இல்லை நைனா! சொக்காயைத் தோச்சுக் காயப்போட்டிருக்கறேன்."

"பெரிய பனாரஸ் சொக்கா! தோச்சுக் காயப்போட்டுக்கறாராம்!" — முணுமுணுத்துக் கொண்டே நகர்ந்தான் ரங்கன்.

மகனை வாரியணைத்துக் கொண்டாள் அவள். "ஏன் ராசா! மொதலே சொல்லக் கூடாது. இப்படி அடிச்சிருக்க மாட்டேன் இல்லே. ஆமாண்டா ராசா! எதுக்குச் சொக்காயைத் தோச்சுப் போட்டுக்கறே?" ஆனந்தக் கண்ணீர் அவளையறியாமலேயே அவள் கண்களில் துளித்தது.

"அதுவாம்மா! இன்னிக்கு எல்லாரும் கொடி குத்திக்குவாங்க. அதே போல நானும் குத்திக்கப் போறேன். அதுக்காவத்தான் தோச்சுப் போட்டுக்கறேன்..." — விழுந்த அடியைக் கூட மறந்து, சந்தோஷமாகச் சொன்ன சிறுவன், "அம்மோவ்! பத்துப் பைசாக் குடும்மா! கொடி வாங்கணும்..." என்றான்.

"தே! எங்கிட்டே ஏது துட்டு? நைனா வாசல்லே குந்திக்கினு இருக்கும். அது கைலே போய்க் கேளு!"

ரங்கனிடம் போய்த் தயங்கித் தயங்கி நின்றான், சிறுவன்.

"டேய்! இந்தாடா இருபது பைசா."

"எனக்குக் கொடி வாங்கத்தானே நைனா?"

"இன்னாது... கொடி வாங்கவா! டேய் முண்டம்,கடைலே போய் நாலு பீடி வாங்கிக்கினு வா! ஓடு!"

"நைனா!"

"இன்னாடா?"

"பத்துப் பைசாவுக்குப் பீடி வாங்கிக்கினு, பத்துப் பைசாவுக்குக் கொடி வாங்கிக்கவா நைனா?"

"யாராவன்! இருக்கறதே இருபது பைசா. பசி நேரத்திலே நாலு பீடி வலிச்சாத்தான் ரிக்ஷா வலிக்க முடியும். போடா பீடி வாங்கிக்கினு வா. கொடியாம் கொடி! அதெல்லாம் நமக்கு இன்னாத்துக்கடா? கொடி என்ன சோறா போடும்?"

"அண்ணாத்தே! புள்ளை ஏதோ ஆசையாக் கேக்குது,வாங்கிக் குடு அண்ணாத்தே" பக்கத்திலிருந்த சக தொழிலாளி ஒருவன் சாதகமாகப் பேசியவுடன், கடைக்குக் கிளம்பியவன், நின்றான்.

"சும்மா கெடப்பா! பெரிய சொதந்திரம். அத்தாலே இன்னா கெடைச்சுது? ஒருநாள் லீவு. அத்துக்கூட அவனுங்களுக்கு அவனுங்களே உட்டுக்கறானுங்க! நமக்கு இல்லே! டேய், இன்னும் ஏண்டா நிக்கறே? பீடி வாங்கியாந்து குடுத்துட்டு ஊட்டுக்குப் போ! அப்பாலே ஐயர் கடைக்கா வா! சவாரி போயாந்து துட்டுத் தரேன். ஆத்தா கைலே குடு."

அவனுக்குத் தன் அப்பாவைப் பற்றி நன்றாகத் தெரியும். இதற்கு மேல் ரங்கனிடமிருந்து கொடிக்குக் காசு வாங்க முடியாது!

பீடி வாங்கிக் கொண்டு வந்து கொடுத்து ஒருவழியாக ரங்கனைச் சவாரிக்கு அனுப்பி



விட்டு மெயின் ரோடிற்கு வந்தான் சிறுவன்.

அங்கிருந்த சிக்னலை நின்று ஒருமுறை பார்த்தான். அதில் மாறி வந்த, சிவப்பு, மஞ்சள், பச்சை நிறங்கள் அவனுக்குக் கொடியைப் பற்றிய நினைவை அதிகரித்தன!

அருகே கூட்டமாக மூன்று நான்கு இளைஞர்கள் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தனர். படித்த அவர்களிடம் விஷயத்தைச் சொல்லிக் காசு கேட்பதில் தவறில்லை என்ற முடிவுக்கு வந்தான்.

"சார்! ஒரு பத்துப் பைசா குடுங்க சார்!"

"கேக்கறதிலே வேறே கணக்கா?" — ஒருவன்.

"எதுக்குடா பத்து பைசா?" — இது மற்றவன்.

"இன்னிக்குச் சொதந்திரம் சார்! ஒரு காங்கிரசு கொடி வாங்கிக் குத்திக்கணும் சார்!"

தேசியக் கொடிக்கும், காங்கிரஸ் கொடிக்கும் வித்தியாசம் தெரியாத அவனைப் பார்த்துச் சிரித்தனர் அந்த படித்த இளைஞர்கள்.

ஒருவன் பாக்கெட்டில் கைவிட்டான். ஆனால் மற்றொருவன் தடுத்து விட்டான்.

"டேய்! இந்த மாதிரி பசங்களை எல்லாம் என்கரேஜ் பண்ணக் கூடாது. இப்ப கொடிக்குன்னு கேட்டு வாங்கிட்டு அப்புறம் அந்தப் பக்கம் போய்ப் பீடி வாங்கிப் புடிப்பான்! வாடா போகலாம்" — சிகரெட் சாம்பலைத் தட்டிக் கொண்டே நகர்ந்தார்கள் இளைஞர்கள். சிறுவனுக்குக் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாதது போலாகி விட்டது.

வெறுப்புடன் நடக்க ஆரம்பித்தவன், அந்தக் காரைப் பார்த்ததும் நின்று விட்டான். அந்தக் காரின் முன் ஒரு தேசியக் கொடி பறந்து கொண்டிருந்தது. சிக்னலில் கார் நின்றதும், சிறுவனுக்கு அந்தக் காரில் இருப்பவரிடம் கேட்டால் தருவார் என்று தோன்றவே, காரை நோக்கி ஓடினான். அவன் அருகில் செல்வதற்கும், அந்தக் கார் சிக்னலிலிருந்து புறப்படவும் சரியாக இருந்தது.

உள்ளே இருந்த அமைச்சர் தம் உதவியாளரிடம் சலித்துக் கொண்டார்.

"சிக்னலிலே கார் நின்னவுடன் கையை நீட்டிக்கிட்டு நாலு பசங்க வந்துடறானுங்க. இந்த மாதிரி குழந்தைப் பிச்சைக்காரர்களை ஒழிக்க ஏதாவது செய்யணும்..."

ஏமாற்றத்துடன் வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்த சிறுவனின் கவனத்தை ஈர்த்தது, அருகே இரண்டு நடுத்தர வயது மனிதர்களின் சம்பாஷணை.

"எங்கே சார் இந்தப் பக்கம்?" என்றார் ஒருவர்.

"பக்கத்து தெருவிலே இருக்கற ஸ்கூலிலேதான் என் பையன் படிக்கறான். இன்னிக்குச் சுதந்திர தினம் ஆச்சே! அதான் அவனைக் கூட்டிக்கிட்டு வந்து விட்டுட்டுக் காய்கறி வாங்கிட்டுப் போறேன். போய் அவனைக் கூட்டிக்கிட்டு வீட்டுக்குப் போகணும். ஸ்கூலிலே கொடி, மிட்டாய் எல்லாம் கொடுத்து முடிச்சானுங்களான்னு தெரியலை. நான் வரட்டுமா?"

பக்கத்துத் தெருவிலிருக்கும் ஸ்கூலுக்குப் போனால் கொடி கிடைக்கும் என்று ஓட ஆரம்பித்தவன், எதிரே ரங்கன் வருவதைப் பார்த்து நின்றான்.

"டேய்! ஐயர் கடையாண்டே வாடான்னா இங்கே இன்னாடா பண்றே? இந்தா துட்டு. ஆத்தா கைலே குடுத்துச் சோறாக்கச் சொல்லு. நான் சவாரி போய் வரேன்!" சிறுவனின் கையில் ஒரு ஐந்து ரூபாய் நோட்டைத் திணித்தான் ரங்கன்.

"உஸ்கோல் போயிட்டுப் போறேன் நைனா! அங்கே கொடி கொடுக்கறாங்களாம்!"

"டேய்! நானும் பொழுது விடிஞ்சதிலேர்ந்து பாக்கறேன். நீ சரியாவே இல்லை. கொடியாவது, செடியாவது. மருவாதையாத் துட்டை எடுத்துப் போய் ஆத்தா கைலே குடு. போ. இல்லே செவிள் திரும்பிடும். ஓடுறா!"

ரங்கன் போட்ட அதட்டலில் அடுத்த நிமிடம் அவன் வீட்டில் இருந்தான்.

"எம்மோவ்! இந்தா துட்டு. நைனா குடுக்கச் சொல்லிச்சு. உன்னைச் சோறாக்கச் சொல்லிச்சு." — ஓட ஆரம்பித்தான் சிறுவன்.

"டேய்! எங்கடா ஓடுறே?"

"உஸ்கோல்லே கொடி குடுக்கறாங்களாம். நான் போய் வாங்கியாந்துடறேன் மோவ்!"

பள்ளிக் கூடத்தில் எல்லாம் முடிந்து விட்டது. பெரும்பாலும் எல்லா மாணவர்களும் கொடி குத்திக் கொண்டு மிட்டாய் தின்று கொண்டே சென்றனர். வாசலில்

போலீஸ்காரர் 1: அண்ணே இருட்டு வேளையில், இந்தத் தெரு வழியாப் போக வேண்டாம். வேறே வழியாப் போவோம்...!

போலீஸ்காரர் 2: ஏம்ப்பா...?

போலீஸ்காரர் 1: இது, ரேடிகளும், இருட்டுப் பசங்களும் நடமாடற ஏரியா...!

— கரடிகுளம் ஜெயா பாரதிப்ரியா.



நின்று கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான், இவன்.

இரண்டு கொடிகள் குத்திக் கொண்டிருந்த ஒரு சிறுவனிடம் கேட்டுப் பார்த்தான். அவன் தரவில்லை. பின்னாலே ஒருவன் ஐந்து கொடிகளைக் கையில் வைத்து எண்ணிக் கொண்டே வந்தான்.

"அஞ்சு கொடி வைச்சிருக்கேயே! ஒண்ணே ஒண்ணு கொடுடா."

"போடா! தர முடியாது" என்று அவன் சொன்னதுதான் தாமதம், மொத்த வெறுப்பும் அவன் மீது திரும்ப, பாய்ந்து அவன் சட்டையைப் பிடிக்க, இருவரும் தெருவில் கட்டிப் புரண்டனர்.

அந்தப் பக்கம் வந்த ஆசிரியர் அவர்களைத் தடுத்து விட்டு அதட்டினார்.

"பாருங்க சார்! இவன் என் கொடியைப் புடுங்கறான்."

அப்போதுதான் அந்தச் சிறுவனை பார்த்தார் ஆசிரியர். கிழிந்த நிஜார், ஷர்ட் இல்லாத உடம்பு. எண்ணெய் பார்த்திராத தலை. விஷயம் விளங்குவதற்கு அவருக்கு அதிக நேரமாகவில்லை.

"உனக்கு என்னப்பா கொடிதானே வேணும்?" — ஆசிரியர் கேட்டவுடன் அவனுக்கு நம்பிக்கை வந்து விட்டது.

"ஆம்" என்று பலமாகத் தலையசைத்த சிறுவனுடன் அருகிலிருந்த கடைக்குச் சென்றார். கூடவே அவரது சக ஆசிரியர் ஒருவரும் வந்தார். கடையிலிருந்து இரண்டு கொடிகளையும், குண்டூசிகளையும் வாங்கிக் கொடுத்தார்.

அப்போதுதான் ஆசிரியர் கேட்டார், "தம்பி! உன் பேர் என்னப்பா?"

"குமரன் சார்!" — அவன் சொன்னதும் ஒரு நிமிடம் ஸ்தம்பித்து விட்டார். அந்தக் கடைக்கு எதிரே அன்று நடக்கப் போகும் சுதந்திரதின பொதுக் கூட்டத்திற்காக மேடை தயாராகிக் கொண்டிருந்தது. அங்கே மாட்டப்பட்டிருந்த காந்தி படத்தைப் பார்த்தவர், குமரனையும் ஒருமுறை பார்த்தார்.

"குமரா! நீ 1947—க்கு முன்னாலே பொறந்திருக்க வேண்டியவன்" — ஆசிரியர் சொன்னதின் அர்த்தம் அவனுக்குப் புரியவில்லை. புரியும் என்று அவர் எதிர்பார்க்கவுமில்லை. கொடியை வாங்கிக் கொண்டவன், பார்வையிலேயே அவருக்கு நன்றி சொல்லி விட்டு ஓடிவிட்டான்.

பக்கத்திலிருந்த சக ஆசிரியர்தான் கேட்டார்....

"சார்! திஸ் இஸ் டூ மச்! ஏதோ மத்தவங்க குத்திண்டு இருக்காங்களேன்னு தானும் கொடி குத்திக்க ஆசைப்பட்டிருக்கான். அதுக்காக இப்படி ஒரு கம்பேரிஸனா?"

"உங்களைப் போல என்னாலே, அந்த பையனோட கொடி குத்திக்கணும்ற ஆசையை அவ்வளவு சாதாரணமா எடுத்துக்க முடியலை. ஏன் தெரியுமா? கோரிக்கைகளை நிர்வாகத்துகிட்டே கொடுத்துட்டு, அதை நிறைவேற்றணும்னு கறுப்புக் கொடி குத்திக்கறதைப் பெருமையா நினைக்கற எத்தனையோ பேர், தேசியக் கொடியைக் குத்திக்கறதுக்கு வெட்கப்பட்டுண்டு, அவமானமா நினைச்சுப் பாக்கெட்டிலே வாங்கி வைச்சுக்கறதை நான் பார்த்திருக்கேன்."

அவர் சொன்னதுதான் தாமதம், சக ஆசிரியரின் பார்வை தன் பாக்கெட்டிற்கு இறங்க, உள்ளே உறங்கிக் கொண்டிருந்த தேசியக் கொடி அவரைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது.

கொடியுடன் ஓடி வந்த குமரன், அதை அம்மாவிடம் காட்டிப் பெருமையடித்துக் கொண்டான்!

"எம்மோவ்! கொடி வாங்கத் துட்டுக் கேட்டாத் தரமாட்டேன்னு சொல்லிச்சே நைனா! தோ பாத்தியா இரண்டு கொடி!"

"ஏதுடா, யார் குடுத்தாங்க?"

"உஸ்கோல் வாத்தியார் வாங்கிக் குடுத்தாரு!"

சந்தோஷத்துடன் பின்பக்கம் சென்று தோய்த்துக் காயப் போட்டிருந்த சட்டையை எடுத்துப் போட்டுக் கொண்டான் குமரன்.

கொடி குத்த எத்தனித்த போதுதான், இடப் பக்கம் சட்டையில் இருந்த கிழிசலைக் கவனித்தான். இதே சட்டையைப் பலமுறை போட்டிருக்கிறான். அப்போதெல்லாம் அதைக் கவனித்ததில்லை.

ஒருகணம் யோசித்து விட்டு, அந்தக் கிழிசலை மறைக்கும் விதத்தில் கொடியை வைத்துப் பார்த்தான். அந்தக் கொடி கிழிசலைச் சரியாகவே மறைத்தது.



நண்பர்: தியேட்டரை 'ஏ.ஸி.' பண்ணப் போறீங்களா, ஏன்?"

சினிமா தியேட்டர் முதலாளி: அப்பத்தானே, அதைப் போடாமலேயே நிறையச் சம்பாதிக்கலாம்...?

— ஆர். வசந்தகுமார்.

நீரில் மிதக்கும் நிலா

சுபா

9

இளங்குமரன் ஷூட்டிங் நடக்கும்இடத்திற்கே தந்தியைக்கொண்டுவந்திருந்தபோஸ்டல் டிபார்ட்மெண்ட் ஆசாமியைப் பார்த்தான். தந்தியை நீட்டிவிட்டு அவன் பாக்கெட்டிலிருந்து ஒரு சிறு நோட் புத்தகத்தை எடுத்து ''ஆட்டோகிராஃப் சார், ப்ளீஸ்'' என்றான். இளங்குமரன் அவன் நீட்டிய நோட்டுப் புத்தகத்தில் தன் கையெழுத்தைக் கிறுக்கினான். தந்தியை விரலால் கிழித்துப் பிரித்தான்.

படித்தவுடன் புருவங்களை நெறித்துக் கொண்டான்.

''என்ன டைரக்டர்?'' என்றான் ஸ்ரீநாத் கண்ணாடியை ஒரு முறை மேலேற்றிக் கொண்டு.

''சுதிர் அடிச்சிருக்கான். உடனே வரச் சொல்றான். என்னை ஃபோன்ல கான்டாக்ட் பண்ண முடியலையோ என்னவோ. சுதிர் அடிச்சிருக்கான்னா நிச்சயம் ஏதாவது பெரிய பிரச்னையா இருக்கும். ஸ்ரீநாத், நான் உடனே பொறப்படறேன். நீயே இங்கே இருந்து ஷூட்டிங்கை முடிச்சிரு. பிருத்வியைக் கூட வெச்சிக்க. ஊட்டி சம்பந்தப்பட்ட ஸீன்ஸ் இன்னும் என்ன இருக்குன்னு கேட்டுக்க. மலையில இருந்து அஸ்வின் விழுந்து அடிபடற ஷாட் ஒண்ணு இருக்கு. நல்ல லொகேஷனாப் பாரு. அஸ்வினுக்குச் சரிப்பட்டு வராதுன்னு தோணிச்சின்னா டூப்போட்டு முடிச்சிரு. நான் மெட்றாஸ் போய் விஷயம் என்னன்னு தெரிஞ்சிக்கிட்டு ஹோட்டலுக்கு ஃபோன் பண்றேன். ஓ.கே.... பிருத்வி... தொழிலைக் கத்துக்கய்யா. ஸ்ரீநாத் காமிரா ஆங்கிளை எப்படி வைக்கிறான்னு பாரு. ஊட்டி ஷாட்ஸ் மொத்தத்தையும் அவங்கிட்ட சொல்லிடு. ரெண்டு பேரும் எப்படிப் பண்றீங்கன்னு பாக்கலாம். சச்சி.. சச்சி... எங்கேய்யா சச்சிதானந்தன். சச்சிதா ஆனந்தம் ... மெட்றாஸ் ஃப்ளைட் எப்பன்னு பாரு. ஒரு டிக்கெட் புக் பண்ணு. "காரை ரெடி பண்ணு. கௌம்பட்டுமா. அஸ்வின் ஸாரி.. ஷில்பா.. தைரியமா ஆக்ட் பண்ணு.. யோவ் ஜூபிடர் ஹீரோயினுக்கு ஒரு அப்பன் இருக்கானில்ல. அந்த ரோலை நீ பண்ணப் போற. உம்மூஞ்சி அப்படியே ஒட்டு அந்த காரெக்டரோட. பொண்ணைப் பாத்துக்க. ஏதாவது புதுக்குதிரை மாதிரி அவ ரூட் மாறினா. அவளுக்கும் ஃப்யூச்சர் கெடையாது. உன்னையும் தொலைச்சிருவேன்...''

இளங்குமரன் பேசிக்கொண்டே காரை நோக்கி விரைந்தான். கார்கதவைத் திறந்து ஏறிப் பின்னால் உட்கார்ந்து ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். ''போய்யா.... எம்மூஞ்சையே பார்த்துக்கிட்டு'' என்றான். கார் நகர நகர புரொடக்ஷன் மேனேஜர் முன்ஸீட் கதவைத் திறந்து பாய்ந்து ஏறினான்.

பிருத்விராஜ் ஷில்பாவைப் பார்த்தான்.

ஷில்பா கொஞ்சம் விடுதலை உணர்வுடன் அவனைப் பார்த்துச் சிரித்தாள். எல்லோரும் இருக்கும் போதே அவனை நெருங்கினாள்.

''மதுமதி என்ன பண்ணினான்னு நேத்துக்கேட்டேன். நீங்க அவ கதையை அங்கேயே நிறுத்திட்டிங்க. இப்ப சொல்லக் கூடாதா?'' என்றாள். அவளுடைய கெஞ்சலான குரல். அதனுடன் சேர்ந்து ஒரு காலை உயர்த்தித் தரையை லேசாக அவள் உதைத்ததில் இருந்த நளினம்.

ஸ்டில் ஃபோட்டோ கிராஃபர் 'க்ளிக்' என்று ஒரு முறை காமிராவைத் தட்டினான். ''நல்ல போஸுங்க அது'' என்றான்.


பிருத்விராஜ். ''நானும் அதைத்தான் சொல்ல நெனைச்சேன். போட்டோகிராஃபர் என்னை விட ஷ்ரூட். க்ளிக் பண்ணிட்டுச் சொல்றார்'' என்றான் மெல்லிய குரலில்.

''நான் கேட்டது மதுமதியைப் பத்தி.''

''அப்புறம் சொல்றேன் ஷில்பா. இப்ப இருக்கிற டயத்தை வேஸ்ட் பண்ணாம ஷூட்டிங்கை கன்டினியூ பண்ணுவோமே... ஸ்ரீநாத் சார்... நீங்க என்ன சொல்றீங்க.''

''என்னை ஜஸ்ட் ஸ்ரீநாத்னு கூப்பிட்டாப் போதும் பிருத்வி. நாம இந்த ஸாங்கை முடிச்சிருவோம். அப்புறம் ஹோட்டல்ல டிஸ்கஷனை வெச்சிப்போம். ஓ.கே..?''

''ஓ.கே. கிளாப் அடிக்கிற பையன்? பரமேஸ்வரா... வா... வா... ஷாட் நெம்பரை மாத்து...''


"சொல்றேன்"
என்றான்
பிருத்விராஜ்
எதிரில்
உட்கார்ந்திருந்த
ஷில்பாவைப்
பார்த்துக்
பார்த்துக் கொண்டே.
ஷில்பா
பிருத்விராஜையே
பார்த்துக்
கொண்டிருந்தாள்...

பிருத்விராஜ் உடல் முழுக்க ஜுரம் ஊடுருவியவனைப் போல ஒரு பரபரப்புடன் இயங்கத் தொடங்கினான்.

திலகாவை நாம் முதல் அத்தியாயத்தில் சந்தித்திருக்கிறோம். ஷில்பாவின் கடைசித் தங்கை. வேர்க்கடலையை உரித்துக் கொண்டிருந்த நேரத்தில் பார்த்தது. அப்போது சரியாகப் பார்க்க முடியவில்லை.

இப்போது பார்க்கலாம். கண்ணாடி முன் நின்றிருந்தாள். சுவரில் மாட்டப்பட்டிருந்த கண்ணாடிக்குப் பக்கத்தில், ஒரு முழுப்பக்க செய்தித்தாள் ஒட்டப்பட்டிருந்தது. அதில் ஷில்பாவின் படங்கள். வேறு வேறு போஸ்களில் ஷில்பா சிரித்துக் கொண்டிருந்தாள். நீரில் மிதக்கும் நிலா. வேறு யார்? என் அக்கா. ஷில்பா. ஹீரோயின். நான் யார்? ஷில்பாவின் உடன்பிறப்பு. அதே ரத்தம்.

திலகா கண்ணாடியில் சிரித்தாள். ஷில்பா மாதிரியே. பழைய அலமாரியைத் திறந்து, அதில் இருந்த உடைகளைப் பரபரவென அளைந்து, ஏறக்குறைய பேப்பர் ஷில்பா அணிந்திருந்த மாடலில் இருந்த ஒரு மிடியை வெளியே எடுத்தாள். அணிந்து கொண்டாள். பவுடரைத் தீற்றினாள். லிப்ஸ்டிக்தான் உதட்டின் ஓரத்தில் கொஞ்சம் மொத்தையாகப் படிந்திருந்தது. துடைத்தாள். ஷில்பாவை விடத் தான் கொஞ்சம் கூடுதல் அழகோ என்று தோன்றியது திலகாவிற்கு.

''அக்கா போய்ட்டு வரேன்'' என்று குரல் கொடுத்தாள்.

ராணி உள்ளறையிலிருந்து வெளிப்பட்ட திலகாவைப் பார்த்தாள். கண்களை அகல விரித்தாள்.

''நீ ஸ்கூலுக்குத்தான் போறியா... இல்ல சினிமா, பீச்னு வேற எங்கயாவது போவப் போறியா?''

''போக்கா. ஒனக்கு எப்பவுமே கிண்டல்'' என்றாள் திலகா. செருப்பை மாட்டிக் கொண்டாள். வெளிப்பட்டுக் கதவைச் சாத்திக் கொண்டு கீழே இறங்கினாள்.

பிரதான சாலைக்கு வந்து பஸ் ஸ்டாண்டை அடைந்தாள். ஸ்டாப்பிங்கில் நூறு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருத்தியாக நிற்கத் திலகாவிற்குப் பிடிக்கவில்லை. ஸ்டாப்பிங்கில் நின்றிருந்த அத்தனை பேரும் சேவகம் செய்வதற்காகவே பிறப்பெடுத்தாற் போல் இருந்தார்கள்.

திலகா ஸ்டாப்பிங்கில் இருந்து சற்றுத் தள்ளி நின்றாள். அவளைக் கடந்து சென்ற ஒரு மோட்டார் பைக் வாலிபன் விசிலடித்து, கையாட்டி விட்டு அவளைக் கடந்தான்.

திலகா அவனை உதாசீனப்படுத்தினாள். பஸ் வரும் திசையையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவளை உரசுகிறாற் போல் அந்த மாருதி வந்து நின்றது. கருநீலக்கலர். பளபளப்பாகத் தெரிந்த அந்தக் கருநீலத்தில் திலகா தெரிந்தாள். மாருதியின் கண்ணாடி வெண்ணெய் போல் நழுவிக் கீழே இறங்க, டிரைவிங் சீட்டில் அமர்ந்திருந்தவனைப் பார்த்துத் திலகா ஆச்சரியப்பட்டாள்.

''சந்திரன்?'' என்றாள் வியப்புடன்.

அவன் கதவைத் திறந்தான். ''ஏறு திலகா'' என்றான்.

திலகா சுற்றிலும் ஒருமுறை பெருமையுடன் பார்த்துவிட்டு, உரிமையுடன் காரின் முன் ஸீட்டில் அமர்ந்து கதவைச் சாத்திக் கொண்டாள்.

மாருதி சீறிக் கொண்டு புறப்பட்டது.

கோவை எக்ஸ்பிரஸ் மிகச் சரியான நேரத்தில் கோவையை விட்டு, சென்னையை நோக்கிப் புறப்பட்டது. புறப்பட்டவுடன் வேகம் பிடித்தது.

ஸ்ரீநாத் கண்ணாடியை ஒரு தடவை மேலேற்றிக் கொண்டு அவன் அமர்ந்திருந்த போகியைச் சுற்று முற்றும் பார்த்தான். படப்பிடிப்பு குழு மொத்தமும் அந்தப் பெட்டியில் உற்சாகமாக உட்கார்ந்திருந்தது. அத்தனை பேருக்கும் சென்னைக்குத் திரும்பிச் செல்லும் ஆர்வம். அவ்வப்போது படப்பிடிப்பின் போது நடந்த சின்னச் சின்ன சுவாரசியங்களை உரக்க அசைபோட்டுக் கொண்டிருந்தார்கள். ஜூனியர் ஆர்ட்டிஸ்டுகள் ஊட்டி ரசிகர்களில் அத்து மீறியவர்களைப் பெருஞ்சிரிப்புடன் வார்த்தைகளால் பிய்த்து எறிந்து கொண்டிருக்க, ஷில்பா ஒரு ஜன்னலோர சீட்டில் உட்கார்ந்திருந்தாள். எதிரில் உட்கார்ந்திருந்த பிருத்விராஜனைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

முதல் ஷெட்யூல் மிகவெற்றிகரமாக முடிந்திருந்தது. ஸ்ரீநாத்தின் மனத்தில் ஏகப்பட்ட உற்சாகக் குமிழ்களை உருவாக்கி இருந்தது. ரயிலின் தாலாட்டு ஆட்டத்தினூடே நடந்து சென்று பிருத்விராஜுக்குப் பக்கத்தில் இருந்த ஸீட்டில் உட்கார்ந்தான்.

பிருத்விராஜ் நிச்சயம் ஓர் அபாரமான இளைஞன். ஒரு பாடல் காட்சிக்காக அவன் உபயோகப் படுத்திய அவனது கற்பனை வளம் ஸ்ரீநாத்தைப் பிரமிப்படையச் செய்திருந்தது.

பிருத்விராஜ் ஸ்ரீநாத்தைப் பார்த்துச் சற்று ஒதுங்கி, ஸ்ரீநாத் தாராளமாக உட்கார இடம் செய்து கொடுத்தான்.

ஸ்ரீநாத் பிருத்விராஜின் கைகளைப் பற்றிக் குலுக்கினான்.

''என்னால் அப்பல்லாம் எதுவும் பேச முடியலை பிருத்வி. இப்பத்தான் ஃப்ரீயாப் பேச முடியுது. யூ ஹாவ் டன் எ வொண்டர்ஃபுல் ஜாப். கங்கிராட்ஸ். ஊட்டி ஸீனெல்லாம் ஸ்க்ரீன்ல வரும்போது நிச்சயம் விசில் பறக்கும்.''

பிருத்விராஜ் நத்தை ஓட்டுக்குள் சுருங்கிக் கொள்வதுபோல், கொஞ்சம் கூச்சத்துடன் ஒடுங்கிக் கொண்டு உட்கார்ந்தான்.

''கதையை செமஸின்ல நிறுத்தி வெச்சிட்டு எங்களை 'அப்புறம் என்ன,' 'அப்புறம் என்ன'ன்னு கேக்க வச்சிட்டியே பிருத்வி. அப்புறம் என்ன?''

''சொல்றேன்'' என்றான் பிருத்விராஜ், ஷில்பாவைப் பார்த்துக்கொண்டே.

மதுமதி திருவான்மியூரில் இருக்கும், சிவராமனை முதன் முதலில் சந்தித்த அந்த சதுரமனையின் நடுவில் நின்றிருந்தாள். பூமியை வெறித்துக் கொண்டிருந்தாள். அந்த காய்ந்து போன மண் பரப்பில் ஓர் அழகான ரோஜாத்தோட்டம் அமைக்க வேண்டும். விதவிதமான நிறங்களில் மலர்ந்து சிரிக்கும் ரோஜாக்கள். சிவாவிற்கு ரோஜா என்றால் உயிர். சிவராமனின் அப்பாவிடம் அதற்கு அனுமதி வாங்கவேண்டும். மதுமதி ஒரே ஒரு முறை பெங்களூர் போய் அவர்களைப் பார்த்துவிட்டு வந்தால் என்ன என்று யோசித்தாள்.

பெங்களூரின் சுத்தமான இறக்கமான, ஏற்றமான, பனிதழுவிய சாலைகளில் ஆட்டோ விரைந்து சென்று அந்த பிரம்மாண்டமான பங்களாவின் முன் நின்றது.

வாசலில் கூர்க்கா.

''யாரு?'' என்றான்.

''மதுமதின்னு சொல்லுங்க.''

கூர்க்கா இன்டர்காமை எடுத்துத் தொடர்பு கொண்டான். மதுமதி என்று சொன்னான்.

தூரத்தில் தெரிந்த மாளிகையின் கதவு திறக்கப்பட்டு இளம்பெண் ஒருத்தி ஓடி வந்தாள். விஜியாகத்தான் இருக்கும்.

கேட்டைக் கூர்க்கா திறந்து விட்டான்.

விஜி ஓடி வந்து மதுமதியை அப்படியே அணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''வெல்கம், வெல்கம்'' என்று முகத்தில் பெரும் சந்தோஷத்தைக் காட்டினாள்.

தோளைக்கெட்டியாய்ப் பிடித்து அணைத்தமாதிரி உள்ளே நடத்திச் சென்றாள்.

''சௌக்கியமா விஜி?''

''நீங்க?''

''ம்.''

''நானும் ம்! சிவராம் நீங்க நெறைய பேசுவிங்கன்னானே. கலகலன்னு இருப்பா என் மதுன்னானே. உங்களைப் பார்க்கணும்னு துடிச்சிக்கிட்டிருந்தேன்.''

மதுமதி அவளைத் தடுத்தாள்.

''சிவாவை நீ வா, போன்னு சொல்வியா? வாங்க, போங்கன்னு சொல்வியா?''

''ஸாரி மது. நீ வந்திருக்கிறது அப்பாக்கும், அம்மாவுக்கும் எவ்வளவு சர்ப்ரைஸிங்கா இருக்கப் போவுது தெரியுமா? ஏன் ஒரு லெட்டர், நாலு லைன் எழுதியிருக்கலாமில்ல.... ஸ்டேஷனுக்கே வந்திருப்பேனே.''

மதுமதி, விஜியுடன் சிமெண்ட் பாதையில் நடந்தாள். கண்களைச் சுற்றிலும் ஓடவிட்டாள். அபாரமான தோட்டம். ரோஜாக்கள், ரோஜாக்கள், ரோஜாக்கள்.

''சிவராமுக்கு ரோஜான்னா....''

''உயிருன்னு எனக்கும் தெரியும் விஜி. நான் இங்க வந்திருக்கறதே கிட்டத்தட்ட அதுக்குத்தான்....''

''அப்படின்னா..?''

''போகப் போகத்தெரியும் விஜி.''

''என்னம்மா யோசிச்சுப் பாத்தியா? முடிவுக்குவந்துட்டியா? சிவராமோட ஆசைப்படி அவன் பேர்ல இருக்கிற சொத்து எல்லாத்தையும் உன் பேருக்கு மாத்திடலாமில்ல?''

நடராஜன் குரலில் ஒரு சந்தோஷப் பரபரப்போடு கேட்டார். பக்கத்தில் நீர் படர்ந்த கண்களுடன் ஜகதா. மதுமதியின் தோளில் ஏறக்குறைய தொங்கிக்கொண்டு விஜி.

''இல்ல அங்கிள். எனக்கு மத்த எதுவும் வேண்டாம். ஆனா திருவான்மியூர் ப்ளாட்டை என் பொறுப்பில விடுவீங்களான்னு கேட்டுக்கத்தான் வந்தேன்.''

''உன் பொறுப்பிலயா? உன்னதுதாம்மா அது. சிவராம் சொன்னமாதிரி அங்க ஒரு வீடு உனக்குக் கட்டித்தரட்டுமா?''

''மனுஷங்க இருக்கிற எடமில்ல அங்கிள். பழசையெல்லாம் நான் ஞாபகப் படுத்திக்கற ஒரு அற்புதமான எடமா அதை வெச்சிக்கணும் அதுக்காகத்தான்.''

''கண்டிப்பாம்மா. உன் இஷ்டப்படியே செய். அப்புறம் துவாரகா மாளிகைக்குக் கூட்டிட்டுப்போறேன். உனக்கே உனக்குன்னு சிவராம் ஒதுக்கி வெச்சிருக்கிற வீடு. அதையும் பாத்திடலாம்.''

''அதெல்லாம் எனக்கு வேண்டாம் அங்கிள்'' என்றாள் மதுமதி.

துவாரகா மாளிகையின் கேட் கோட்டைக்கதவுகள் போல்திறந்தன. கார் உள்ளே நுழைந்தது. அரைவட்டமாய்சிமெண்ட்பாதை. நெடு நெடு அசோக மரங்கள். பச்சைக் காய்களைச் சூட்டிக்கொண்டிருந்த மாமரம். இறக்கைகளை நான்கு புறமும் விரித்திருந்த தென்னை. நட்ட நடுவில் மூங்கில் கம்பு பந்தலில் படர்ந்து வாசம் பரப்பிய மல்லிகை. விதவித ரோஜாக்கள். 'படுத்துக்கொள்ள வாயேன்' என்று அழைத்த பச்சைப் புல் மெத்தை. சிமெண்டால் வடிக்கப்பட்ட காளிங்க நர்த்தனம் ஆடிய கிருஷ்ணன் பொம்மை. குழலூதினான்.

கேட்டருகேயே தோட்டக்காரன் வந்து பணிந்தான். நான்கைந்து பணியாட்கள் கைகட்டிக் காத்திருந்தார்கள். கார் நின்று மதுமதி கீழே இறங்கினாள். அந்தச் சூழ்நிலையில் ஒன்றி இருந்தாள்.

''உள்ளே போலாமாம்மா?''

''இப்ப இங்க யாரு இருக்காங்க அங்கிள்?'' என்று கேட்டாள் மதுமதி.

''சிவராம் தான்'' என்றார் நடராஜன்.

(தொடரும்)

ஓர் வேண்டுகோள்



சுமார் 350 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருக்க இருப்பிடம், கல்வி மற்றும் மருத்துவ வசதியும் அளித்துவரும் சிவனாந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டுதோறும் தீபாவளி அன்று குழந்தைகளுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொது மக்கள் பண உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும் படி கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் ஆதரவற்ற குழந்தைகளுக்கு அடைக்கலம் கொடுத்து அவர்களை ஒரு புதிய பாதையில் கொண்டுச் செல்லும் ஆசிரமத்தின் அரியதொரு செயலையும், திக்கற்ற முதியோர்களுக்கு அடைக்கலம் கொடுத்து வருவதையும் அறிந்திருப்பீர்கள் எனவே இது சம்பந்தமாக தாங்கள் அளிக்கும் உதவி அதரவற்ற குழந்தைகளுக்கும், ஆசிரமத்தில் இருக்கும் முதியோர் இல்லத்தின் ஆதரவற்ற முதியோர்களும், இல்லக் குழந்தைகளும் மனமகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட அவர்களுக்கு புத்தாடைகள், பட்டாசுகள், இனிப்புகள் வழங்க ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறோம்.

பொது மக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும், அக்குழந்தைகளின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப்படும். வருமான வரி விலக்கும் அளிக்கப்படும். பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவியை பணமாகவோ அல்லது பொருட்களாகவோ

நிர்வாகி,

சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம்,

நெ.20, கம்பர் தெரு,
கிழக்கு தாம்பரம், சென்னை — 600 059.

என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

கல்யாணப் பத்திரிகையின் புரூப் மேஜை மேல் கிடந்தது. சற்று முன்னர்தான் அப்பா அதை வாங்கி வந்திருந்தார். இவள் மெதுவாக நடந்தாள். யாரும் இல்லை என்று நிச்சயம் செய்து கொண்டு அதை எடுத்தாள். முதலில் மேலெழுந்தவாரியாகப் பார்த்தாள். இரண்டு மூன்று இடத்தில் திருத்தங்கள் தெரிந்தன. அதை ஊன்றிக் கவனிக்க, வாசற் பக்கம் ஓசைப்பட்டது. திரும்பினாள்....

திரும்பியவளின் கண்கள் சந்தோஷத்தால் மின்னலிட அகன்று விரிந்தன.

அந்த புரூப்பை இவள் மீண்டும் பார்த்தாள். 'என் ஜேஷ்ட குமாரி ப்ரியா என்கிற....' என்று இவள் பெயருக்கு எதிரில் பொன் வண்ணத்தில் தெரிந்த சங்கரன்! அதே சங்கரன்தான் இப்பொழுது இவளுக்கு எதிரில் நிற்கிறான்...

கூச்சமும் தயக்கமும் பிடுங்கித் தின்றன. எப்படி இவள் சமையற்கட்டுக்குப் போனாள், எப்படி அம்மாவிடம் சங்கரன் வந்திருப்பதைச் சொன்னாள் என்று தெரியவில்லை. உடம்பெல்லாம் பரபரத்தது. ஜுரம் வந்தது போல் பறந்தது. சங்கரனைப் பார்க்க வேண்டும் போலும் இருந்தது... வேண்டாம் போலும் இருந்தது.....

புடைவைத் தலைப்பை இழுத்து அம்மா போர்த்திக் கொண்டாள். 'அவரை உட்காரச் சொன்னியாடி...?' என்று கேட்டாள். 'அப்பாவைக் கூப்பிடு. அடுத்தாத்தில் இருப்பார்' என்று சின்னவளை விரட்டினாள்.

''இன்னிக்குன்னு பார்த்து இப்படி சாயம் போன பழம் புடைவையைக் கட்டிண்டு நிக்கிறியே...'' என்று இவளிடம் பல்லைக் கடித்தாள்.

அதற்குள் அப்பா வந்து விட்டார்.

''வாங்கோ.....! வாங்கோ.....!''

அவனருகில் உட்கார்ந்தார். சந்தோஷமாக இருப்பது போல் காட்டிக் கொண்டார். இயல்பாக இருப்பது போல் காட்டிக் கொண்டார். ஆனால் மனம் கிடந்து அலைந்தது. இவன் எதற்காக வந்திருக்கிறான்? அதுவும் தனியாக! பெரியவர்கள் யாரும் கூட வரவில்லை.... கல்யாணத்திற்கு இன்னும் இருபது நாள் இருக்கும் போது....? ஈசுவரா.,...! என்னவோ....

''அப்பா எல்லாம் சௌக்கியமா....?'' என்று கேட்டு வைத்தார் அப்பா.

''சௌக்கியம்!'' ஒற்றை வார்த்தையில் பதில் வந்தது.

கதவிடுக்கு வழியாகப் பிரியா அவனைப் பார்த்தாள். சமையற்கட்டு குழாயிலேயே முகம் கழுவிக் கொண்டு, பவுடரும் சாந்தும் அங்கேயே கொண்டு வரப்பட, புடைவையையும் மாற்றி, இப்பொழுது பளிச் சென்று....

அவன் ஏதோ தயங்குகிற மாதிரி இருந்தது. லேசாகக் கனைத்துக் கொண்டான்.

''இன்னும் மவுண்ட்ரோடு பிராஞ்சு தானே?''

''ம்... ஆனா... இப்ப இல்லே... ஆபீசிலே ஒரு கௌரவப் பிரச்னை. ரொம்பப் பெரிசாப் போயிடுத்து. அப்படி ஆகும்னு நானே எதிர்பார்க்கல்லே. என்ன பண்றது? அதனாலே, நான் வேலையை ரிசைன் பண்ணிட்டேன்.''

அவன் சொன்னது நெருப்பாக வந்து இறங்கியது. நம்ப முடியாமல் அவனைப் பார்த்தார். ''என்னது....? என்னது....?'' என்றார்.


''இப்ப... சாயந்திரம் ஒரு அஞ்சு அஞ்சே காலுக்கு எழுதிக் கொடுத்துட்டேன். இன்னும் இந்த நேரம் வரை வேற யாருக்கும் தெரியாது. நேரே இங்கேதான் வர்றேன். வீட்டுக்குக் கூட இன்னும் போகல்லே.''

அப்பா இடிந்து போய்விட்ட மாதிரி இருந்தது. அத்தனை உற்சாகமும் விழுந்து விட்டது. ஓர் ஏமாற்றம் — கோபம் அந்த முகத்தில் வந்துவிட்டது. என்ன பிள்ளை இவன்?. பொறுப்பில்லாமல் இருக்கிறானே? கல்யாணத்திற்கு இன்னும் முழுசாக இருபது நாட்கள் இல்லை... 'வேலையை விட்டுவிட்டேன்' என்று வந்து நிற்கிறானே...?

''இப்ப நான் வந்த காரணம்...,'' அவன் கொஞ்சம் நிறுத்தினான். ''நீங்க நிச்சயம் செய்த போது இருந்த நிலைமை இப்ப மாறிடுத்து. நான் இப்ப வேலையில் இல்லே. அதனாலே எல்லாத்தையும் யோசிச்சு நீங்க ஒரு முடிவு எடுக்கணும். நான் ஒரு மாதிரி தயாரா வந்திருக்கேன். 'இந்தப் பெண் வந்த வேளை இவனுக்கு வேலை போயிடுத்து'ன்னு யாரும் சொல்லக் கூடாது. ஏன்னா, வேலையை விட்டது அது நான் எடுத்த முடிவு. அதனால் வரும் விளைவுகள் என்னை மட்டும்தான் பாதிக்கணும். நீங்க அவசரப்படாமல் நிதானமா யோசிச்சு....''

ஜீ. நாராயணன்

இருவர்

கொஞ்ச நேரம் எதுவும் பேசாமல் அப்பா வாசற் கதவையே வெறும் பார்வையாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"மேலே என்ன பண்றதாக.....?" ஏதோ கேட்க வேண்டும் என்று அவர் கேட்டார்.

"எப்படியும் வேலை கிடைச்சிடும். நம்பிக்கை இருக்கு. ப்ரெண்டு ஒருத்தன் டெல்லியில் இருக்கான். 'உன் படிப்புக்கு இதைவிட நல்ல வேலை அங்கே கிடைக்கும் வா'ன்னு கூப்பிட்டிருந்தான். போகலாம்னு இருக்கேன்...."

"காப்பி ஆச்சாடி?" அப்பா சமையல் கட்டைப் பார்த்து இரைந்தார். "எத்தனை நாழி இந்தச் சனியன்களுக்கு?" என்று எழுந்தார். "ஒரு நிமிஷம்...." என்று அவனிடம் சொல்லி விட்டு நடந்தார்.

"**என்ன** எதற்கு வந்திருக்கிறாராம்?" குசுகுசுவென்று அம்மா அவரிடம் கேட்டாள். அவர் எழுந்து வந்ததே அம்மாவிடம் எல்லாவற்றையும் சொல்லத்தான். சொன்னார்.

"ம்... இந்த மட்டும் நல்லதாச்சு. கல்யாணத்திற்கு அப்புறம் இப்படி ஆகியிருந்தால்?" என்றாள் அம்மா.

அம்மா எந்த வழியில் போகிறாள் என்பது இப்பொழுது புலப்பட்டு விட்டது.

"அந்த நாள்லே நம்ப எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கோம். உங்களுக்கு வேலை போயிடுத்து. கம்பெனியை மூடிட்டான்! பிரியா சின்னக் குழந்தை. கையில் காசில்லாமல் திண்டாடி சிரிப்பாச் சிரிச்சு... செலவு மிச்சம்னு என்னை ஊர்லே கொண்டு விட்டு... உங்க அப்பாவுக்கு அங்கே நான் சமைச்சுப் போட்டுண்டு... போறும்டா.... நூறு ஜென்மத்துக்கு.... அந்த மாதிரி ஒரு நிலை என் பெண்ணுக்கு வரணுமா?"

"வந்து..."

"இதுகள் சிறிசுகள். கல்யாணம் ஆனா உடனே நாலு இடம் போகணும் — வரணும் னு இருக்கும். அந்தச் சமயத்திலே மாப்பிள்ளை வேலைக்கு அலைஞ்சிண்டு — இண்டர்வியூவுக்குப் போயிண்டு இருந்தால்...? என் பெண் ஏன் கஷ்டப்படணும்? அப்படியே உடனே இவனுக்கு வேலை கிடைச்சிடும்னு என்ன நிச்சயம்?"

நாக்கைக் கடித்தாற்போல் இவனுக்கு உள்ளுக்குள் சுரீரென்றது. 'வேண்டாம்' என்று நினைத்த மாத்திரத்தில் அம்மா எத்தனை சுலபமாக மரியாதையை உதறி விட்டாள்!

"ஒண்ணு பண்றேன்...? அவர்கிட்டே சூசகமா, பாமிலியிலே ஒரு துக்கம். ரொம்ப வேண்டியவா காலம் ஆயிட்டா. நானே உங்க அப்பாவை வந்து பார்க்கணும்னு இருந்தேன். கொஞ்ச நாளைக்குச் சுபகாரியங்கள் வேண்டாம்'னு அபிப்பிராயம்... இப்படி ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பறேன்."

இளம்பிள்ளை வரை அம்மா நிறுத்தினாள்.

"அதோட நின்றுவிட வேண்டாம். எல்லா ஏற்பாடும்பண்ணியாச்சு. துணிமணி வாங்கியாச்சு. தேதி வைச்ச கல்யாணத்தை நிறுத்துவானேன்? என் அண்ணா பிள்ளை ரமேஷ் இருக்கான். அவனுக்கு என்ன குறைச்சல்? படிப்பு அத்தனை இல்லை... அதனாலே என்ன? அரைக்காசா இருந்தாலும் அரசாங்க உத்தியோகம்..."

பதில் சொல்லாமல் அப்பா வெளியில் வந்தார். பழையபடி அவன் அருகில் சென்று உட்கார்ந்தார்.

'பட்'டென்று அம்மா அடுப்பை அணைத்தாள். வராத மாப்பிள்ளைக்கு இனிமேல் எதற்காக சொஜ்ஜியும் பஜ்ஜியும்?

இவள் கையில் இன்னும் அந்த ப்ரூப் இருந்தது. அதில் சின்னச் சின்னத் திருத்தங்கள். பென்சில் கோடுகள். அப்பா செய்தவை! ஆனால், இப்பொழுது அம்மா செய்ய இருப்பது பெரிய திருத்தமாக... மாப்பிள்ளையையே மாற்றுகிற திருத்தமாக! சே, என்ன மனிதர்கள்!

இந்த உலகில் எதுதான் நடக்காது? இன்னும் இருபது நாட்களில் கல்யாணம் என்கிற போது வேலையைப் போக்கிக் கொள்கிற மாப்பிள்ளை!

'...உங்களுக்கெல்லாம் என்னாலே நிறைய சிரமம், ஏமாற்றம், நீங்க என்னை மன்னிக்கணும்...'

உடனேயே வீடு தேடி வந்து இதைச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன...?

நாளைக்குச் சொல்லலாம். வீட்டிற்குப் போய் அம்மா, அப்பா எல்லாரையும் கலந்து பேசிய பிறகு சொல்லலாம். சொல்லாமலே கூட இருந்திருக்கலாம். மறைத்திருக்கலாம். ஒரு சராசரி மனிதன் கட்டாயம் அப்படித்தான் செய்வான். சொல்ல மாட்டான். கல்யாணம் இருபது நாட்களில் என்கிற போது, குடுகுடுவென்று இப்படிப் போட்டு உடைக்க மாட்டான்.

'அந்த நிலைமை இப்ப மாறிடுத்து. நான் இப்ப வேலையில் இல்லே! அதனாலே யோசிச்சு நீங்க ஒரு முடிவு எடுக்கணும்...'

"அம்மா, அப்பாவைக் கூப்பிடு!"

"எதுக்குடி?"

"கூப்பிடேன், சொல்றேன்."

கொஞ்சமாகத் தலையை வெளியில் நீட்டி அம்மா அப்பாவுக்கு ஜாடை காட்டினாள்.

ரொம்பவும் சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு அவனிடம், ஏதோ சொல்ல ஆரம்பித்தவர் நிறுத்தினார். எழுந்து வந்தார்.

"அப்பா, வந்து... அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்க வேண்டாம். அவர்கிட்டே சொல்ல வேண்டாம்."

அவர் நெற்றியைச் சுருக்கினார். இவள் என்ன சொல்கிறாள் என்பது போல் அம்மாவைப் பார்த்தார்.

"ஏண்டி...! அவன் உத்தியோகத்தை நம்பித்தான் உன்னைக் கொடுக்க நிச்சயம் பண்ணினோம். வேலையைத் தொலைச்சிட்டு அவன் நிற்கிறான். இனிமேல் என்ன இருக்கு அவன்கிட்டே? கல்யாணம் எதற்குச் செய்யறது? சந்தியிலே நிற்கிறதுக்கா?"

"ம்... அதான்... இதைப் போய்ச் சொன்னால் கல்யாணம் நின்னு போயிடும்னு குழந்தைக்குக் கூடத் தெரியும். அப்படியிருந்தும் நேரே நம்பகிட்டே வந்து ஏன் சொல்லணும்? சொல்லாமலே இருந்திருக்கலாம். நினைச்சிருந்தா மறைச்சிருக்கலாம். சாவகாசமாகக் கல்யாணம் ஆன பிறகு சொல்லியிருந்தால், என்ன செய்திருக்க முடியும்? 'உன் தலையெழுத்து'ன்னு என்னை..."

"அப்படிச் சும்மா விட்டிருவேனா அவனை? கேஸ் போட்டிருப்பேன்..."

"நான் குழந்தையா இருந்த போது உங்க



ரூப்ரஜத்

ஆண்களின் ரெடிவேர் சென்டர்

ரூப்ரஜத் - ராஜ சம்பிரத் தோற்றம் என்பது அதன் பொருள்.

இனி சென்னையில் உள்ள ஆண்கள் அனைவரும், எந்த வயதினரானாலும் ரூப்ரஜத் வழங்கும் அல்டிமோ, சயனாரா, அலாமோட், ஃபோர் சீசன்ஸ், டன்ஹில் ஷர்ட்ஸ், போலோ டிரவுசர்ஸ், யூஎஃப்ஓ ஜீன்ஸ் போன்ற பிரபல ரெடிமேட் ஆடைகளை அணிந்து ராஜ சம்பிரமாகத் தோற்றமளிக்கலாம்.

ரூப்ரஜத்

ஆண்களின் ரெடிவேர் சென்டர்

703 அண்ணா சாலை
(மாருதி ஷோரூம் அருகே)
சென்னை 600 006

போன்: 867400

ளுக்கு வேலை போச்சே...? அதற்காகத் தாத்தா உங்க பேரில் கேஸ் போட்டாரா?''

''இந்த பாரு...'' அம்மா இவளைக் கண்டித்தாள். ''இதெல்லாம் பெத்தவா கடமை. நீ சற்றுப்பேசாம இரு...'' என்றாள். ''அவ இடக்கா! நீங்க போங்கோ... அந்தப் பிள்ளை கிட்டே இதமாச் சொல்லி அனுப்பி...''

''அப்பா, அப்பா...'' இவள் அவசரமாக அவரை நிறுத்தினாள். ''நான் சொல்ல வந்தது, வந்து... இப்ப ஒரு அரைமணி நேரம் முன்னாடி கூட எல்லாரையும் போலத்தான் இவரையும் நினைச்சுண்டு இருந்தேன். நம்பிண்டு இருந்தேன். ஆனா இவர்... வேற மாதிரின்னு தெரிஞ்சுப் போச்சு. யாரையும் இவர் ஏமாத்த விரும்பல்லே. துரோகம் செய்ய நினைக்கல்லே. இவர்கிட்டே நேர்மை இருக்கு. வர்ற விளைவுகளை எதிர்நோக்குகிற துணிவு இருக்கு. போதுமே! ஒரு பெண்ணுக்கு வேற என்ன வேணும்? அதான் பயமாயிருக்கு... அவர் கை நழுவிப் போயிடுவாரோன்னு பயம்...'' என்றாள்.

அப்பா இவளை நிமிர்ந்து பார்த்தார். அந்தக் குரலில் இருந்த தழுதழுப்பு அவரை ஆட்டிவிட்டது. ஒரு கணம் தயங்கினார்.

''ம்... எல்லாம் எங்களுக்குத் தெரியும்...'' என்றார் விறைப்பாக.

அந்த விறைப்புடனே ஹாலுக்கு வந்தார். மூக்குக் கண்ணாடியைக் கழற்றி, மேல் துண்டால் ஒருமுறை துடைத்து மாட்டி, நாற்காலியில் உட்கார்ந்திருந்தவனை இப்பொழுது முழுமையாகப் பார்த்தார்.

''இப்படி உண்டோடி...!'' என்றாள் அம்மா.

அப்பா என்ன செய்யப் போகிறார்? சொல்லப் போகிறார்? இவள் அவரையே பார்த்தபடி இருந்தாள். அவர் முகத்திலிருந்து எதையும் தீர்மானிக்க முடியவில்லை. இவளிடம் ஒரு தவிப்பு... புதிய தவிப்பு...

''அப்ப நான் வரேன்...'' அவன் எழுந்தான். இங்கு நடப்பதையெல்லாம் ஒரு மாதிரி அவனே ஊகித்து விட்டது தெரிந்தது.

''உட்காருங்கோ...'' எழுந்தவனை அப்பா உட்கார வைத்தார். ''ம்... இதிலே பிரியா ரொம்பத் தீர்மானமாயிருக்கா. வந்து... நாமெல்லாம் மிடில் கிளாஸ்... நமக்கு வேலைதான் ஜீவிதம். பிரதானம். இந்தக் கல்யாணம் கட்டாயம் நடக்கும். சந்தேகமில்லை. இப்ப மொதல்லே உங்களுக்கு ஒரு வேலை கிடைக்கணும். அது முக்கியம்... கிடைக்கும், கூடிய சீக்கிரம்... பகவான் அனுக்கிரகத்தில். என்ன சொல்றேன்?''

திரும்பவும் அப்பா சமையல்கட்டுப் பக்கம் பார்த்து இரைந்தார்.

''ஏண்டி... ஒரு சொஜ்ஜி கிளறிக் கொண்டு வர இத்தனை நாழியா? மாப்பிள்ளை காத்துண்டு இருக்கார்...''

சொல்லிவிட்டு அவனைப் பார்த்துச் சிரித்தார்!

'இருள் வரும் நேரம்' பற்றி இவர்கள்...

• 'இருள் வரும் நேரம்' கதையின் முடிவில் 'தண்டனை கொடுக்கப்பட வேண்டியவர்கள் அவர்களை படிக்க வைக்காத இந்த தேசம், அவர்களை உருவாக்கின இந்த சமூகம் அதைத் தான் தண்டிக்கணும்' என்று சுஜாதா கூறியுள்ள வரிகள் பொன் மொழிகள்.

இடையகோட்டை, சாகுல் அமீது ஆசாத்.

• இப்படிக் கொண்டு போகிறாரே, என்னவாக முடிக்கப் போகிறார் என எண்ண வைத்து, ஏற்றுக் கொள்ள முடியாத முடிவைக் காட்டாமல், இப்போதைய அரசியல் சூழ்நிலையில் இதுவாகத் தான் முடிவு அமையக்கூடும் என்று ஏற்றுக் கொள்ளுமாறு முடித்த சுஜாதாவுக்குப் பாராட்டுக்கள்.

புன்செய்புளியம்பட்டி. ஆர். ரத்தினசாமி.

• ஒரு மனிதாபிமானமற்ற செய்கையில் பிரச்னையைத் துவக்கி, அதன் மூலம் சகலதரப்பு மனித மனங்களையும் அலசித்த பாங்கிற்கும், ஆரவாரம் — அலட்டல் இல்லாத செய் நேர்த்தியான நடைக்கும், மனித நேயம் வெளிப்பட முடித்த விதத்திற்கும் சுஜாதாவுக்கு எனது பாராட்டுக்கள்.

சென்னை — 86, மா. வே. ராமச்சந்திரன்.

• இப்போதுதானே முதல் அத்தியாயம் படித்தோம். அதற்குள் இருபத்து மூன்றாவது அத்தியாயமா எனக் கேட்கக் கூடிய அளவுக்கு விறுவிறுப்பாக இருந்தது. ராம்பிரகாஷ் உண்மையிலேயே பக்கா ஜென்டில்மேன்.

கடலூர் — 2, பி. ஆர். வேலுமணி.

• சட்டங்களிலுள்ள பொத்தல்கள் மூலம் குற்றவாளிகள் சுலபமாகத் தப்பிப்பதைத் தடுக்க வகையறியாது தம் இயலாமையை வெளிப்படுத்தும் சோம சேகர் பாத்திரம் வித்தியாசமான படைப்பு. ராம்பிரகாஷ் — அம்ருதா தம்பதியினர் பெங்களூரின் அமைதி தவழும் சூழ்நிலையில் எங்கோ இன்னமும் வாழ்ந்து கொண்டிருப்பது போன்ற பிரமை! கதையைச் சுருக்கமாக முடித்து விட்டாலும் 'சுருக்'கென்று மனத்தில் தைக்கும்படி முடித்திருக்கிறார் சுஜாதா.

கோவை — 18, கலைக்கண்ணன்.

• வர்ஷா — ஏதாவது குளறுபடி செய்வானோ என முடியும் வரை எங்களை சஸ்பென்ஸிலேயே வைத்து, கடைசியில் வர்ஷாவுக்கு ஒரு தனிப் பாதை அமைத்துச் சந்தோஷமான முடிவைத் தந்து விட்டார் சுஜாதா. அவ்வப்போது தவறு செய்தாலும், அரஸின் படம் — கச்சிதம்! ஒவ்வொரு வாரமும் நீங்கள் வெளியிட்டு வந்த 'ஸ்டில்'கள் மனத்துக்கு இதம்!

குற்றாலம். எஸ். ராஜா.



மங்கையர் மலர்

அக்டோபர் '88

நவராத்திரி சிறப்பிதழ்

ஸ்ரீ புவனேஸ்வரி — வண்ணப்படம்

நவராத்திரி

— கொலுவிற்கு,
— சமையலுக்கு,
— விருந்தினர்களுக்கு...
...யோசனைகள்

மற்றும் ஏராளமான நவராத்திரி சிறப்பம்சங்கள்

"எங்களுடையது அபாயமான வேலை!"

— ஒரே பெண் ஒளிப்பதிவாளர் விஜயலட்சுமி பேட்டி

தொடுவான மனிதர்கள்

சென்ற வாரத்தில்......

ராதிகா, ஒரு சாதாரணக் குடும்பத்தில் பிறந்த அழகிய இளம்பெண். அவளுடைய அப்பா குடும்பத்தை விட்டுவிட்டு வேறொரு பெண்ணோடு ஓடிப் போகிறார். ஓடிப் போகும் போது தமது மனைவியின் பேரில் அபாண்டமான பழிகளைச் சுமத்தி உறவினர்களுக்கெல்லாம் கடிதம் எழுதிவிட்டுச் செல்கிறார். எனவே, பாட்டியைத் தவிர மற்ற உறவினர்களெல்லாம் விலகிப் போகிறார்கள். இந்த வேதனையால் ராதிகாவின் அம்மாவுக்கு ஹிஸ்டீரியா வந்துவிடுகிறது. இந்நிலையில் குடும்பப் பொறுப்பை ராதிகா ஏற்க வேண்டியிருப்பதால் படிப்பைப் பாதியில் விட்டுவிட்டு வேலைக்குப் போகிறாள். எங்கும் நிரந்தரமான வேலை கிடைக்காமல் தவித்த ராதிகாவுக்கு ஒரு திருப்பம் மாதிரி ஒரு பெரிய கம்பெனியில் வேலை கிடைக்கிறது......

2

இந்த வேலையை வாங்கித் தந்த கோடி வீட்டு மாமா அவளை அலுவலகத்திற்கு அழைத்து வரவில்லை. அடையாறு பக்கத்திலிருந்த ஒரு பெரிய பங்களாவிற்கு அழைத்துப் போய் 'இவர்தாம்மா அந்தக் கம்பெனி மானேஜர் ராகவன். என் ரொம்ப நாளைய ஸ்னேகிதன். கம்பெனி சேர்மென் கார்த்திகேயனுக்கு ரொம்ப வேண்டியவர். இவரோட பெரிய மனசுதான் உனக்கு இந்த வேலையை வாங்கித் தந்திருக்கு. நமஸ்காரம் பண்ணிட்டு அப்பாய்ன்ட்மெண்ட் ஆர்டரை வாங்கிக்கோ...'

அங்கேயே பதவிப் பிரமாணம் முடிந்து 'புதன்கிழமை நல்ல நாள்' என்று வந்து சேர்ந்துவிடச் சொல்லி, உத்தரவாக — இவன் அலுவலகத்தின் பக்கமேவரவில்லை. நேற்றுசாயந்திரம் கோடி வீட்டு மாமாவைப் பார்த்து, மறுநாள் காலையில் வேலையில் சேர வேண்டியதைத் தெரியப்படுத்தி விட்டு வந்த போது அவர்தான் பஸ்ரூட், ஆபீஸுக்குப் போக வேண்டிய வழி எல்லாம் சொல்லிக் கொடுத்தார்.

'ரொம்பப் பெரிய கம்பெனி.' சாதாரணமா அங்கே வேலை கிடைக்கிறதே கஷ்டம். பகவான் அனுக்கிரகத்தால் ராகவன் ரூபத்துல உனக்கு இந்த வேலை கிடைச்சிருக்கு. ஆபீஸ் எப்படி இருக்கும்னு நினைக்கறே...? ஏதோ அன்னிய தேசத்திலே இருக்கிற மாதிரி இருக்கும். மெட்ராஸ்ல அந்த மாதிரி ஒரு ஆபீஸ் வேறே எங்கேயும் கிடையாது. நல்ல இடம். பெரிய மனுஷா... சமர்த்தா நடந்து நல்ல பேர் வாங்கிக்கணும். அதுக்கு உனக்குச் சொல்லித் தர வேணாம். இருந்தாலும் சொல்றேன். போனதும் முதல்ல ராகவனைப் பார்த்துடு... என்ன...?''

''சரி மாமா...'' என்று மிகுந்த நன்றியுடன் தலையாட்டிவிட்டு வந்திருந்தாள்.

அது ஆபீஸா அல்லது ஐந்து நட்சத்திர ஓட்டலின் வரவேற்பறையா என்ற ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. சிவப்புக் கம்பளம் விரித்த அந்த மிகப் பெரிய ஹாலின் ஓரத்தில் அழகாய் வளைத்துப் போடப்பட்டிருந்த அரை வட்ட மேஜையின் பின்னால் மெழுகுப் பொம்மையாக நின்று கொண்டிருந்தாள் ரிசப்ஷனிஸ்ட். யாரோ ஓர் இன்றைய இந்திக் கதாநாயகியை நினைவுபடுத்தினாள். கத்திரித்து விடப்பட்ட தலைமுடியும், நிருநிருக்கிற முகமும், ஒழுங்குபடுத்திய புருவங்களும், மெல்லிய ஆரஞ்சு நிறமேற்றின உதடுகளுமாக அழகு பண்ணிக் கொண்டிருந்தாள். கவர்ச்சிகரமாக உடையணிந்திருந்தாள். சுலபமாய்ச் சிரித்து, சுலபமாய்ப் பேசி, 'என் சிரிப்பிற்கு முன்னால் யாரும் நிற்க முடியாது!' என்கிற மாதிரி அலட்சியமாய்ப் பார்த்து...

அவளை நெருங்கி எது கேட்கவும் இவளுக்குத் தயக்கமாக இருந்தது. பயமாக இருந்தது. ஆனாலும் வேறு வழியின்றி அந்த மேஜையை நெருங்கினாள்.

''எஸ் ப்ளீஸ்...?''

''இங்கே ராகவன்றவரைப் பார்க்கணும்...''

''எந்த ராகவன்?''

இவளுக்குத் தடுமாறிற்று.

''...அடையாறிலே இருக்காரே... வெள்ளையா, உயரமா, விபூதியும் குங்குமப் பொட்டுமாக —''

''ஓ... யூ மீன் மானேஜர்... ஹி ஈஸ் ஆன் லீவ் டுடே...''

இன்றுகாலையிலிருந்தேஎல்லாம்கோணலாகப் போகிற உணர்வு ஏற்பட்டது. குப்பென்று மனத்தை ஏதோ ஒரு பயம் சூழ்ந்து கொள்ளத் தயங்கி நின்றாள். அதைக் கவனித்த ரிசப்ஷனிஸ்ட், ''எனிதிங் எல்ஸ் ஐ கேன் டூ ஃபார் யூ...?''

இவள் இல்லையென்றுதலையாட்டிவிட்டுச் சற்றுத் தள்ளிப் போய் அந்த ரிசப்ஷனிஸ்ட்

இந்துமதி

டின் கண்ணில் படாமல் நின்றாள்.

அவர்களுக்கு மத்தியில், தான் மிக மிக அந்நியப்பட்டு நிற்பதை உணர்ந்தாள். இதற்கு முன் வேலை செய்த அத்தனை இடங்களிலிருந்தும் இது எல்லா வகையிலும் வித்தியாசப்படுவதைப் புரிந்து கொண்டாள். அடிப்படையிலேயே மிகவும் மாறுபட்டிருப்பது தெரிந்தது. இதன் சூழ்நிலையும் மனிதர்களும் வேறாக இருந்தார்கள்.

சட்டென்று அவள் குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டாள். தளர வாரிப் பின்ன விட்ட அடர்த்தியான கூந்தலும், வெறும் பவுடர் மட்டும் பூசிச் சின்னதாய்ச் சாந்துப் பொட்டும், மேலே கீற்றாக விபூதியும், பூப் போட்ட பட்டுப் புடைவையும், எந்தவித ஆடம்பரமற்ற எளிமையும்...

கொஞ்சம்கூடத் தகுதியற்ற ஓர் இடத்துக்கு வந்து நின்று கொண்டிருப்பதாகத் தோன்றிற்று. அங்கு வேலை செய்யத் தான் சிறிதும் லாயக்கற்றவள் என்பதான தாழ்வு மனப்பான்மை ஆழமாய்ப் பதிந்தது. எப்படியாவது அந்த இடத்தை விட்டுப் போய்விட்டால் போதும் என்றிருந்தது. நேராகக் கோடி வீட்டு மாமாவிடம் போய் விளக்கமாகச் சொல்லி 'இந்த வேலை வேண்டாம் மாமா. என் தகுதிக்கேற்ற சாதாரண வேலையாக வாங்கித் தாருங்கள் போதும்' என்று கெஞ்சிக் கேட்கலாம் என நினைத்து எழுந்து கொண்ட போது சற்று முன் பேசின ரிசப்ஷனிஸ்ட் பரபரத்தவாறு அவளிடம் வந்தாள். முகத்தில் அவசரமும், பேச்சில் வேகமும் தெரிந்தது.

"ஆர் யூ மிஸ் ராதிகா...?"

இவள் மெதுவாகத் தலையாட்ட அவள் சற்று எரிச்சல் கலந்த குரலில் கேட்டாள்.

"மிஸஸ் தாமஸுக்குப் பதிலாகப் புதிதாய் சேர்மெனுக்கு அப்பாய்ன்ட் பண்ணப் பட்டிருக்கிற பர்ஸனெல் செகரெட்டரி...?"

அதற்கும் தலையாட்டலே பதில்.

"மை குட் காட்...!" என்று பதறினாள் அவள்.

"இதை முன்பு என்னிடம் பேசின போதே சொல்வதற்கென்ன...? இப்போது மிஸ்டர் ராகவன் போன் பண்ணிச் சொன்னதற்கப்புறம்தான் தெரிந்தது. ப்ளீஸ் ஹரியப். சேர்மென் வந்து அவருடைய அறைக்குப் போய்ப் பத்து நிமிஷமாச்சு. அவர் வந்ததும் உடனே கூப்பிடுவது மிஸஸ் தாமஸைத் தான். ஏற்கெனவே ஒரு தரம் இண்டர்காமில் கூப்பிட்டு விட்டாராம். இன்னொரு தரம் கூப்பிடுவதற்குள் அவருடைய அறையில் இருந்தாகணும். ம்... சீக்கிரம் வா..."

ராதிகா தயங்கினாள். "வந்து... வந்து... நான்..." என்று தடுமாறினாள்.

"ஓ... லுக்... எதுவானாலும் அப்புறம் பேசிக் கொள்ளலாம். கமான் க்விக்... இரு... ஷார்ட்ஹாண்ட் நோட்புக்கும், பென்ஸிலும் வாங்கித் தர்றேன்..."

ஒரே வினாடியில் எங்கிருந்தோ புது ஷார்ட் ஹாண்ட் நோட்டும், பென்சிலுமாக வந்தாள். அதை அவளிடம் தந்து அவசரமாக லிஃப்ட் வரை இழுத்துக் கொண்டு போனாள். மூன்றாம் மாடி வரை கூட வந்து —



''அதுதான் சேர்மென் ரூம். கதவுக்கு மேல் இருக்கிற பெல்லை அழுத்திப் பதிலுக்கு அவர் பெல் அடிக்கிற சத்தம் கேட்டதும் உள்ளே போ... ஓ.கே...? திரும்ப உன்னை லஞ்ச் டயத்துல பார்க்கிறேன். ஆல் தி பெஸ்ட்.''

அவள் சொல்லித்தந்தமாதிரி அழைப்பு மணியழுத்தி 'உள்ளே வரலாம்' என்பதற்கு அடையாளமாகப் பதில் மணி கேட்ட பின்னரே உள்ளே நுழைந்தாள் ராதிகா. அவள் போன போது எக்ஸிக்யூடிவ் மேஜைக்குப் பின்னால் முகம் தெரியாதவாறு ஆங்கிலச் செய்தித்தாளைப் பிரித்துப் படித்துக் கொண்டிருந்த சேர்மெனின் குரல் மட்டும் சிறிது கூடப் பிசிறின்றிக் கணீரென்று கேட்டது.

''குட்மார்னிங் மிஸஸ் தாமஸ். உட்காருங்க. நான் சொல்றதை மடமடன்னு நோட்ஸ் எடுங்க. ரொம்ப அர்ஜென்ட் லெட்டர். போஸ்ட் பண்ணாமல் உடனடியா குரியர் மூலம் அனுப்பிடுங்க.''

பதிலை எதிர்பார்க்காமல் மடமட வென்று டிக்டேட் பண்ணத் தொடங்கினார். அவர் நல்ல ஆங்கிலத்தில் கம்பீரமான குரலில் சொல்லிக் கொண்டு போக —

அடித்து வைத்த பொம்மை மாதிரி அப்படியே உட்கார்ந்திருந்தாள் அவள். பென்சிலைப் பிடித்த விரல்கள் நடுங்கின. கை நடுங்கிற்று. உடம்பு முழுவதிற்கும் நடுக்கம் பரவிப் பயத்தில் நெஞ்சு படபடத்தது. நாக்கு உலர்ந்து ஒட்டிக் கொண்டது. 'இன்று காலையிலிருந்து ஏன் இப்படி எல்லாமே முரண்படுகிறது...?' என்ற எண்ணத்தில் அடிவயிறு புரண்டது. 'சரி என்ன ஆகிறதோ ஆகட்டும்' என்று அவள் நாற்காலியின் கைப்பிடியை இறுகப் பற்றிக் கொண்டு அமைதியடைய முயற்சி செய்து கொண்டிருந்த நேரத்தில் கடிதத்தை 'டிக்டேட்' செய்து முடித்துவிட்டு எப்போதும் திருப்பிப் படிக்கச் சொல்லிக் கேட்கிற மாதிரி கேட்டார் சேர்மென்.

''கமான் மிஸஸ் தாமஸ். ரீடிட் அவுட் ஃபார் மீ...?''

கால் வினாடி காத்திருந்து வழக்கமாக ஸ்பஷ்டமான ஆங்கில உச்சரிப்பில் சற்றே ஆண் தன்மையோடு கூடிய குரலில் மடமடவென்று டிக்டேட் செய்ததைத் திருப்பிப் படிக்கும் மிஸஸ் தாமஸின் குரல் கேட்காததால், பொறுமை இழந்து,

''வாட் ஈஸ் திஸ் மிஸஸ் தாமஸ்...? வாட் ஹாப்பண்ட் டு யூ?'' என்று செய்தித்தாளைத் தழைக்க —

அயர்ந்து போனான் கார்த்திகேயன். ஒரு வினாடி அதிர்ந்து கூடப் போனான். எதிரில் உட்கார்ந்திருக்கிற அவள் யார் என்று தெரியாமல் தடுமாறினான். ஏதோ தேவதை வந்து உட்கார்ந்திருக்கிற மாதிரி தெரிந்தது. பார்த்துப் பார்த்துச் சலித்துப் போன செயற்கை அழகுகளும், மருட்டுகிற நாகரிக உடைகளுமின்றி மிக மிக இயற்கையாய், ஒற்றைப் பின்னலும், சில்க் புடைவையும், நெற்றிப் பொட்டும், விபூதியுமாக — இதுதான் அழகு' என்பதை எடுத்துக் காட்ட வந்த மாதிரி அவள் உட்கார்ந்திருப்பதாகத் தோன்றியது. மருண்டு போன பார்வையும், கள்ளமற்ற குழந்தைத் தனம் முற்றிலும் மாறாத முகமும் முதல் பார்வையிலேயே அவனைக் கவர்ந்தன. அவள் உட்கார்ந்திருந்த விதமும், பார்வையின் கலக்கமும், அதி குளிர்ச்சியான ஏர்கண்டிஷன் அறைக்குள்ளும் நெற்றியில் பொடித்திருந்த வியர்வைத் துளிகளும் அவள் பயந்து போயிருப்பதை எடுத்துக் காட்டின. மருண்டு உட்கார்ந்திருப்பதைத் தெரியப்படுத்தின. ஒரு பள்ளிச் சிறுமி கோபப்படும் ஆசிரியருக்கு எதிரில் ஒடுங்கிப் போய் நிற்கிற மாதிரி அவள் உட்கார்ந்திருப்பதாகப் பட சட்டென்று உதட்டோரம் புன்னகை ஓடிற்று அவனுக்கு. அவளைப் பார்த்த பார்வை மென்மையாக, சற்று அழுத்தமாய் ஏது கேட்டாலும் அவள் அழுது விடக் கூடும் என்று தோன்ற மெதுவாக நிதானமாக, சன்னமான குரலில் கேட்டான்.

''யார் நீங்கள்...?'' மிஸஸ் தாமஸ் எங்கேன்னு நான் தெரிஞ்சுக்கலாமா...?''

அவளால் சட்டென்று பதில் சொல்ல முடியவில்லை. சேர்மென் என்று ஐம்பது ஐம்பத்தைந்து வயதான தலைவழுக்கைப் பெரியவரை எதிர்பார்த்த இடத்தில் இளைஞனாய், கம்பீரமானவனாய், எல்லாவற்றிற்கும் மேலாக உதட்டுப் புன்னகையும், குறுகுறுவென்ற பார்வையும்... இவரா...? இவனா... சேர்மென்...?''

அந்த அதிர்ச்சியும் வேறு சேர்ந்[illegible]ள்ள நோட்ஸ் எடுக்காத பயத்திலும், அ[illegible]னத் திலும் இன்னமும் உடம்பு ந[illegible]ங்கச் சட்டென்று எழுந்து நின்றாள்.

அவளிருந்த நிலையும், எழுந்து நின்ற வேகமும் கதவைத் திறந்து ஓடிவிடவும் கூடும் என்று அனுமானித்து இன்னும் மென்மையாய்க் குரலைத் தழைத்துப் பேச ஆரம்பித்தான், அவன்.


''அடடே.... ஏன் எழுந்துட்டீங்க...? உட்காருங்க...'' என்ற போதுதான் மிஸஸ் தாமஸுக்குப் பதிலாக வேறு ஒரு இளம் பெண்ணை அந்த இடத்திற்கு நியமித்திருப்பதாக ராகவன் சொன்னது சட்டென்று நினைவிற்கு வந்தது.

''உட்காருங்க, இப்பதான் ராகவன் சொன்னது ஞாபகத்துக்கு வர்றது. நீங்கதான் மிஸஸ் தாமஸுக்குப் பதிலாக வந்திருக்கிற புது செகரெட்டரி இல்லே...?''

குனிந்த தலை நிமிராமல் 'ஆமாம்' என்கிற மாதிரி ஆடியது.

''உங்க பெயர் என்னன்னு தெரிஞ்சுக்கலாமா...?''

மெல்ல முகத்தை நிமிர்த்தி அவன் பார்த்த போது, இவனுக்குள் சிலிர்த்தது. இதுவரை அனுபவித்தே இராத புது உணர்ச்சியாக ஒன்று எட்டிப் பார்த்தது.



பாடசாலை வித்யார்த்திகளின் ஒரு பகுதி

மஹான் ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர்களால் 1542—ல் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்து நடந்து வரும் வேத பாடசாலையை மேற்படி ஸமிதியானது தாய் போல் இயங்கிக் காப்பாற்றி வருகிறது. தற்போது பாடசாலையில் 85 மாணாக்கர்கள் வேதாத்யயனம் செய்து வருகின்றனர். அவர்களுக்கு ஒருநாள் உணவளிக்க சுமார் ரூ. 250/- ஆகிறது. இந்த தர்மம் நிரந்தரமாய் நடக்க ரூ. 2506/- மூல தனம் ஏற்படுத்தியோ அல்லது அவ்வப்போது ரூ. 250/- அனுப்பியோ ஒரு குறிப்பிட்ட தினத்தில், உணவளிக்கும் கைங்கர்யத்தில் பங்கு கொள்ளக் கோருகிறோம்.

நன்கொடை அனுப்ப வேண்டிய பெயரும் முகவரியும்:

அத்வைத வித்யாசார்யா மஹா ராஜா ஸாஹேப்
ஸ்ரீ கோவிந்த தீக்ஷிதர் புண்ய ஸ்மரண ஸமிதி,
D — 76, மூன்றாவது கிராஸ் தெரு, ஸ்ரீநகர் காலனி,
கும்பகோணம் — 612 001.

***** இந்த நன்கொடைக்கு 80—G விதியின்படி வருமான வரிவிலக்கு உண்டு *****

அவள் தன் பெயரைச் சொல்லக் கூட சக்தியில்லாத மாதிரி வந்...து... வந்து...'' என்று தடுமாற —

''ஓ.கே... ஓ.கே... நீங்க கொஞ்சம் நெர்வெஸ் ஆயிட்டீங்க போல் இருக்கு... அதனாலதான் தடுமாறறீங்க... இதுதான் உங்க முதல் வேலைன்னு நினைக்கிறேன். அதனாலதான் இந்த நெர்வெஸ்னெஸ், பயம் எல்லாம். இந்த நிலைமைல நீங்க நான் டிக்டேட் பண்ணிய எதையும் நோட்ஸ் எடுத்துக்க லைன்னு நினைக்கிறேன். ஆம் ஐ ரைட்....?''

மன்னிப்புக் கேட்கிற விதமாக அவளது பார்வை உயர்ந்தது.

''தட்ஸ் ஆல் ரைட். வேறே யாரையாவது கூப்பிட்டு இன்னிக்கு எழுதிக்கச் சொல் றேன். இதுக்காக வேறே நீங்க அஜிடேட் ஆக வேணாம். புது இடம். புது மனுஷங்கள் றதால் முதல் நாள் இப்படித்தான் இருக்கும். நாளைக்கே சரியாப் போயிடும். ஜஸ்ட் எ மூமெண்ட் ப்ளீஸ்...?''

அவன் அந்தக் கம்பெனி சேர்மென்; முதலாளி. லட்சத்தைத் தவிர பார்த்தறியா தவன். இவள் அவனிடம் வேலை செய்ய வந்தவள் இன்னும் முழுதாய் ஆயிரம் ரூபாயை எண்ணிப் பார்க்காதவள். அவனது காரியதரிசியாகச் சேர்ந்திருப்ப வள். ஆனாலும் அனுமதி கேட்கிற மாதிரி 'ஜஸ்ட் எ மூமெண்ட் ப்ளீஸ்' என்று அவன் சொன்னது இவளுக்குள் இமாலய மதிப்பை ஏற்படுத்தியது. இதுவரை இவள் பார்த்த இடங்களில் வெறும் செக்ஷன் சூபர்வைஸர் களும், சீனியர் கிளார்க்குகளுமே எப்படி விரட்டுவார்கள்... எந்த் மாதிரி மரியாதை யற்றுப் பேசுவார்கள். ஃபைல் வாங்குகிற சாக்கில், பேனா கேட்கிற சாக்கில் விரலைத் தொட்டு, தடவி, பார்வையாலேயே வருடி... அந்த மாதிரி எத்தனை பார்வைகள்! எத்தனை தொடல்கள்! அருவருப்பாய், அடிவயிற்றைப் புரட்டுவதாய்...

அப்படிப் பார்த்துப் பார்த்துச் சலித்துப் போனதில் இவளது கண்ணியமும், கம்பீர மும், இதமான பேச்சும்... மனத்துக்குள் ஒரு நிம்மதியை ஏற்படுத்தியது.

அவன் இண்டர்காம் ரிஸீவரை எடுத்து பட்டனை அழுத்தி —

''மிஸ்டர் ராம்குமார் என் ரூமுக்குக் கொஞ்சம் வர முடியுமா ப்ளீஸ்...''


இவன் ரிஸீவரை வைக்கவும். அழைப்பு மணியழுத்தி ராம்குமார் என்ற அந்த அழ கான, பெண்மையின் நளினம் கலந்த முகம் கொண்ட இளைஞன் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

''குட்மார்னிங் சார்....''.

''உட்காருங்க ராம்குமார்...''

''பரவாயில்லே சார், சொல்லுங்க...''

வந்தவன் உட்கார மறுத்த பின்னர் அத் தனை நேரமாகத் தான் உட்கார்ந்து கொண் டிருப்பது உறுத்த சட்டென்று எழுந்து நின் றாள்.



''ஒரு கதையை எழுதி முடிச்சதும் உங்களுக்கு என்ன தோணும்!''

''நமக்கே இவ்வளவு கஷ்டமா இருக்கே. இதை ஒரிஜினலா எழுதின வர் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பா ரோன்னு தோணும்!''

— கீழை. அ. கதிர்வேல்.

''அடேடே.... நீங்க ஏன் எழுந்துட்டீங்க. ஏற்கெனவே பயந்து போயிருக்கிற அவங் களை, உட்கார மறுத்து நீங்க வேற இன்னும் பயமுறுத்தாதீங்க. ரெண்டு பேரும் உட் கார்ந்துக்கோங்க.''

அவர்கள் உட்கார்ந்ததும் ராம்குமாரைப் பார்த்துப் பேசினான்.

''இவங்க மிஸஸ் தாமஸோட இடத்தில் எனக்கு செகரெட்டரியா அப்பாய்ண்ட் ஆகியிருக்காங்க. புதுசா ஸ்கூல்ல சேர்ந்த இண்டர்கார்டன் குழந்தை மாதிரி மிரண்டு போயிருக்காங்க. இன்னும் அழ ஆரம் பிக்கலை. அதுக்குள்ள நீங்க கூட்டிட்டுப் போய்க் கொஞ்சம் ஆசுவாசப்படுத்தி நம்ப ஆபீஸ், வேலை எல்லாம் சொல்லிக் கொடுங்க.... என்ன....?''

அப்போதுதான் முதல் முறையாக அவ ளைத் திரும்பிப் பார்த்த ராம்குமார் அந்த அழகில் சட்டென்று உறைந்து போனான். 'ஹௌ ப்யூர், ஹௌ டியர்' என்று எம்.ஏ. வில் படித்த கவிதை வரிகள் இயல்பாய் மனத்துக்குள் ஓடின. தான் எப்போதோ பத்து வயதுப் பையனாக இருந்த போது பார்த்த ஸிண்ட்ரில்லா சினிமாவில் மறக்க முடியாமல் ஆழமாகப் பதிந்து போன அந்த ஸிண்ட்ரில்லாவின் முகத்தை மீண்டும் இப் போது பார்க்கிற உணர்ச்சி ஏற்பட்டது.

''என்ன ராம்குமார்.....?''

சடாரென்று திரும்பி ''ஓ கே சார்'' என்று தலையாட்டி அவளிடம்,

''வருகிறீர்களா...?'' என்றான்.

எழுந்து நின்று ஒரு வினாடி தயங்கி என்ன சொல்வதென்று புரியாமல் தலை குனிந்து அவள் ராம்குமாரைப் பின் தொடர —

அவர்களிருவரும் கதவை நெருங்கின போது இவன் கூப்பிட்டான்.

''ஜஸ்ட் எ மினிட் மிஸ்... என் பெயர் கார்த்திகேயன். எல்லாரும் கூப்பிடறது கார்த்திக். இஃப் யு டோண்ட் மைண்ட்... நீங்க உங்க பெயரை மட்டுமாவது சொல் லிட்டுப் போங்களேன் ப்ளீஸ்...''

''ரா....தி....கா!''

நீண்ட நேரம் அந்தப் பெயர் காதுகளில் ரீங்கரித்து மனத்திற்குள் சஞ்சரிக்கத் தன்னையறியாமலே அடிக்கடி அந்தப் பெயரைச் சொல்லிப் பார்த்துக் கொண் டான் கார்த்திக்.....

(தொடரும்)



என் தமிழ் என் மக்கள்

தமிழக. மத்திய அரசியலை நையாண்டி செய்ய வேண்டும்; கொஞ்சம் சுயபிரச்சாரமும் கூடவே செய்ய வேண்டும்; தமக்கு எதிரானவர்களை மறைமுகமாகத் தாக்கவும் வேண்டும்.

இந்த மூன்று நோக்கங்களைக் கொடுத்துக் கதை பண்ணச் சொல்லியிருக்கிறார்கள். கதை இலாகா ஓநாயிடம் மாட்டிய ஆட்டுக்குட்டி போல் திருதிருவென்று விழித்துத் திணறிப் போய் விட்டது.

சிவாஜி வழக்கம் போல சில இடங்களில் 'என் நடிப்பைப் பார், என் நடிப்பைப் பார்' என்று அறைகூவி இருக்கிறார்.

மந்திரி சபைக் கூட்டத்தின் போது இவர் புகுந்து மணிக்கணக்காகப் பிரசங்கம் செய்வது யதார்த்தத்தில் சேர்த்தி இல்லை என்றாலும் வசனங்களை ரசிக்க முடிகிறது.

தம் மகன், தம் மருமகளுக்குத் துரோகம் செய்வதை அறிந்து புழுங்குவதும், அதை மருமகளிடம் அவர் தெரிவிக்கும் போது 'எனக்கு ஏற்கெனவே தெரியும் மாமா' என்று அவள் சொல்லப் பார்வையாலேயே நொந்து போகிறாரே — அங்கே சிவாஜியின் நடிப்பு, கொடி பறக்கிறது.

நிழல்கள் ரவியின் பாத்திரத்தைச் சீராக அமைத்தவர்கள், அவர் திடீர் பல்டியடித்து லஞ்சம் வாங்குவதிலும் பெண் சபலத்திலும் சறுக்கி விழுந்ததற்கு 'நச்' என்று ஒரு காரணத்தைச் சொல்ல வேண்டாமோ?

ஒரேயடியாக அரசியல் வாடை வேண்டாமென்று கிளுகிளுப்புக்காக அபிலாஷா, இந்திராவின் காதல் என்று சேர்த்திருந்தாலும் அரிசியில் கல் போல அவை நெருடத்தான் செய்கின்றன.

சுதந்திரப் போராட்ட ஃப்ளாஷ் பேக் காட்சிகளை கறுப்பு — வெள்ளையில் தந்த புத்திசாலித்தனத்தைப் பாராட்ட வேண்டும்.

படத்தில் அவ்வப்போது டான்ஸ் ஆடி, பாட்டுப் பாடினார்கள் போலத் தெரிகிறது: ஞாபகமே வரவில்லையே!

வடிவுக்கரசி, மேஜர் சுந்தரராஜன், வி. கே. ராமசாமி எல்லோரும் சிவாஜி கட்சி. எல்லோருக்கும் ஒரு பாத்திரம்.

தம் கட்சிக்கான ஒரு பிரச்சாரப் படத்தைக் காசு கொடுத்துப் பார்க்கச் சொல்லும் சிவாஜியின் சாமர்த்தியமே சாமர்த்தியம்!

'பிள்ளைகளுக்காவது' பிடிக்குமா?

— ஜெயமன்மதன்.

அடிமனசு அழுகிறது...

* பல நூறு ஆண்டுகளுக்கு முன்பல்ல; சில பத்து ஆண்டுகளுக்கு முன்புகூட தமிழகத்தில் அரசியல் எவ்வளவு உயர்ந்த தரத்தில் இருந்தது என்பதற்கு உரைகல்லாய் அமைந்த பகுதிகளாய்ப் பொறுக்கியெடுத்து 'நூல் அரங்கம்' பகுதியில் வெளியிட்டிருக்கின்றீர்கள். தன்னை எதிர்த்துப் போட்டியிட்டவருக்கு அமைச்சரவையில் இடம் தர, எதிர்த்துப் போட்டியிட்டவரும் அதை ஏற்றுக் கொண்டு இணைந்து பணியாற்றிய அற்புதத்தையும், தன்னைத் தாக்கி! எழுதியவர் தன் பேரிலுள்ள கோபத்தால் அப்படி எழுதவில்லை. தன் எதிரணித் தலைவர் மீதுள்ள பக்தியால்தான் எழுதியிருக்கிறார் என்ற உண்மையை உணர்ந்த காமராஜரின் பெருந்தன்மை ஆகியவற்றையும், ஆபாசப் பேச்சு, அக்னித் திராவக வீச்சு என்றாகிப் போன இன்றைய அரசியல்வாதிகளின் தரத்தையும் எண்ணிப் பார்க்கும் போது அடி மனசு அழுகிறது.

திருக்குவளை, கவிஞர் வெற்றிப்பேரொளி.

* "இருபத்தோராம் நூற்றாண்டு இந்தியன் எப்படி இருப்பான் என்ற கற்பனையைக் கண்டு அசந்து போனேன்! இருபத்தோராம் நூற்றாண்டு இந்தியனை அப்படியே 'உரித்து' வைத்து விட்டீர்கள்."

திருச்சி. அப்துல் சலாம்.

* பர்மாவில் புரட்சித் தலைவி என்ற தலைப்பைப் பார்த்தவுடன் எங்கே நமது புரட்சித் தலைவிதான் தேர்தல் பிரசாரம் செய்யப் பர்மாவுக்குச் சென்று விட்டாரோ என்று நினைத்தேன். கட்டுரையைப் படித்த பின்புதான் தெரிந்தது. அவர் பர்மா புரட்சித் தலைவி என்று. உண்மையான புரட்சித் தலைவி அவர் தான்.

மயிலாடுதுறை. டி. சோம சுந்தரம்.

* 'உன்னால் முடியும் தம்பி' சினிமா விமர்சனம் கண்டேன். பாலுமகேந்திராவுக்கு ஒப்பான கேமரா திறமையுடைய ரகுநாத ரெட்டியை இப்படத்திற்காகப் பாராட்டவில்லையென்றால் ஒரு வேளை படத்தைப் பார்க்காமல் தான் விமர்சனம் எழுதியிருக்கிறீர்களோ என்று சந்தேகப்பட வைக்கிறது.

திருச்சி — 4. ரா. ஸ்ரீதரன்.

* தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் என்று அறிவித்தவுடன் தன்னுடைய பிடிவாதப் போக்கை மாற்றிக் கொள்ளாத பல நிர்வாகங்கள் உள்ள இக்காலத்தில் தொழிலாளர்களை எவ்வாறு அனுசரித்துப் போக வேண்டும்; அவர்களை எப்படி சமாதானப் படுத்த வேண்டும் என்பதற்குச் சென்னை பாட்லிங் கம்பெனி ஒரு முன்னுதாரணம்.

தலைஞாயிறு அக்ரஹாரம். ந. இளங்கோவன்.

* அமரர் கல்கி அவர்களின் 'ஒற்றை ரோஜா' கதையைப் படித்தேன். எத்தனை முறை படித்தாலும் தெவிட்டாத அவர் நடையும் தன்னம்பிக்கை ஊட்டும் அவர் கருத்துக்களும் என்னை வெகுவாகக் கவர்ந்தன.

சென்னை — 5. எஸ். எஸ். பாரி.

* யார் லார், அந்த சித்ரா தம்பி? அறிமுக எழுத்தாளர் மாதிரியே தெரியவில்லை. அனுபவமிக்க ஓர் எழுத்தாளரின் நடையைப் போல் இருந்தது. அந்த ஆரம்ப எழுத்தாளரின் நடை. மேலும் வளர வாழ்த்துக்கள்.

திருச்சி — 20. மீனம் தனுக.

* இராமாயணக் காப்பியப் பகுதியைப் புதிய கோணத்தில் நெருடலின்றிச் சொல்லி ரசிக்க வைத்தாலும் தலைப்பிலே தவறி விட்டாரே: 'புத்ர சோகம்' என்ற வார்த்தை புத்திரனை இழந்த சோகம் என்றுதான் இன்று வரை ஆளப்பட்டு வந்திருக்கிறது. இங்கே மாறியதேன்?

சென்னை — 91. ஐயாறு எஸ். வாசுதேவன்.

* பரஸ்பரம் அன்பு செலுத்தி, ஒருவரோடு ஒருவர் பின்னிப் பிணைந்து வாழும் இடத்தில், ஜாதி சாத்தான் மூக்கை நுழைத்து அவர்களுக்குள் பிரிவினை, பகைமையை வளர்த்து, அழிவுக்கு வழிகோலும் யதார்த்தத்தை 'அன்பு நிறைய உடையவர்கள்' சிறுகதை அழகாகச் சித்திரித்திருந்தது. எழுதிய கோவிந்தராஜ் பாராட்டுக்குரியவர்!

திருத்துறைப்பூண்டி. ஜெ. பிஸ்மி.

* அரசியல்வாதிகளிடையே கொள்கை அளவில் எவ்வளவு தான் வேறுபாடுகள் இருந்தாலும் ஒருவரை மற்றவர் தாக்குவதென்பது ஜனநாயக மரபுகளைக் குழிதோண்டிப் புதைக்கும் செயலே. சாத்தூர் ராமச்சந்திரனைத் தாக்கிய சம்பவத்தைக் கண்டித்துத் தாங்கள் எழுதிய தலையங்கம் சிந்தனைக்குரியது.

மதுரை — 7. எஸ். செல்வன்.

* மேடைகளில் ஒருவரை ஒருவர் தரம் தாழ்த்தித் திட்டிக் கொண்டு, தாம் உணர்ச்சிவசப் படுவதோடு தொண்டர்களையும் உணர்ச்சிவசப்பட வைத்து விடுவதுதான் இதுபோன்ற துர்ச் சம்பவங்களுக்குக் காரணம் என்பதைத் தெள்ள தெளிவாகத் தலையங்கம் எடுத்துக் காட்டியது.

சீர்காழி. சண்பை. சிவ. சண்முகம்.

* காமெராக் கலைஞர் பெபிடா சேத்தின் கேரள அனுபவங்கள் சிலிர்க்க வைத்தன. ஏராளமான பொருள் நஷ்டமும், மெய்வருத்தமும் அடைந்த அவருக்குக் கேரள மக்கள் முதலில் மறுத்தாலும் முயற்சியின் பலனாய்ப் பின் பரிபூரண ஒத்துழைப்புத் தந்தது நெகிழ்த்தக்கது. கலையை விலை பேசாத அந்த அற்புதக் கலைஞரின் பேட்டி அருமை.

சென்னை — 52. கிரஸெண்ட்.

* பெபிடா சேத் இங்கிலாந்துப் பெண்மணியா? நம்பவே முடியவில்லை போங்கள்! அசல் நமது பாரதப் பெண்தான். 'இந்த சடங்குகளை இந்த மக்களின் வாழ்க்கைப் பின்னணியோடு தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டும்' என்ற பெபிடா சேத்தின் கூற்றில் நூறு சதம் உண்மை இருக்கிறது.

மொரட்டுப்பாளையம். க. இர்ரஜேஸ்வரன்.

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: கி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3 1 5 4 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
அறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.


கல்கி
2.10.88
இலவச இணைப்பு
அமரர்
கல்கி
காதறாக்
கள்ளன்

முன்னுரை

சில ஆண்டுகளுக்கு முன்னால் திசையெல்லாம் புகழும் திருநெல்வேலி மாவட்டத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தேன். (மாவட்டம் என்பது ஜில்லாவுக்கு நல்ல தமிழ் வார்த்தை. தமிழ் வளர்ந்த திருநெல்வேலியாதலால் 'மாவட்டம்' என்ற சொல்லைப் போட்டு வைத்தேன்.) சாலைகள் வெகு மனோரம்யமாயிருந்தன. வழியில் தோன்றிய ஒவ்வொரு ஊரும் ஒவ்வொரு மலையும் ஒவ்வொரு குன்றும் ஒவ்வொரு கால்வாயும் ஒவ்வொரு ரஸமான கதை சொல்லும் எனத் தோன்றிற்று. ஆனால் காரில் காற்றெனக் கடுகிச் சென்று கொண்டிருக்கையில் கதை கேட்பதற்கு நேரம் எங்கே?

நல்லவேளையாக, சிற்றாறு ஒன்று எதிர்ப்பட்டது. அதற்குப் பாலம் கிடையாது. கார் இறங்கித்தான் போக வேண்டும். டிரைவர் சிற்றாற்றின் கரையில் வண்டியை நிறுத்தினான். அங்கே ஒரு விசாலமான மருத மரத்தின் அடியில் முறுக்கும், வடையும் வெற்றிலைப் பாக்கும் விற்கும் ஒரு பெண் பிள்ளை, தன் கூடைக் கடையுடன் உட்கார்ந்திருந்தாள். அந்தப் பெண் பிள்ளைக்குப் பக்கத்தில் ஒரு பெரியவர் வீற்றிருந்தார். அவருடைய பெரிய மீசை நரைத்திருந்த போதிலும் நன்றாக முறுக்கி விடப்பட்டிருந்தது. அவர் அப்பெண் பிள்ளையிடம் முறுக்கு வாங்கிக் கையினால் அரைத்துத் தூளாக்கி அதை வாயில் போட்டுக் கொண்டிருந்தார். காரில் இருந்தபடியே எங்களில் ஒருவர், "ஏன் ஐயா, ஆற்றில் தண்ணீர் அதிகமா? கார் போகுமா?" என்று கேட்டார். அதற்குப் பெரியவர், "தண்ணீர் கொஞ்சந்தான்; முழங்காலுக்குக் கூட வராது!" என்றார்.

இதைக் கேட்ட டிரைவர் வண்டியை ஆற்றில் இறக்கினான். பெரியவர் சொன்னது சரிதான். தண்ணீர் கொஞ்சமாகத்தான் இருந்தது. ஆகையால் கார் சுலபமாகத் தண்ணீரைக் கடந்து போய் விட்டது. ஆனால் தண்ணீருக்கு அப்பால் நெடுந்தூரம் பரந்து கிடந்த மணலைக் காரினால் தாண்ட முடியவில்லை. சில அடிதூரம்போனதும் காரின் சக்கரங்கள் மணலிலே நன்றாய்ப் புதைந்துவிட்டன. காரின் விசைகளை டிரைவர் என்னவெல்லாமோ செய்து பார்த்தான். பயங்கரமான சப்தங்கள் உண்டாயின; மணலும் புகையும் கலந்து பறந்தன. முதலில் சிறிது நேரம் சக்கரங்கள் இருந்த இடத்திலேயே சுழன்றன. அப்புறம் சுழலவும் மறுத்து விட்டுப் பூரண வேலை நிறுத்தம் செய்தன. வண்டிக்குள் இருந்தவர்கள் இறங்கி வெளியே வந்தோம். எங்களாலேதான் வண்டி நகரவில்லை என்று நினைத்தானோ என்னமோ, டிரைவர் நாங்கள் இறங்கியதும் மறுபடி ஒரு முறை பிரயத்தனம் செய்தான். அதுவும் பலிக்கவில்லை.

பிறகு டிரைவரும் காரிலிருந்து கீழே இறங்கினான். சிறிது நேரம் காரைச் சுற்றிச் சுற்றிப் பிரதட்சணம் வந்தோம். எங்களில் ஒரு ஹாஸ்யக்காரர் காருக்கு முன்னால் நின்று கன்னத்தில் போட்டுக் கொண்டு, "அப்பா! காரப்பா! சரணம்! சரணம்!" என்றார். அதனாலும் அந்தக் கார் அசைந்து கொடுக்கவில்லை.

வெயிலில் சுடுகிற மணலில் என்னால் நிற்க முடியாது என்று நான் கோபமாய்ச் சொல்லிவிட்டு, ஆற்றின் தண்ணீரைத் திரும்பக் காலினால் நடந்து கடந்து கரைக்குச் சென்றேன். மருத மரத்தின் அடியில் உட்கார்ந்திருந்த பெரியவரின் பக்கத்தில் சென்று மேல் துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்தேன்.

"ஏன், ஐயா! இப்படிச் செய்யலாமா? கார் ஆற்றைக் கடக்காது என்று சொல்ல வேண்டாமா?" என்றேன்.

"அழகாயிருக்கிறது! தண்ணீர் முழங்கால் வரை கூட வராது என்று சொன்னேன். அப்படியேயிருந்ததா, இல்லையா? உங்கள் ஓட்டை மோட்டார் மணலிலே போகாது என்பது எனக்கு எப்படித் தெரியும்? நல்ல கதை? காதறாக் கள்ளன் குதிரையிலே மரகதவல்லியை ஏற்றிக் கொண்டு வந்ததினாலே தப்பிப் பிழைத்தான்! உங்கள் மாதிரி மோட்டார் காரிலே வந்திருந்தால் அகப்பட்டுக் கொண்டு விழித்திருப்பான்!" என்றார்.

நான் அப்போது அடைந்த குதூகலத்துக்கு அளவில்லை. 'ஆற்று மணலில் கார் அகப்பட்டுக் கொண்டதே நல்லதாய்ப் போயிற்று; நமக்கு ஒரு நல்ல கதை கிடைக்கப் போகிறது' என்று எண்ணி உற்சாகம் அடைந்தேன்.

"அது என்ன கதை? காதறாக்கள்ளன் என்றால் யார்? அப்படி ஒரு கள்ளனா? நான் கேள்விப்பட்டதில்லையே?" என்றேன்.

"நீங்கள் கேள்விப்படாத காரியங்கள் எத்தனையோ இருக்கலாம்! அதற்கு நானா பொறுப்பாளி?" என்று சொன்னார் அந்தப் பெரியவர்.

"கோபித்துக் கொள்ளாதீர்கள்! கதையைச் சொல்லுங்கள்!" என்றேன்.

நான் எதிர் பார்த்தது வீண் போகவில்லை. அருமையான கதை ஒன்று கிடைத்தது. 'அருமையான கதை' என்று எனக்குத் தோன்றியதைத்தான் சொல்லுகிறேன். கேட்டுவிட்டு நீங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்.

பெரியவர் சொன்ன கதை

அதோ, ஆற்றைக் கடந்ததும், அப்பால் ஒரு கிராமம் தெரிகிறதல்லவா? அதன் பெயர் என்னவென்று தெரியுமா? 'பரி உயிர் காத்த நல்லூர்' என்று பெயர். ஆமாம்; திருநெல்வேலிச் சீமையில் ஊரின் பெயர்கள் கொஞ்சம் நீளமாகத்தான் இருக்கும். சிலர் "பரி உயிர் நீத்த நல்லூர்" என்றும் சொல்லுவதுண்டு. இந்தக் கிராமத்துக் கோவிலில் உள்ள கல்வெட்டு

சாஸனங்களில் 'பரி உயிர் காத்த நல்லூர்' என்றுதான் இருக்கிறது. அதுதான் சரியான பெயர் என்பது என்னுடைய அபிப்பிராயம். இந்தக் கிராமத்துக்கு அந்தப் பெயர் எப்படி வந்தது என்ற கதையைத்தான் இப்போது சொல்லப் போகிறேன்.

சற்று நீங்கள் வந்த வழியைத் திரும்பிப் பாருங்கள். அதோ ஒரு 'பொத்தை' தெரிகிறதல்லவா? உங்கள் நாட்டில் என்ன சொல்வீர்களோ தெரியாது. இந்த நாட்டில் சிறிய மொட்டைக் குன்றுகளுக்குப் பொத்தை என்று பெயர். அந்தப் பொத்தைக்கு அப்பாலே ஒரு புளியந்தோப்பு இருக்கிறது. நீங்கள் பார்த்தீர்களோ என்னவோ தெரியாது. காரில் பறந்து வருகிறவர்கள் எங்கே பார்க்கப் போகிறீர்கள்? நான் சொல்லுகிறதை நம்ப வேண்டியதுதான். அங்கே ஒரு புளிய மரத் தோப்பு இருக்கிறது. எனக்கு வயது நாற்பது ஆகியிருந்த போது அங்கே புளியஞ்செடிகள் நட்டார்கள். இப்போது மரங்களாகியிருக்கின்றன. இந்த நாளிலே ஒருவரும் மரம் நடுகிறதில்லை. அந்தந்த வருஷத்திலே பலன் தருகிற விவசாயமே செய்கிறார்கள். இப்போதுள்ள புளிய மரம் எல்லாம் போய் விட்டால், நம்முடைய சந்ததியில் வரும் ஜனங்கள் புளிக்கு என்ன செய்வார்களோ தெரியாது. ஒரு புளியம்பழம் ஒரு ரூபாய்க்கு விற்கும் காலம் வந்தாலும் வரும்! நல்ல வேளை, நான் அப்படிப்பட்ட காலத்தைப் பார்ப்பதற்கு இருக்க மாட்டேன்.

அந்தப் பொத்தைக்குப் பக்கத்தில் இப்போது புளியந்தோப்பு இருக்கும் இடத்தில் அறுபது வருஷத்துக்கு முன்னாலும் ஒரு புளியந்தோப்பு இருந்தது. ஒருநாள் பௌர்ணமியன்று சாயங்காலம் அந்தப் புளியந்தோப்பில் ஆள்கள் வந்து கூட ஆரம்பித்தார்கள். ஆள்கள் என்றால், இந்தக் காலத்து மனிதர்களைப் போல் நோஞ்சைகள் அல்ல. ஆறு அடி உயரம், ஆஜானுபாகுவான ஆள்கள். அவர்களில் சிலர் கையில் தடி வைத்திருந்தார்கள். சிலர் கத்தி, கபடா, வேல், ஈட்டி முதலிய ஆயுதங்களும் வைத்திருந்தார்கள். அவர்கள் வாள்களையும் வேல்களையும் விளையாட்டாக ஒன்றோடொன்று மோதவிட்ட போது டணார் டணார் என்று சத்தம் எழுந்தது. தடிகளோடு தடிகள் முட்டிய போது சடபடா என்ற சத்தம் உண்டாயிற்று. அவர்கள் ஒருவரோடொருவர் பேசிய வீர வாதங்கள் பாபநாசத்து அருவி விழும் ஓசையைப் போல் பேரிரைச்சலாகக் கேட்டது.

சூரியன் மேற்கே அஸ்தமித்தது. அஸ்தமித்ததற்கு அடையாளமாக மேற்கு வானத்தில் சில சிவப்புக் கோடுகள் மட்டும் தெரிந்தன. அப்போது கிழக்கே பூரண சந்திரன் திருமாலின் கையில் சுழலும் சக்கரத்தைப் போல் தகதகவென்று உதயமானான். அதே சமயத்தில் குதிரைகள் வரும் காலடிச் சத்தம் கேட்டது. உடனே அந்தப் புளியந்தோப்பில் பேச்சு அடங்கி நிச்சப்தம் ஏற்பட்டது. ஒருவருக்கொருவர் காதோடு "மகாராஜா வருகிறார்" என்று சொல்லிக் கொண்டார்கள்.

சற்று நேரத்துக்கெல்லாம் ஏழெட்டுக் குதிரைகள் வந்தன. ஒவ்வொரு குதிரையின் மேலும் ஒரு வீரன் வந்தான். எல்லாருக்கும் முதலில் வந்தவன் அவர்களுடைய தலைவன். அவன் பெயர் தில்லைமுத்துத் தேவன். அவனைத்தான் "மகாராஜா" என்று அந்த வீரர்கள் அழைத்தார்கள். தில்லைமுத்துத் தேவன் ஒரு பெரிய பாளையக்காரன். அறுபது கிராமங்களுக்கு அதிபதி. அவன் சொல்லி விட்டால், எந்த நேரமும் ஆயிரம் ஆட்கள் வந்து விடுவார்கள். சண்டையில் உயிரைக் கொடுக்கத் தயாராக வருவார்கள்.



"தொலைதூரம் போற எக்ஸ்பிரஸ் பஸ்களுக்கு இரண்டு டிரைவர்கள் இருப்பாங்களாமே.....?"

"ஆமாம்டா.....!"

"அதெப்படி ஒரு பஸ்ஸை இரண்டு டிரைவர்கள் ஓட்ட முடியும்.....?"

"அதான் எனக்கும் புரியலை!"

— கடுவை கோபால்சாமி.

பாளையக்காரன் தில்லைமுத்துத் தேவன் புளியந்தோப்புக்கு வந்ததும், தோப்பில் இடைவெளியிருந்த ஒரு இடத்தைப் பிடித்து அங்கே குதிரையிலிருந்து கீழே இறங்கினான். மற்றவர்களும் இறங்கினார்கள். முன்னமே தயாராக வைத்திருந்த ஒரு சிம்மாசனத்தைக் கொண்டு வந்து போட்டார்கள். அதன் பேரில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு தில்லைமுத்துத் தேவன் உட்கார்ந்தான்.

அவனுடைய மதி மந்திரியான நல்லமுத்துத்தேவன் உடனே வெற்றிலைப் பாக்குப் பெட்டியை எடுத்துப் பாக்கும் வெற்றிலையும் எடுத்துக் கொடுத்தான்.

பாளையக்காரன் வெற்றிலைப் பாக்கைக் குதப்பிக் கொண்டே "நல்லமுத்து! உனக்கு என்ன தோன்றுகிறது? கருடாசலத்தேவன் சொல்லி அனுப்பியபடி ராஜி பேசுவதற்கு வருவான் என்று நினைக்கிறாயா?" என்று கேட்டான்.

"கட்டாயம் வருவான், மகாராஜா! அவன் தலை என்ன இரும்பா? அப்படி வராவிட்டால் என்ன நடக்கும் என்று அவனுக்குத் தெரியாதா?" என்றான் நல்லமுத்துத் தேவன்.

''அவன் வராவிட்டால் என்ன நடக்கும்? உன் உத்தேசம் என்ன?'' என்று பாளையக்காரன் கேட்டான்.

''முதல் ஜாமம் முடிவதற்குள் அவன் இங்கே வந்து மகாராஜா சொல்லுகிறபடி நடக்கிறேன் என்று ஒப்புக்கொள்ளா விட்டால், நம்முடைய காரியத்தை நடத்த வேண்டியதுதான்!......''

''நம்முடைய காரியம் என்றால்........''

''கருடாசலத் தேவனின் அரண்மனை, சவுக்கண்டி, களஞ்சியம், வைக்கோற் போர், மாட்டுக் கொட்டகை, குதிரை லாயம் எல்லாவற்றையும் அக்னி தேவனுக்கு இரையாகக் கொடுக்க வேண்டியதுதான்!''

''அட பாவி!.....''

''மகாராஜா! யார் பாவி? இருபது வயதான மருமகப் பெண்ணை யாருக்கும் கட்டிக் கொடுக்காமல் அரண்மனையில் பூட்டி வைத்திருக்கிறானே, அவன் பாவியா? நான் பாவியா? பெற்று வளர்த்த பிள்ளையைக் கொஞ்சங்கூட மனத்தில் ஈவிரக்கமில்லாமல் வீட்டை விட்டு விரட்டியடித்தானே, அந்த மனுசன் பாவியா? நான் பாவியா?''

''அது எல்லாம் சரிதானப்பா! கருடாசலத்தேவன் மேல் இரக்கப்பட்டு நான் ஒன்றும் சொல்லவில்லை. அரண்மனைக்குத் தீவைத்துக் கொளுத்தினால் அந்தப் பெண் மரகதவல்லிக்கும் ஒருவேளை ஏதாவது ஆபத்து வரலாம் அல்லவா?''

''வந்தால் வந்ததுதான்! அதற்காக நாம் என்னத்தைச் செய்கிறது? அந்தக் கிழவனுக்கல்லவா அதைப் பற்றி கவலையிருக்க வேண்டும்?''

''இருந்த போதிலும் என்னுடைய யுக்தி பலித்தால் ஓர் ஆபத்தும் இல்லாமல் ஒரு சொட்டு ரத்தம் சிந்தாமல் காரியம் கைகூடி விடுமல்லவா?''

''அதிலே என்ன லாபம்? மகாராஜா இரத்தம் சிந்துவதற்குப் பயப்படும் படியான காலம் இப்போது என்ன வந்து விட்டது? போயும் போயும் மகாராஜா ஒரு கள்ளப் பயலிடம் நம்பிக்கை வைத்து ஒரு காரியத்துக்கு ஏவுகிறதென்பது எனக்குப் பிடிக்கவில்லை.....''

''நல்ல முத்து! அவன் சாதாரணக் கள்ளன் இல்லை. உலகமெல்லாம் சொல்லுகிறார்களே? கள்ளனாயிருந்தாலும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவன். சொன்ன சொல் தவறமாட்டான்.....''

''இதெல்லாம் பெண் பிள்ளைகள் கட்டி விட்ட கதை. 'காதறாக் கள்ளன்' என்ற பட்டம் அவனுக்குப் பெண் பிள்ளைகள் கொடுத்ததுதானே? அதை எஜமானரும் நம்புகிறீர்களே?''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கும் போது புளியந்தோப்பை நெருங்கி ஒரு ஒற்றைக் குதிரை வரும் காலடிச் சத்தம் கேட்டது. தோப்பில் கூடியிருந்த ஆட்கள் அத்தனை பேரும் குசுகுசுவென்று பேசத் தொடங்கினார்கள்.

''அவன்தான் போலிருக்கிறது!'' என்றான் பாளையக்காரன்.

நல்ல முத்துத் தேவன் எழுந்து நின்று கழுத்தை வளைத்துப் பார்த்துவிட்டு, ''ஆமாம்; அவன்தான் போலிருக்கிறது. நீங்கள் ஆச்சு; உங்கள் காதறாக் கள்ளன் ஆச்சு; எப்படியேனும் போங்கள். நான் விலகிக் கொள்ளுகிறேன்'' என்று சொல்லி விட்டு அப்பால் போனான்.

2

'காதறாக் கள்ளன்' என்பவனைப் பற்றி உங்களுக்கு இப்போது சொல்லி விடுகிறேன். இந்தத் திருநெல்வேலிச் சீமையிலே பெண் பிள்ளைகள் காதிலே பெரிய தொளைகளைப் போட்டுக் கொண்டு ஒன்று இரண்டு மூன்று என்பதாகத் தங்கத் தோடுகளையும் முருகுகளையும் தொங்க விட்டுக் கொள்வார்கள். இப்போது கூட வயதான பெண் பிள்ளைகளின் காதுகள் அப்படித் தொங்குவதை நீங்கள் பார்க்கலாம். அறுபது வருஷத்துக்கு முன்னால் இது ரொம்பவும் அதிகமாயிருந்தது. ஒவ்வொரு பெண் பிள்ளையின் இரண்டு காதிலும் சேர்ந்து கால் வீசை தங்கத்துக்குக் குறையாமல் இருக்கும். அந்த நாளில் இங்கேயெல்லாம் கள்ளர் பயம் அதிகம் உண்டு. அதோ தெரிகிறதே, அந்த மாதிரி பொத்தைகள் சாலையில் இருந்தால், கட்டாயம் அங்கே கள்ளர்கள் ஒளிந்திருப்பார்கள். அடர்ந்த தோப்புகளிலேயும் மறைந்திருப்பார்கள். கால் நடையாகவோ, ஒரு வண்டி இரண்டு வண்டியிலோ யாராவது பெண் பிள்ளைகள் போனால் வயிற்றிலே நெருப்பைக் கட்டிக் கொண்டு தான் போக வேண்டும். காதிலே தொங்கும் தங்கத்துக்காகக் காதை அறுத்துக் கொண்டே போய்விடுவார்கள். இதனால் அந்த நாளில் 'காது அறுந்த மாதர்' பலரை இந்தத் திருநெல்வேலிச் சீமையெங்கும் காணும்படியிருந்தது.

இப்படியிருக்கும் நிலைமையில் ஒரு அதிசயமான பக்காத் திருடன் கிளம்பினான். அவன் மற்றத் திருடர்களைப் போல் கூட்டம் சேர்த்துக் கொண்டு வருவதில்லை, தனி ஆளாகக் குதிரையில் ஏறிக் கொண்டு வருவான். முகத்தில் கீழ்ப் பாதியை, வாய் வரையில், கறுப்புத் துணியைக் கட்டி மறைத்திருப்பான். கையிலே கத்தி, துப்பாக்கி; எல்லாம் வைத்திருப்பான். சாலையிலே ஒற்றைக் குதிரைச் சப்தம் கேட்டாலே பிரயாணிகள் நின்று விடுவார்கள். இருபது; முப்பது பேராகப் போகிறவர்கள் கூடப் பயந்து போய் நிற்பார்கள். அவன் ஒருவனாக வந்து, குதிரை மேலிருந்து இறங்கி, எல்லாரையும் மடியை அவிழ்த்துக் காட்டச் சொல்லுவான். வண்டிகளைச் சோதனை போடுவான். மூட்டைகளைப் பிரித்துப் பார்ப்பான். அவனுக்கு இஷ்டமான பொருள்களைச் சேர்த்துக் கட்டிக்

கொண்டு குதிரையில் ஏறிப் போய் விடுவான். பெரும்பாலு ம் அவன் ஏழைகளை ஒன்றும் செய்ய மாட்டான். பணக்காரர்களிடமிருந்து தான் பணத்தைப் பறிப்பான். பணக்கார ஸ்திரீகளிடமிருந்து நகை நட்டுக்களைப் பறித்துக் கொள்வான். ஆனால் மற்றத் திருடர்களு க்கும் அவனுக்கும் ஒரு வித்தியாசம் இருந்தது. ஸ்திரீகளின் கழுத்திலும் கையிலும் உள்ள நகைகளைக் கழற்றிக் கொள்வானே தவிர, காதை அறுக்க மாட்டான். இது காரணமாக அவனுக்குக் 'காதறாக் கள்ளன்' என்று பட்டப் பெயர் ஏற்பட்டது. முக்கியமாக, மாதர்கள் இந்தப் பட்டப் பெயரை எங்கே பார்த்தாலும் பிரபலப்படுத்தினார்கள். அவனிடம் நகைகளைப் பறி கொடுத்த ஸ்திரீகள்தான் அவனைப் பற்றி அதிகமாகப் புகழ்ந்து பேசினார்கள். நகை போனால் போகட்டும் காது தப்பியதே! என்று அவர்களு க்குச் சந்தோஷம். பெண் புத்தி பேதைப் புத்தி என்று தெரியாமலா பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள்? அது மட்டுமல்ல; முட்டாள் ஜனங்கள் இன்னும் என்ன வெல்லாமோ அந்தக் கள்ளனைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்கள். அவன் பணக்காரர்களிடம் பணத்தைப் பறித்து ஏழைகளு க்கு ஒத்தாசை செய்கிறான் என்றெல்லாம் பேசத் தொடங்கினார்கள். என்ன விசித்திரம் பாருங்கள்! செய்கிறது திருட்டுத் தொழில்! அதிலே தானதர்மம் செய்து 'தர்மப் பிரபு' என்று பட்டம்.

அவன் பிறந்த வேளை அப்படி! வேறு என்னத்தைச் சொல்லு கிறது? அவனைப் பிடித்துக்கொடுப்பதற்குயார்யாரோ முயற்சி செய்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. ஏன்? பாளையக்காரன் தில்லை முத்துத் தேவன் கூடக் காதறாக் கள்ளனைப் பிடிக்கப் பார்த்தான்; முடியவில்லை. இப்போது அந்தக் கள்ளனைத் தன்னுடைய காரியத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று வரவழைத்தான்.

காதறாக் கள்ளன் வந்து பாளையக்காரனுக்கு முன்னால் நின்றதும், பாளையக்காரன் அவனை ஏற இறங்கப் பார்த்தான்.

''கள்ளா! உன் தைரியத்தை மெச்சினேன்!'' என்றான்.

துணியால் மூடியிருந்த வாயினால் கள்ளன் பேசியது கிணற்றுக்குள்ளேயிருந்து பேசுவது போலக் கேட்டது.

''என்னுடைய தைரியத்தை நீங்கள் மெச்சும்படியாக நான் ஒன்றும் செய்துவிடவில்லையே!'' என்றான் கள்ளன்.

''என்னுடைய ஆட்கள் இருநூறு பேருக்கு நடுவில் நீ தன்னந் தனியாக என் முன்னால் வந்து நிற்கிறாயே, அதற்கு எத்தனை தைரியம் வேண்டும்!'' என்றான் தில்லைமுத்துத் தேவன்.

கள்ளன் இலேசாகச் சிரித்து விட்டு, ''ஆமாம்; அந்த தைரியத்தை மெச்ச வேண்



''எதிர் நாட்டு மன்னன் நமது நாட்டின் மீது படையெடுத்து வரும் செய்தி வீரர்களுக்கு முன்பே தெரிந்து விட்டது என்று எப்படி சொல்கின்றீர்கள்?''

''எல்லோரும் ஒரே நேரத்தில் மெடிக்கல் லீவு கேட்டு விண்ணப்பித்துள்ளார்கள் வேந்தே!''

— கீழை. அ. கதிர்வேல்.



''என்ன நம்ம கட்சியோட மாநாட்டுக்கு எழுபது பேரே வந்து இருக்கிறாங்க?''

''அதனாலென்ன? நடந்தது செயற்குழு கூட்டம்னு பத்திரிகைக்கு நியூஸ் கொடுத்துட்டால் போச்சு!''

— கடுவை கோபால்சாமி.

டியதுதான்! ஆனால் இதற்காக, — என்னுடைய தைரியத்தைச் சோதிப்பதற்காக, — மட்டுமே என்னை வரவழைத்தீர்களா? வேறு ஏதாவது காரியம் உண்டா?'' என்று கேட்டான்.

''காரியம் இருக்கிறது; அதிலே உன்னுடைய தைரியத்தோடு சாமர்த்தியத்தையும் பரிசோதிக்க உத்தேசம்.''

''சொல்லுங்கள், கேட்கிறேன்.''

''இங்கிருந்து அரைக் காத தூரத்தில் கருடாசலத் தேவரின் அரண்மனை இருக்கிறதே, உனக்குத் தெரியுமா?''

கள்ளன் சிரித்து விட்டு, ''மேலே சொல்லுங்கள்!'' என்றான்.

''என்ன சொன்னாலும் ஓர் அசட்டுச் சிரிப்புச் சிரிக்கிறாயே? அதற்கு அர்த்தம் என்ன?'' என்றான் பாளையக்காரன்.

''அர்த்தமில்லாத சிரிப்புதான். மேலே சொல்லுங்கள். கருடாசலத் தேவரின் அரண்மனையை எனக்குத் தெரிந்தால் என்ன, தெரியாமற்போனால் என்ன? அங்கே உங்களு க்கு என்ன காரியம் ஆக வேண்டும் என்று சொல்லு ங்கள்.''

''சரி சொல்லுகிறேன், கேள்! கருடாசலத்தேவர் இரவு இரண்டாம் ஜாமத்தில் இங்கே என்னைப் பார்ப்பதற்காக வருவார். அநேகமாக இதற்குள் அரண்மனையை விட்டுப் புறப்பட்டிருப்பார். உன்னைப் போல் அவர் தனியாக வரமாட்டார். அவருடைய முக்கியமான ஆட்களைத் துணைக்கு அழைத்துக் கொண்டு வருவார். அரண்மனையில் அச்சமயம் காவல் காப்பதற்கு அதிகம் பேர் இருக்க மாட்டார்கள். தெரிகிறதா?.......''

''தெரிகிறது. அச்சமயம் நான் என்ன செய்யவேண்டும்?''

''இங்கிருந்து நீ சாலை வழியாகப் போகாமல் வேறு குறுக்கு வழியாகப் போக வேண்டும். கருடாசலத் தேவருடைய அரண்மனையை நெருங்க வேண்டும். உன்னுடைய புகழ்தான் எங்கும் பரவியிருக்கிறதே? உன்னைப் பார்த்தவுடனேயே அரண்மனையைக் காவல் காப்பவர்கள் நடுங்கிப் போவார்கள். பிறகு, உன்னுடைய சாமர்த்தியத்தினால் அரண்மனைக்குள் எப்படியாவது புகுந்துவிட வேண்டும். அங்கே கருடாசலத் தேவரின் மருமகள் மரகதவல்லி இருப்பாள். அவளைக் கருடாசலத் தேவர் ஐந்து வருஷமாகச் சிறையில் வைத்திருப்பதுபோல் வைத்திருக்கிறார். அவளை விடுதலை செய்து கொண்டு வந்து என்னிடம் ஒப்புவித்து விடவேண்டும். கள்ளா! என்ன சொல்லுகிறாய்? உன்னால் இது முடியுமா?''

கள்ளன் சற்று மௌனமாயிருந்தான். பிறகு, ''எதற்காகமரகதவல்லியைக்கொண்டு



வரச் சொல்லுகிறீர்கள்? அந்தப் பெண் விஷயத்தில் உங்களுடைய நோக்கம் என்ன?'' என்று கேட்டான்.

''நோக்கம் என்னவாயிருக்கும்? நீதான் ஊகித்துக் கொள்ளேன். மூன்று வருஷத்துக்கு முன்னால் மரகதவல்லியை எனக்குக் கட்டிக்கொடுக்கும்படி கருடாசலத்தேவரைக் கேட்டேன். அவர் கண்டிப்பாக 'முடியவே முடியாது' என்று சொல்லி விட்டார். அதற்குக் காரணம் எதுவும் சொல்லவில்லை. ஆனால் நான் ஒன்றில் மனத்தைச் செலுத்தி விட்டால், அதை இலேசில் விட்டு விடுவேனா? பலாத்காரமாக அவருடைய அரண்மனையில் புகுந்து மரகதவல்லியைக் கைப்பற்றிக் கொண்டு வந்து விடுவது என்று தீர்மானித்து விட்டேன். அதற்கு இன்றைக்குத்தான் நாள் குறிப்பிட்டிருந்தேன்......

''பின்னே, என்னை எதற்காகக் கூப்பிட்டு அனுப்பினீர்கள்? இத்தனை ஆட்களோடு நீங்கள் போய்ச் செய்ய முடியாத ஒரு காரியத்தை ....''

''செய்ய முடியாத காரியம் என்று யார் சொன்னது? நான் படையெடுப்புக்கு ஆயத்தம் செய்வதைக் கருடாசலத் தேவர் அறிந்து கொண்டு ஆள்மேல் ஆள் விட்டார். கடைசியாக, இன்றைக்கு இந்தப் புளியந்தோப்பில் ராஜிபேச வருவதாகச் சொல்லி அனுப்பினார். நானும் சம்மதித்தேன். அவர் என்ன ராஜி பேசப் போகிறார் என்று எனக்குத் தெரியாது. ஆனால் அந்த மனுஷர் மூன்று வருஷமாக என்னைக் காக்க வைத்து இழுத்தடித்ததற்



குப் பழி வாங்க வேண்டாமா? அவரும் நானும் இங்கே ராஜிப் பேச்சுப் பேசிக் கொண்டிருக்கும் போது, நீ அந்தப் பெண்ணைக் கைப்பற்றி இங்கே கொண்டு வந்து என்னிடம் ஒப்புவித்தால் அவருக்கு நல்ல புத்தி புகட்டினதாயிருக்குமல்லவா? வீணில் இரத்தச் சேதம் ஏற்படாமல் தடுத்தபடியாகவும் இருக்கும்.''

''அப்படி இரத்தச் சேதம் ஏற்பட்டாலும் அது கள்ளனுடைய இரத்தமாயிருக்கட்டும் என்று உத்தேசமாக்கும்.

''அப்படியானால் உனக்கு இஷ்டமில்லையா? பயப்படாதே! மனத்தில் உள்ளதைத் தைரியமாய்ச் சொல்லி விடு.''

''நீங்கள் சொல்லுகிறபடி செய்து முடித்தால், எனக்கு என்ன லாபம்?''

''இன்று இராத்திரி மரகதவல்லியை இங்கே கொண்டு வந்து என்னிடம் ஒப்புவித்து விட்டாயானால், அப்புறம் என்னுடைய ஆட்கள் உன்னைத் தேட மாட்டார்கள். நானும் உன்னுடைய வழிக்கே வர மாட்டேன் ....''

''நீங்கள் சொல்லுகிற காரியத்தை நான் செய்யாவிட்டால்? ....''

''இன்றைக்கு இங்கிருந்து நீ பத்திரமாய்ப் போய்விடலாம். நாளை முதல் நீ என் விரோதி. என் ஆட்கள் உன்னைத் தேடுவார்கள். நீ எந்த மலைக் குகையிலோ அல்லது மேகமண்டலத்திலோ போய் ஒளிந்து கொண்டாலும் உன்னைப் பிடித்துப் போலீஸாரிடம் கொடுத்து விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன். இப்போது என்ன சொல்கிறாய்?''

கள்ளன் சற்று யோசனையில் ஆழ்ந்திருந்தான். பிறகு, ''ஆகட்டும், போய்ப் பார்க்கிறேன். ஆனால் தாங்கள் சொல்லும் காரியத்தில் வெற்றி பெறுவேனோ, என்னமோ?'' என்றான்.

''நீ வெற்றி பெறாவிட்டால், நான் இருக்கிறேன். என் ஆட்கள் இருக்கிறார்கள். அதைப் பற்றிக் கவலையில்லை'' என்றான் தில்லை முத்துத் தேவன்.

காதறாக் கள்ளன் குதிரைமேல் தாவி ஏறி விரைவாகச் சென்றான்.



''கவர்னர்தான் பேட்டி கொடுத்து முடிச்சுட்டாங்களே..... அப்புறம் நிருபர்கள் ஏன் இன்னும் போகாமல் இருக்கிறாங்க?''

''தேர்தல் எப்போது என்ற கேள்விக்குப் பொறுத்திருந்து பாருங்கன்னு பதில் கவர்னர் சொன்னாராம்!''

— கடுவை கோபால்சாமி.

3.

இந்தச் சமயத்தில் கோழிகூவாப் புத்தூர் கருடாசலத் தேவரைப் பற்றி உங்களுக்குச் சொல்ல வேண்டும். கருடாசலத் தேவர் ஒரு காலத்தில் தில்லை முத்துத் தேவரைக் காட்டிலும் செல்வாக்கு வாய்ந்தவராயிருந்தார். ஆனால் வயது காரணமாக அவர் உடம்பு தளர்ந்து போயிருந்தது. அதைக் காட்டிலும் அவருடைய வாழ்க்கையில் சில துயர சம்பவங்கள் ஏற்பட்டு அவர் மனம் இடிந்து போயிருந்தது. முக்கியமாக ஐந்தாறு வருஷத்துக்கு முன்னால் அவருக்கும் அவருடைய ஏக புதல்வனுக்கும் சண்டை உண்டாகி, பையன் வீட்டை விட்டு வெளியேற நேர்ந்தது. அற்ப விஷயத்தில் மனவேற்றுமை உண்டாயிற்று. தந்தை, மகன் இருவரும் பிடிவாதக்காரர்களாதலால் அந்த வேற்றுமை முற்றி விபரீதமாகி விட்டது. குடி மயக்கத்திலிருந்த கருடாசலத் தேவர் தாம் சொன்னபடி மகன் ஏதோ செய்யவில்லை என்பதற்காக நாலு பேர் இருக்கும் போது அவன் மீது செருப்பை விட்டெறிந்தார். ரோஷக்காரனாகிய மகன் ''இனி உங்கள் முகத்தில் விழிப்பதில்லை'' என்று சொல்லி விட்டு அரண்மனையிலிருந்து கிளம்பிப் போனவன்தான்; திரும்பி வரவே இல்லை.

அருமை மகன் வீட்டை விட்டுப் போன சில நாளைக்கெல்லாம் தேவரின் மனைவி அந்த ஏக்கத்தினாலேயே படுத்த படுக்கையாகி உயிர் துறந்தாள். ஆனால் தேவர் வஜ்ரத்தைப் போன்ற இதயம் படைத்தவர். அவர் கொஞ்சமாவது மகனுக்காக வருத்தப்பட்டதாகத் தெரியவில்லை. மனையாள் இறந்ததைப் பொருட்படுத்தியதாகவும் தெரியவில்லை. எங்கேயோ மதுரைக்குப் பக்கத்திலே இருந்த அவருடைய தங்கையையும் தங்கை மகளையும் அழைத்துக் கொண்டு வந்து வீட்டிலே வைத்துக் கொண்டார். இரண்டு வருஷத்துக்கு முன்னால் தங்கையும் காலமாகி விட்டாள். பிறகு மரகதவல்லி மட்டும் கருடாசலத் தேவரின் பிரம்மாண்டமான அரண்மனையில் தன்னந் தனியாக வசித்து வந்தாள். அவளைக் கலியாணம் செய்து கொள்ள விரும்புவதாகப் பாளையக்காரன் கேட்டதற்கு ''முடியாது'' என்று கருடாசலத் தேவர் பதில் சொல்லி விட்டார். நயத்தினால் முடியாததைப் பயத்தினால் சாதித்துக் கொள்ள எண்ணித் தில்லை முத்துத் தேவன் ஆள் படைகளைத் திரட்டிக் கொண்டு வந்தான். உயிர்ச் சேதம் வேண்டாம் என்று கருதினால் புளியந்தோப்பில்

வந்து தம்மைச் சந்திக்கும்படி சொல்லியனுப்பினான். கிழவரை இவ்விதம் தருவித்து விட்டு, அந்தச் சமயத்தில் கள்ளனை அனுப்பிப் பெண்ணைக் கொண்டு வந்து விடச் செய்யலாம் என்று தில்லைமுத்துத் தேவன் யுக்தி செய்திருந்தான்.

அந்த யுக்தி அநேகமாகப் பலித்து விட்டது என்றே சொல்லலாம். ஏனெனில், கருடாசலத் தேவர் தம்முடைய முக்கியமான ஆட்களையெல்லாம் தம் துணைக்கு அழைத்துக் கொண்டு தில்லைமுத்துத் தேவனைச் சந்திப்பதற்கு வந்து சேர்ந்தார். கள்ளன் புறப்பட்டுப் போன சிறிது நேரத்துக்கெல்லாம் அவர் வந்து விட்டார். தில்லைமுத்துத் தேவன் அவரைத் தக்கபடி வரவேற்று மரியாதை செய்தான். முக்கியமான விஷயத்துக்கு வருவதற்கு முன்னால் ஊரை வளைத்து என்னவெல்லாமோ பேசிக் கொண்டிருந்தான். கள்ளன் தான் ஒப்புக் கொண்ட காரியத்தைச் செய்வதற்குப் போதிய சாவகாசம் கொடுக்க வேண்டும் என்பது பாளையக்காரனின் எண்ணம்.

4

கள்ளன் போன இடத்தில் என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள உங்களுக்கும் ஆவலாய்த்தானிருக்கும். அதை இப்போது சொல்கிறேன். கோழிகூவாப் புத்தூர் அரண்மனையிலிருந்து கருடாசலத்தேவர் ஆள்களுடன் புறப்பட்டுப் போய் விட்டார் என்பதைக் கள்ளன் வழியிலேயே தெரிந்து கொண்டான். ஆகையால் ஊருக்குள்ளே தைரியமாக நுழைந்து போனான். வருகிறவன் காதறாக் கள்ளன் என்பதை ஊரார் அறிந்து கொண்டு பயந்து நடுங்கியவர்களாய் அவரவர்களின் வீட்டுக்குள் புகுந்து கதவைச் சாத்திக் கொண்டார்கள். அரண்மனையின் வாசலில் வந்ததும் கள்ளன் தன்னிடமிருந்த துப்பாக்கியை எடுத்து ஒரு வெடி தீர்த்தான். ஏற்கெனவே பயந்திருந்த காவற்காரர்கள் சிதறி ஓடிப் போனார்கள். முன் வாசல் திறந்திருந்தபடியால் திருடன் அரண்மனை முன் கட்டில் பிரவேசித்தான். ஆனால் இதற்குள் விஷயம் தெரிந்து கொண்டு வேலைக்கார ஸ்திரீகள் பின்கட்டுக் கதவுகளைத் தாள் போட்டார்கள். கள்ளன் முற்றத்தின் நடுவில் நின்று இன்னொரு வெடி தீர்த்தான். கதவுகளையெல்லாம் உடனே திறக்கும்படியும் இல்லாவிட்டால் அதாஹதம் செய்து விடுவேன் என்றும் கள்ளன் சத்தமிட்டுக் கூவினான். அரண்மனைப் பின்கட்டின் மச்சிலிருந்து மரகதவல்லியும் அவளுடைய தாதிப் பெண்களும் இந்தக் காட்சியைப் பார்த்தார்கள். அச் சமயம் கள்ளன் தன் முகத்தின் கீழ்ப் பாதியை மறைத்துக் கட்டியிருந்த துணி தற்செயலாக அவிழ்ந்து விழுந்தது. அப்போது அவனுடைய முகம் பூரண சந்திரனுடைய நிலா வெளிச்சத்தில் நன்றாய்த் தெரிந்தது. தாதிப் பெண்களில் ஒருத்தி ஆச்சரியத்தினால் அலறினாள். மரகதவல்லியின் காதில் ஏதோ சொன்னாள். கள்ளனுடைய அட்டகாசம் இதற்குள்ளே இன்னும் அதிகமாயிற்று. அரண்மனைப் பின்கட்டின் கதவு சீக்கிரத்தில் திறக்கப் பட்டது. மரகதவல்லியும் தாதிப் பெண்ணும் நிலா முற்றத்துக்கு வந்தார்கள்.

கள்ளன் இதற்குள்ளே தன் முகத்தில் பாதியை மூடி மறைத்துக் கொண்டான். அதனால் அவனுடைய உருவம் கோரமாகத் தானிருந்தது. ஆயினும் மரகதவல்லி சிறிதும் அஞ்சவில்லை.

"கள்ளா! ஏன் இப்படிக் கூச்சல் போட்டுத் தடபுடல் செய்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

நிலவின் வெளிச்சத்தில் மரகதவல்லியின் முகத்தைப் பார்த்த கள்ளன் ஒரு நிமிஷம் தயங்கி நின்றான். அவனுடைய இரும்பு மனமும் இளகிப் போய் விட்டது.



''என்னங்க இது, பாங்க் பூரா வராட்டியா அடுக்கி இருக்கு?''

''இதெல்லாம் மாட்டுலோன் வாங்கிக் கட்டாதவங்களிடம் ஜப்தி செய்தது சார்!''

— கீழை. அ. கதிர்வேல்.

மறுபடியும் மரகதவல்லி "இங்கே ஆண் பிள்ளைகள் யாரும் இல்லை. பெண் பிள்ளைகள்தான் இருக்கிறோம். இங்கே வந்து ஏன் ஆர்ப்பாட்டம் செய்கிறாய்? உனக்கு என்ன வேண்டும்? நகை நட்டுக்கள் வேண்டுமானால் கழற்றித் தந்து விடுகிறோம். வாங்கிக் கொண்டு பேசாமல் போய் விடு!" என்றாள்.

கள்ளனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. தயங்கித் தயங்கி, "எனக்கு உன் நகை நட்டுக்கள் வேண்டாம்!'' என்றான்.

''வேறு என்ன உனக்கு வேண்டும்?'' என்று மரகதவல்லி கேட்டாள்.

''நீ என்னோடு புறப்பட்டு வர வேண்டும்!'' என்றான் கள்ளன்.

''இப்போதே வர வேண்டுமா? அல்லது மாமா வருகிற வரையில் காத்திருக்க முடியுமா? மாமா வந்ததும் அவரிடம் சொல்லிக்

கொண்டு புறப்பட்டால் எனக்கு நிம்மதியாயிருக்கும்.''

கள்ளனுக்கு மேலும் திகைப்பு உண்டாயிற்று. ''என்னை ஏய்க்கவா பார்க்கிறாய்? அதெல்லாம் முடியாது. உடனே புறப்பட்டு வருகிறாயா, அல்லது உன்னைப் பலாத்காரமாய்த் தூக்கிக் கொண்டு போகட்டுமா?'' என்று கர்ஜித்தான்.

''உனக்கு அவ்வளவு கஷ்டம் வேண்டாம். நானே இதோ வருகிறேன்!'' என்று சொல்லி விட்டு மரகதவல்லி அவனுக்கு முன்னால் நடந்தாள்.

கள்ளன் அடங்காத வியப்புடன் அவளை அழைத்துக் கொண்டு அரண்மனை வாசலுக்குச் சென்று முதலில் அவளைக் குதிரை மேல் ஏற்றினான். பிறகு தானும் தாவி ஏறிக் கொண்டான். குதிரையை மெதுவாகவே செலுத்தினான்.

மரகதவல்லி அவ்வளவு சுலபமாகத் தன்னுடன் வரச் சம்மதித்தது கள்ளனுக்குச் சொல்ல முடியாத ஆச்சரியத்தை உண்டாக்கியிருந்தது. ஆகையால் கோழி கூவாப் புத்தூரைக் குதிரை தாண்டிச் சென்றதும், ''பெண்ணே! என்னுடன் வருவதற்கு உனக்குப் பயமாயில்லையா?'' என்று கேட்டான்.

''எனக்கு என்ன பயம்? நீ 'காதறாக் கள்ளன்' என்பது எனக்குத் தெரியும். பெண்களுக்கு எவ்விதத் தீங்கும் நீ செய்ய மாட்டாய் என்று உலகமெல்லாம் தெரிந்தது தானே? ஆகையால் எனக்கு என்ன பயம்?'' என்றாள் மரகதவல்லி.

''உலகம் சொல்லுவதை நம்பியா நீ கள்ளனோடு புறப்பட்டாய்?''

''உலகம் வேறுவிதமாய்ச் சொல்லியிருந்தாலும் நான் கிளம்பித்தானிருப்பேன். ஐந்து வருஷமாகக் கூண்டிலே கிளி அடைபட்டிருப்பது போல் அடைபட்டிருந்தேன். அப்படி அடைபட்டுக் கிடப்பதைக் காட்டிலும் கள்ளனோடு வெளியே புறப்படுவது கூட நல்லதுதான் என்று தோன்றியது.''



''உன்னை உன் மாமா அவ்வளவு கஷ்டப் படுத்தினாரா, என்ன?''

''ஐயோ! பாவம்! அவர் என்னை ஒரு கஷ்டமும் படுத்தவில்லை. என் பேரில் உயிராயிருந்தார். ஆனாலும் எனக்கு வீட்டிலேயே அடைபட்டுக் கிடந்தது கஷ்டமாகத் தானிருந்தது. அந்தக் கடும் சிறைச்சாலையிலிருந்து என்னை நீ விடுதலை செய்தாயே! உனக்கு நான் எந்த விதத்தில் கைம்மாறு செய்யப் போகிறேன்?''

''அசட்டுப் பெண்ணே! அதிகமாகச் சந்தோஷப்பட்டு விடாதே......!''

''ஏன்? நான் அதிக சந்தோஷப்படுவது உனக்குப் பொறுக்கவில்லையா?''

''உன்னை நான் எதற்காக அழைத்துப் போகிறேன் என்பதைத் தெரிந்து கொண்டு அப்புறம் சந்தோஷப்படு! பாளையக்காரர் தில்லைமுத்துத் தேவர் என்று கேள்விப் பட்டிருக்கிறாயா?''

''ஆமாம்; அந்த மனுசர் என்னைக் கலியாணம் கட்டிக் கொள்ள ஆசைப்படுவதாகக் கேள்விப்பட்டேன்.''

''அவரிடம் உன்னைக் கொண்டு போய் ஒப்புவிக்கப் போகிறேன். அதற்காகவே அழைத்துக் கொண்டு போகிறேன்.''

''அட பாவி!''

''ஏன் என்னைத் திட்டுகிறாய்? தில்லை முத்துத் தேவர் ரொம்பப் பெரிய மனிதர். அவரிடமுள்ள பணத்துக்குக் கணக்கே இடையாது. அவருடைய எல்லைக்குள் அவர்தான் ராஜா. நீ அவரைக் கலியாணம் செய்து கொண்டால் ராணி மாதிரி இருக்கலாம்.''

''ச்சீ! நான் எதற்கு ராணியாகிறேன்? ஐயையோ! இப்படியா செய்யப் போகிறாய்? இது தெரிந்திருந்தால் நான் வந்திருக்கவே மாட்டேனே?''

''அதனாலேதான் அவசரப்பட்டுச் சந்தோஷப்படாதே என்று சொன்னேன். இப்போது தெரிகிறதா?''

''கூண்டிலிருந்த கிளியை விடுதலை செய்து காட்டுப் பூனையிடமா ஒப்புவிக்கப் போகிறாய்? இந்த மாதிரி பாவம் யாராவது செய்வார்களா?''

''பாவமாவது? புண்ணியமாவது? பெரிய பாவத்தை நான் தடுத்தேன். நான் வந்து உன்னை இப்படி அழைத்துப் போகாவிட்டால் தில்லைமுத்துத் தேவர் இருநூறு ஆட்களோடு வந்திருப்பார். உன் மாமாவின் உயிருக்கு ஆபத்து வந்திருக்கும். ஊரே பற்றி எரிந்திருக்கும். எத்தனையோ பேர் செத்துப் போயிருப்பார்கள். இவ்வளவு பாவங்களையும் தடுப்பதற்காகவே நான் வந்தேன்.''

''ஐயையோ! என்னாலேயா இவ்வளவு சங்கடம்? மாமா சாயங்காலம் ஐம்பது ஆள்களோடு புறப்பட்டுப் போனாரே? எங்கே போனாரோ, தெரியவில்லையே?''

''எனக்குத் தெரியும் சொல்லுகிறேன்.

அதோ கொஞ்ச தூரத்தில் ஒரு பொத்தை தெரிகிறது அல்லவா?''

''ஆமாம். அதோ தெரிகிறது.''

''அதற்குப் பக்கத்தில் ஒரு புளியந்தோப்பு இருக்கிறது. அதில் தில்லைமுத்துத் தேவரும் அவருடைய ஆட்கள் இருநூறு பேரும் தண்டு இறங்கியிருக்கிறார்கள். உன்னுடைய மாமா அங்கேதான் போயிருக்கிறார்.''

''ஐயோ! அங்கே இரண்டு கட்சிக்கும் சண்டை வந்திருக்குமோ?''

''வந்திராது. சண்டை வராமல் தடுப்பதற்காகத்தான் நான் உன்னைக் கொண்டு வருவதாகச் சொல்லி விட்டு வந்தேன். தில்லைமுத்துத் தேவர் இப்போது உன் மாமாவுடன் சமாதானமாகப் பேசிக் கொண்டிருப்பார்.''

''என்னை அங்கே கொண்டு போய் விட்டால்? அப்புறம் என்ன ஆகும்?''

''நீ பாளையக்காரரைக் கலியாணம் செய்து கொள்ளச் சம்மதிப்பதாகச் சொன்னால், சண்டை ஒன்றும் வராது. உன் மாமாவும் ஒத்துக் கொள்வார்.''

''உயிர் போனாலும் நான் அதற்குச் சம்மதிக்க மாட்டேன். நான் சம்மதித்தாலும் என் மாமா சம்மதிக்க மாட்டார். சம்மதிக்கிறவராயிருந்தால் இத்தனை நாள் காத்திருப்பாரா?''

''பெண்ணே! உன் மாமாவின் உத்தேசந்தான் என்ன? உன்னை எப்போதும் கன்னிப் பெண்ணாகவே அவருடைய வீட்டில் வைத்திருக்க உத்தேசமா?''

''இல்லை, இல்லை. அவருக்கு ஒரு பைத்தியக்கார ஆசை இருந்தது.''

''அது என்ன பைத்தியக்கார ஆசை?''

''மாமாவின் மகன் ஆறு வருஷத்துக்கு முன்னால் கோபித்துக் கொண்டு ஓடிப் போய் விட்டானாம். அவன் என்றாவது ஒரு நாளைக்குத் திரும்பி வருவான். அவனுக்கு என்னை கட்டிக் கொடுக்கலாம் என்று அவருக்கு ஆசை! கள்ளா! இது பைத்தியக்கார ஆசைதானே?''

கள்ளன் இதற்குப் பதில் சொல்லாமல் மௌனமாயிருந்தான். குதிரை இரண்டு பேரைத் தாங்கிக் கொண்டு சாலையில் மெள்ள மெள்ளப் போய்க் கொண்டிருந்தது. கள்ளனும் அதை விரட்டவில்லை. அவனுடைய மனம் யோசனையில் ஆழ்ந்திருந்தது. புளியந்தோப்பும் நெருங்கி வந்து கொண்டிருந்தது.

சிறிது நேரத்துக்கெல்லாம் மரகதவல்லி ''கள்ளா! என்ன யோசனை செய்கிறாய்?'' என்று கேட்டாள்.

''என்னமோ யோசனை செய்கிறேன்; உனக்கென்ன அதைப் பற்றி?''

''அதைப் பற்றி எனக்கு ஒன்றுமில்லை. ஆனால் உன்னை ஒரு கேள்வி கேட்க ஆசைப்படுகிறேன்'' என்றாள்.

''என்ன கேள்வி? சீக்கிரம் கேட்டுத் தொலை! அதோ புளியந்தோப்பு நெருங்கி வந்து விட்டது.''



''அந்த ஆபரேஷன் பேஷண்ட்டுக்கு ஏழெட்டு பேர் ரத்தம் கொடுக்க முன் வந்திருக்காங்களே எல்லோரும் உறவா?''

''இல்லை. அவருக்குக் கடன் கொடுத்திருக்கவங்க!''

— கீழை.அ.கதிர்வேல்.

''கள்ளா! நீ ஒன்றும் உனக்காகத் திருடுவதில்லை, மற்ற ஏழை எளியவர்களுக்காகவே திருடுகிறாய் என்று உலகத்தார் சொல்லுகிறார்களே, அது உண்மையா?''

''உண்மையாயிருக்கலாம். அதற்கு என்ன இப்போது?''

''நல்லது; இன்றைக்கு ஒரு நாள் உனக்காகத் திருடலாமே?''

''எனக்காக என்னத்தைத் திருடச் சொல்கிறாய்? நீ நகை நட்டுக்கூட அதிகமாகப் போட்டுக் கொள்ளவில்லையே? எல்லாவற்றையும் கழற்றி வைத்துவிட்டு வந்திருக்கிறாயே?''

''சே! உன்னைப் போய் நகை திருடும்படி நான் சொல்லுவேனோ?''

''பெண்ணே வேறு என்னத்தைத் திருடும்படி சொல்கிறாய்?''

''தெரியவில்லையா உனக்கு? உன்னைப் பற்றி என்ன வெல்லாமோ பிரமாதமாகச் சொல்லுகிறார்களே? இவ்வளவு புத்திக் கட்டையான மனுசனா நீ? அந்தப் பாளையக்காரனுக்கு நாமத்தைப் போட்டு விட்டு நீயே என்னைத் திருடிக் கொண்டு போகும்படிதான் சொல்லுகிறேன்!''

இந்த வார்த்தைகளைக் கேட்ட கள்ளனுடைய உடம்பு சிலிர்த்தது. குதிரையை ஒரு நிமிஷம் நிறுத்திவிட்டு, முன்னால் பார்த்து உட்கார்ந்திருந்த மரகதவல்லியைத் தன்னைப் பார்க்கும்படி திருப்பி உட்கார வைத்துக் கொண்டான். இருபுறமும் மரமடர்ந்த அச்சாலையில் அந்த இடத்தில் இடைவெளியிருந்தது. வெண்ணிலவின் வெளிச்சம் அவளுடைய முகத்தில் பட்டது. கள்ளன் தன் முகமூடியையும் நீக்கிக் கொண்டான். மரகதவல்லியின் முகத்தைத் தூக்கிப் பிடித்துக் கனிவுடன் உற்றுப் பார்த்தான்.




"மனைவிக்கு பயப்படறது கூட கஷ்டமா தெரியலை!"

"பின்னே எதுதான் கஷ்டமா இருக்கு?"

பயந்துக்கிட்டே பயப்படாத மாதிரி நடிக்கிறதுதான்!"

— கீழை. அ. கதிர்வேல்.



"உங்க டீவியில் என்ன கோளாறு?"

"முந்தியெல்லாம் வெறும் அலை அலையாய்த் தெரிஞ்சது!"

"சரி இப்போ....?"

"கடலும் சேர்ந்து தெரியுதுங்க!"

— கடுவை கோபால்சாமி.

"பெண்ணே! நீ சொல்வது இன்னதென்று தெரியாமல் சொல்லுகிறாய். நான் வீடுவாசல் இல்லாதவன். மலையிலும் காட்டிலும் அலைந்து திரிகிறவன். அரண்மனையில் சுகமாக வாழ்ந்த நீ என்னோடு எப்படி வாழ்வாய்?" என்றான்.

"கள்ளா! உன்னுடைய அரண்மனையே எல்லாவற்றிலும் பெரிய அரண்மனை. பூமியே உன் வீட்டின் தரை; ஆகாசமே கூரை. இதைக் காட்டிலும் பெரிய மாளிகை ஏது? அந்தப் பாளையக்காரனை ஒரு தடவை நான் பார்த்திருக்கிறேன். அன்று இராத்திரியெல்லாம் தூக்கத்தில் பயந்து உளறினேன். அவனிடம் என்னை நீ ஒப்புவித்தால் உடனே உயிரை விடுவேன். ஸ்திரீஹத்தி தோஷம் உனக்கு வரும். உன்னோடு வெளிக் கிளம்பிய பிறகு மாமா வீட்டுக்குத் திரும்பிப் போகவும் முடியாது. கள்ளா! என்னை உன்னோடு அழைத்துக் கொண்டு போ!"

"பெண்ணே! என்னைப் போலீஸாரிடம் பிடித்துக் கொடுக்க ஏற்கெனவே பலர் பிரயத்தனம் செய்கிறார்கள். இன்று முதல் பாளையக்காரரின் இருநூறு ஆட்களும் நம்மை வேட்டையாடுவார்கள்."

"வேட்டை நாய்களைக் கண்டால் நான் கொஞ்சங் கூடப் பயப்படுவதில்லை கள்ளா! உனக்குப் பயமா?" என்று கேட்டாள் அந்த மறக்குலத்து மங்கை.

5

அங்கே புளியந்தோப்பில் பாளையக்காரன் இல்லைமுத்துத் தேவனும் ஜமீன்தார் கருடாசலத் தேவரும் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்கள். இல்லைமுத்துத் தேவன் கருடாசலத் தேவர் மீது பல புகார்களைச் சொன்னான். தன்னை அவமதித்துப் பேசியதாகவும் தன்னுடைய கிராமங்களில் ஆக்கிரமித்ததாகவும் தன்னுடைய மலைகளில் மாடுகளை விட்டு மேய்த்ததாகவும் குற்றம் கூறினான். அதற்கெல்லாம் கருடாசலத் தேவர் சமாதானம் கூறினார். இப்படிக் கொஞ்ச நேரம் போக்கிய பிறகு, பாளையக்காரன் கடைசியாக முக்கியமான விஷயத்துக்கு வந்தான். "உம்முடைய மருமகள் மரகதவல்லியை எனக்குக் கல்யாணம் செய்து கொடுங்கள். மற்றக் குற்றங்களையெல்லாம் மறந்து விடுகிறேன்!" என்றான். "என்னுடைய ஜமீனில் பாதி கேட்டாலும் கேள்; கொடுத்து விடுகிறேன்; என் மருமகளை மட்டும் கேட்காதே!" என்றார் கருடாசலத் தேவர். "அது என்ன பிடிவாதம்? யாருக்காவது கட்டிக் கொடுக்க வேண்டியதுதானே! என்னைக் காட்டிலும் நல்ல மாப்பிள்ளை உமக்கு எங்கே கிடைக்கும்?" என்று இல்லை முத்துத்

தேவன் பச்சையாகக் கேட்டான். "எனக்கோ வயதாகி விட்டது. வேறு யாரும் உற்றார் உறவினர் இல்லை. அவனும் இல்லாவிட்டால் வீடு பாழடைந்து போகும்" என்றார் ஜமீன்தார். "அதெல்லாம் வெறும் சால்ஜாப்பு! நான் ஒப்புக் கொள்ள மாட்டேன்" என்றான் பாளையக்காரன். கடைசியாக ஜமீன்தார் தம் மனத்தில் உள்ளதை வெளியிட்டுச் சொன்னார். "ஒரு நாளைக்கு என் மகன் திரும்பி வருவான் என்று ஆசை வைத்திருக்கிறேன். மரகதவல்லியை அவனுக்கென்று உத்தேசித்திருக்கிறேன்!" என்றார். பாளையக்காரன் சிரித்தான். "ஆறு வருஷமாக வராதவன் இனிமேல் வரப்போகிறானா? உமக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. அதற்காக ஒரு பெண்ணின் வாழ்க்கையைப் பாழாக்கப் பார்க்கிறீர். அதை நான் ஒப்புக் கொள்ள முடியாது!" என்றான். இப்படி ஜமீன்தாருடன் வாக்குவாதம் செய்து கொண்டிருந்த போதே பாளையக்காரனுடைய காது கவனமாக உற்றுக் கேட்டுக் கொண்டிருந்தது. சாலையில் குதிரை வரும் சப்தம் கேட்கிறதா என்றுதான். ஏறக்குறைய சந்திரன் உச்சி வானத்துக்கு வந்தபோது சற்றுத் தூரத்தில் குதிரைக் காலடிச் சப்தம் கேட்டது. உடனே, பாளையக்காரன் எழுந்தான். "நீர் ஏதோ உமது மருமகளைப் பத்திரமாய் அரண்மனையில் வைத்துப் பாதுகாப்பதாக எண்ணிக் கொண்டிருக்கிறீர். நீர் இல்லாத சமயம் என்ன நடக்கிறதோ, என்னமோ! வயது வந்த பெண் எத்தனை நாளைக்கு உம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்டிருப்பாள்?" என்று சொன்னான். இதைக் கேட்டதும் ஜமீன்தாருக்கு இரத்தம் கொதித்துக் கண்கள் சிவந்தன. "நீயும் ஒரு மனிதனா? உன்னிடம் பேச வந்தேனே?" என்று எழுந்தார். "கொஞ்சம் பொறுத்துக் கொள்ளும். குதிரையில் யார் வருகிறதென்று பார்த்து விட்டு வருகிறேன்!" என்று சொல்லிவிட்டுத் தில்லை முத்துத் தேவன் சாலையை நெருங்கிச் சென்றான். அவனுடைய ஆட்கள் ஜமீன்தாரைச் சூழ்ந்து கொண்டு, அவர் போவதைத் தடுக்கும் பாவனையாக நின்றார்கள். "இப்படிப்பட்ட இக்கட்டில் நாமே வலிய வந்து அகப்பட்டுக் கொண்டோமே? இதிலிருந்து எப்படித் தப்பித்துக் கொள்வது?" என்று கருடாசலத்தேவர் யோசனையில் ஆழ்ந்தார்.

தில்லைமுத்துத் தேவன் சாலையருகிலே போய் நின்றான். குதிரை புளியந்தோப்பை நெருங்கி வேகமாக வந்து கொண்டிருந்தது. ரொம்பக் கூர்மையான காது உள்ளவனாதலால், வருகிற குதிரை மேல் இரண்டு பேர் ஏறி வருகிறார்கள் என்பதைக் குதிரைக் காலடிச் சத்தத்திலிருந்து தெரிந்து கொண்டான். அவனுடைய உற்சாகம் எல்லை கடந்தது. தன்னுடைய மனோரதம் நிறைவேறி விட்டதென்றே நம்பினான். இவ்வளவு கலபமாக, உயிர்ச் சேதம் எதுவு

பெண் பார்க்கும் வீட்டில் —

"டிபன் சாப்பிட்டு முடிவு சொல்றோம்னு சொன்னீங்களே.... இப்போ சொல்லுங்க....."

"பஜ்ஜிலே மட்டும் உப்பு கொஞ்சம் ஜாஸ்தி!

— கடுவை கோபால்சாமி.



மாப்பிள்ளைக்குப் பெரிய வீடு இருக்குன்னு பெண்ணைக் கொடுத்தது தப்பாப் போச்சு!"

"ஏன்?"

"இப்போதான் தெரியுது. ஒரு சின்ன வீடும் இருக்குங்கிறது!"


— சிறை. அ. கதிர்வேல்.



மின்றி, காரியம் கைகூடி விட்டதை எண்ணிச் சந்தோஷப்பட்டான்.

குதிரை மேலும் நெருங்கி வந்தது. இதோ வந்துவிட்டது! அதன் மேலே இரண்டு பேர் இருப்பதும் நிலா வெளிச்சத்தில் தெரிந்தது. அவன் நின்ற இடத்துக்கு நேரேயும் வந்தது. அதற்கு அப்பாலும் சென்றது. தான் நிற்பதைக் கவனியாமல் போவதாக நினைத்து, "நில்! நில்!" என்று கத்தினான். ஆனால் குதிரை நிற்கவில்லை. புளியந்தோப்பையும் அதையடுத்து நின்ற பொத்தையையும் தாண்டி மின்னல் மின்னும் நேரத்தில் இராம பிரானுடைய கோதண்டத்திலிருந்து கிளம்பிய பாணத்தைப் போலக் குதிரை போயே போய்விட்டது!

அப்புறந்தான் தில்லை முத்துத் தேவன் விழித்துக் கொண்டான். கள்ளன் தன்னை ஏமாற்றிப் பெண்ணை அடித்துக் கொண்டு போகிறான் என்று தெரிந்து கொண்டான். உடனே, "கொண்டு வா குதிரையை!" என்று அலறினான். அவனுடைய குதிரை வந்ததும் தாவி ஏறிக் கொண்டான். "மடை




யர்களே! என்னோடு வாருங்கள்!'' என்று கத்தினான். மற்றும் ஏழு குதிரைகளிலும் ஆட்கள் ஏறிக் கொண்டார்கள்.

முன்னால் சென்ற கள்ளனுடைய குதிரையைத் தொடர்ந்து பாளையக்காரனுடைய எட்டுக் குதிரைகளும் பாய்ந்து சென்றன. குதிரைகளுக்குப் பின்னால் காலாட்களும் தலை தெறிக்க ஓடினார்கள்.

ஜமீன்தார் கருடாசலத் தேவருக்கு இது ஒன்றும் புரியவில்லை. சற்று நேரம் திகைத்து நின்றுவிட்டுத் தம்முடைய ஆட்களைத் திரட்டிச் சேர்த்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினார்.

6

சூர தறாக் கள்ளனுடைய குதிரை வாயு வேக, மனோவேகமாகப் பறந்து சென்றது.



ஆயினும் அக்குதிரை ஏற்கெனவே வெகு தூரம் பிரயாணம் செய்திருந்ததல்லவா? அதோடு இரண்டு பேரைத் தன் முதுகில் சுமந்து கொண்டிருந்தது. ஆகையால் பின்னால் வந்த குதிரைகள் அதைக் கொஞ்சம் கொஞ்சமாக நெருங்கி வந்து கொண்டிருந்தன.

கடைசியாகக் கள்ளனுடைய குதிரை இந்த ஆற்றங்கரைக்கு வந்து சேர்ந்தது. ஆறு இன்று போல அன்றில்லை. வெள்ளம் இரு கரையும் தொட்டுக் கொண்டு போயிற்று. ஆறு அடி உயரமுள்ள ஆளுக்கும் நிலை கொள்ளாது. பிரவாகத்தின் வேகமோ அதிகம். திரும்பிப் போகவோ மார்க்கமில்லை. ஆற்றங்கரையில் தயங்கி நின்றால் அகப்பட்டுக் கொள்வது நிச்சயம். வேறு வழியில்லாமல் கள்ளன் குதிரையைத் துணிந்து ஆற்றில் இறக்கினான். குதிரை அவர்கள் இரண்டு பேரையும் சுமந்து ஆற்றில் இறங்கி வெள்ளத்தின் வேகத்தைச் சமாளித்துக் கொண்டு நீந்திச் சென்றது. கள்ளனிடம் அந்த வாயில்லாப் பிராணி அவ்வளவு விசுவாசம் வைத்திருந்தது. எப்படியோ தட்டுத்தடுமாறி அக்கரையை நெருங்கியது. ஆனால் துறையில் போய்ச் சேராமல் கொஞ்சம் அப்பால் சென்று விட்டது. அங்கே கரை செங்குத்தாயிருந்தது. குதிரை முன்னங்காலை வைத்துத் தாவி ஏற ஆனமட்டும் முயன்றது; முடியவில்லை. கள்ளன் பார்த்தான். மறு கரையிலோ பாளையக்காரனுடைய குதிரைகள் வந்து விட்டன. பாளையக்காரன் அதட்டும் குரல் கேட்டது. சில குதிரைகள் ஆற்றில் இறங்கி விட்டன. இந்த நிலைமையில் கள்ளன் ஒரு யோசனை செய்தான். கடவுள் அருளும் இருந்தது. மரகதவல்லியைத் தன் இரு கைகளினாலும் தூக்கிக் கரையில் விட்டெறிந்தான். அவள் கரையில் பத்திரமாய் விழுந்ததைப் பார்த்ததும் தான் குதிரை மீதிருந்து குதித்தான். இரண்டு எட்டில் நீந்திக் கரையேறினான். பிறகு, குதிரையையும் கரை சேர்ப்பதற்காகத் திரும்பிப் பார்த்தான்! ஐயோ! பாவம்! அந்தக் குதிரையின் சக்தி அத்துடன் தீர்ந்து போய் விட்டது. எஜமானனை அக்கரை சேர்த்ததும் அது வெள்ளத்தோடு போராடும் ஊக்கத்தையும் இழந்து விட்டது. வெள்ளம் அதை அடித்துக் கொண்டு போய் விட்டது. கள்ளனுடைய நெஞ்சு பிளந்துவிடும் போலிருந்தது. ஆயினும் குதிரைக்காகத் துக்கப்பட்டுக் கொண்டு அங்கே நின்றால் தன் காதலியையும் இழக்க நேரிடும். அதற்குள்ளே மரகதவல்லியும் எழுந்து நின்று அவனருகில் வந்தாள். இருவரும் கைகோத்துக் கொண்டு அங்கிருந்து விரைவாகச் சென்றார்கள். ஆற்றங்கரையை அடுத்திருந்த காட்டுக்குள் புகுந்து அந்த சமயத்துக்குத் தப்பித்துக் கொண்டார்கள்.

பாளையக்காரனுடைய குதிரைகளில் ஒன்றாவது பாதி ஆறு கூடத் தாண்டவில்லை. நாலு குதிரைகள் ஆற்றோடு போய் விட்டன. கள்ளனைப் பிடிக்க முடியாமல்



நீதிபதி: "நீ செய்த இந்தத் திருட்டைப் பற்றி ஏதேனும் கூற விரும்புகிறாயா?"

திருடன்: "சொல்லிக்கிற மாதிரி இது ஒண்ணும் பெரிய திருட்டு இல்லீங்க!"

— கீழை. அ. கதிர்வேல்.

நிருபர்: "அடுத்த அமைச்சரவை மாற்றம் எப்போது?"

பிரதமர்: "இந்த வாரத்தில் கிடையாது!"

— கடுவை கோபால்சாமி.



பாளையக்காரன் ஏமாந்து திரும்பினான்.

ஜமீன்தார் கருடாசலத் தேவர் தம் அரண்மனைக்குத் திரும்பிப் போனதும் அங்கே மருமகள் இல்லை என்பதை அறிந்தார். ஆனால் அவளை அழைத்துக் கொண்டு போனவன் தம்முடைய மகன்தான் என்று தாதிப் பெண்கள் மூலமாக அறிந்து திருப்தி அடைந்தார்.

அதோ, ஆற்றுக்கு அக்கரையிலே உள்ள ஊருக்கு 'பரி உயிர் காத்த நல்லூர்' என்ற பெயர் வந்த காரணம் என்னவென்று இப்போது தெரிகிறதல்லவா?

பின்னுரை

மேற்கண்ட கதையை அந்தப் பெரியவர் சொல்லி முடித்தார். இதற்குள்ளே எங்கள் மோட்டார் வண்டியைப் பத்து முப்பது ஆட்கள் வந்து சேர்ந்து தள்ளி அக்கரையிலே கொண்டு சேர்த்திருந்தார்கள். என்னை வரும்படி சொல்லி மோட்டாரின் குழல் அலறியது.

"கதை ரொம்ப நன்றாயிருக்கிறது" என்று சொல்லிக் கிழவனாரிடம் ஐந்து ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்தேன்.

அவர் அதை வாங்கி மடியில் செருகிக் கொண்டே, "கதை இல்லை, ஐயா! உண்மையாக நடந்தது!" என்றார்.

"உண்மையாக நடந்ததென்று எப்படிச் சொல்கிறீர்? நீர் பார்த்தீரா?" என்று கேட்டேன்.

"ஆமாம்! பார்க்கத்தான் பார்த்தேன்" என்று கிழவர் சொன்னதும் எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"ஓகோ! கள்ளன் தப்பித்துக் கொண்டு போவதற்கு நீர் ஒருவேளை உதவி செய்தீரோ?" என்று கேட்டேன்.

பெரியவர் தம்முடைய மடியில் வைத்திருந்த ஒரு பழைய நைந்த காகிதத்தை எடுத்துப் "பாருங்கள்!" என்று சொல்லிக் கொடுத்தார். அதில் இங்கிலீஷில் பின்வருமாறு 'டைப்' எழுத்தில் எழுதிச் சர்க்கார் முத்திரையும் பதித்திருந்தது:

"காது அறுக்காக் கள்ளன் என்று இந்தப் பக்கங்களில் பிரசித்தி பெற்றிருந்த முத்து விஜய சேதுத் தேவன் என்னும் பக்காத் திருடனைப் பிடிப்பதற்கு உளவு கூறி ஒத்தாசை செய்த கொள்ளை முத்துத்தேவனுக்கு இந்தப் போலீஸ் சர்ட்டிபிகேட்டும் மாதம் பதினைந்து ரூபாய் வீதம் ஜீவிய காலம் வரையில் பென்ஷனும் காருண்ய பிரிட்டிஷ் துரைத்தனத்தாரால் அளிக்கப்படுகிறது.

இதைப் படித்ததும் அந்தப் பெரியவரைக் கொஞ்சம் அருவருப்புடன் பார்த்து விட்டு எழுந்தேன்.

"அந்தப் புண்ணியவானுக்கு நான் எவ்வளவோ நன்றிக்கடன்பட்டிருக்கிறேன். சென்ற ஐம்பது வருஷமாக அவனால் என்னுடைய குடும்பம் பிழைத்து வருகிறது. அவனுக்கு நான் ஏழு தலைமுறையும் கடமைப்பட்டவன்!" என்று சொன்னார் பெரியவர்.

வேகமாக ஆற்றைக் கடந்து அக்கரையில் நின்ற மோட்டாரைப் பிடித்து ஏறிக் கொண்டேன். அந்தக் கிழவனார் இருந்த இடத்திலிருந்து சீக்கிரத்தில் போனால் போதும் என்று இருந்தது.

பாரத தேசம் குடியரசுப் பதவியை அடையப் போகும் நாள் நெருங்கும் சமயத்தில் எனக்கு அந்தக் கிழவனார் சொன்ன கதை ஞாபகத்துக்கு வருகிறது. காதறாக் கள்ளனைக் காட்டிக் கொடுத்து நன்மையடைந்த அக்கிழவனார் அந்தக் கள்ளனை இன்று வரை நினைத்துக் கொண்டு அவனிடம் நன்றியோடாவது இருக்கிறார்.

பாரதத்தின் மக்களாகிய நாம் நமக்கு அன்னிய ஆட்சியிலிருந்து விடுதலையளித்த காந்தி மகாத்மாவை யமனிடம் காட்டிக் கொடுத்து விட்டோம்! அவரை நன்றியோடு ஞாபகம் வைத்துக் கொண்டாவது இருக்கப் போகிறோமா?

வாய் துர்நாற்றத்தைத் தடுத்திடுவீர்.
பற்சிதைவை எதிர்த்திடுவீர்.



கோல்கேட்டின் பாதுகாப்பு வளையத்தைப் பெற்றிடுவீர்!

வாய் துர்நாற்றம் இக்கட்டான சூழ்நிலையை உருவாக்குகிறது. சுவாசம் சுத்தமாக, புத்துணர்ச்சியுடன் திகழவும், பற்கள் உறுதியாக, ஆரோக்கியமாக விளங்கவும் முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்யுங்கள். அதுவே கோல்கேட்டின் பாதுகாப்பு வளையம்.



பற்களுக்கிடையே சிக்கிக் கொள்ளும் உணவுத் துணுக்குகளில் பாக்டீரியா வளர்ந்து, வாய் துர்நாற்றத்திற்கும் பற்சிதைவுக்கும் காரணமாகிறது.



கோல்கேட்டின் ஒப்பற்ற செயலாற்றல் மிக்க நுரை ஆழமாகச் சென்று, துர்நாற்றம் உண்டாக்கும் உணவுத் துணுக்குகளையும், பற்சிதைவை ஏற் படுத்தும் பாக்டீரியாவையும் நீக்குகிறது.



முறையாக கோல்கேட் கொண்டு பிரஷ் செய்வதனால், சுத்தமான, புத்துணர்ச்சிமிகு சுவாசத்தையும், உறுதிமிகு, ஆரோக்கிய மான பற்களையும் பெற்றிடுவீர்.

கோல்கேட்டின் புத்துணர்ச்சி தரும் பெப்பர்மென்ட் சுவை உங்களுக்கு விருப்பமானது!

Rediffusion/CP/5707 f TM

STERED No. M 4352
tered as a Newspaper in Sri Lanka

